நு: 14320

001
Dnaam
L/PR

001
மானா
SL/PR

கப: 14320



முதலிலிட்டுக் கொண்டே, "இந்தச் சோமத்திற்கு என்ன பெயர்?" என்றும் அந்த ஆண்களிடம்.

முதியவருக்கும் பாலாஜி புரியவில்லை. அதே நேரத்தில் அந்தப் பக்கம் போன தாயொன்று கறுத்த நூலுடையவரை குறிகாட்டி பார்த்துவிட்டு மீண்டும் கொய் கொய் என்று குரல் எழுப்பி முன்னால் ஓடிக்கொண்டு சிரமம் இருந்தது.

"டேய், சொல்லு பேர், இந்த மிஸ்டேஜுக்கு என்ன பெயர்?"

முதியவரே கேள்வியைப் புரித்துக்கொண்டது போலிருந்தது.

குறிகாட்டி பார்த்து தான் ஏன் விரைந்து முன்னால் ஓடுகிறோம் என்பதை நினைத்துக்கொண்டு 'நிக்கு' என்றார் தன் தாய் மொழி சென்னத்தில்.

"ஓ! நிகொழுப்பு. தன் தேனியை பெயர்தான்" என்று குறிகாட்டி கட்டிவிட்டான் சிறுவன் தன் தாயைக் கூட்டத்தை நோக்கி.

அந்த பேரனும் மேல்நோக்கு இப்படியொரு செய்தி பரப்பதாக— "நிகொழுப்பு என்ற இடத்தில் நாதர் படை விரைவு நிலைக் கழித்து உதவித் தளவாடங்கள் என்பதை அறிந்தருளுங்கள்"

—இச்சம்பவத்திற்கு ஆதாரமானவை இவை—

1. சென்னாரண்டில் பங்கேற்பதும் பேரறிவாளர் ஏட்டுச் சோசட் பெருமன்றமென்ற கட்சியை.
2. பாரதம் அதாரிலில் தகவல்.
3. வாழ்ப்பாணம் — மன்றம் முத்தலைவர்களுக்கு ஆண்டிய சரித்திரக் குறிப்புகள்.

—தொகுதி வழங்கி உதவியவர்— திரு. தனிஷ் பெரியவர்



படித்துவிட்டு மறக்க முயலுங்கள்

முடியாவிட்டால் பத்திரப்படுத்துங்கள்

குமுதம்

யாழ் முக்கின் தொகுத்தளிக்கும் திரட்டு

உங்கள் உணவில் நஞ்சு கலந்திருக்கிறது!

இப்பொழுது நாம் உண்ணும் உணவை நிபுணர்கள் அச்சமாக இருக்கிறது.

உணவுகளில் கண்டறிப்படும் கலப்படத்தினால் நஞ்சை கண்ணும் நீங்கள் நம் வாழ்வைக் கட்டுப்படுத்தும் பதிலாக நாம் உண்ணும் உணவு முறைக்கும் மாற்றம் செய்கிறது.

★ அரசாங்க மாவில் 42 சதவிகிதம் எதிர்ப்பு பார்த்ததில் 37% இருந்தது கோதுமை சோதனைகளில், 3% கலப்படப் பொருட்கள், 2% மட்டும் உண்மையானவை.

★ பரிசோதனை செய்யப்பட்ட சர்பத்தில் பரிசோதனை 27ஐ பரிசோதித்தில் வேறும் பரவாதி மைகளே மாறுபட்டிருந்தது புரிந்தது.

★ தென் மாநில சோல்லப்பட்ட 42 சதவிகிதம் 33% நெய் மாதிரிகளில் இல்லை. ஒரு சாயல் நெய் தரம் குறைந்த காரணப்பட்டது. இரண்டு விட்ட தரமானவை.

★ தேங்காய் எண்ணெய் மாதிரி 13 சதவிகிதம் ஒரு சதவிகிதம் தேங்காய் எண்ணெயாக இருந்தது. மற்றவை பிற மிகத் தரம் குறைந்த கலப்பட எண்ணெய்.

★ ஐம்பது சதவிகிதத்திற்கு மேற்பட்ட தூளாகிய வகைகளிலும், அதாவது சதவிகிதத்திற்கு அதிகமான மிளகு பொடியிலும் வேறு சேர்க்கை இருப்பது சோதனையில்.

—இவையனைத்தும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிபுணர்களால் ஆராய்ந்து கண்ட உண்மைகள்.

பருவம் 16 அல்ல! ● இராவணனுக்குத் நஞ்சுகன் யார்? படிப்பு ஒ ● குடும்பத் ஒய்வு நேர வேலை கட்டுப்பாடும்

இது ஓர் உலகளாவிய தகவல் மஞ்சரீ
மத நல்லிணக்கம் நூலின் அடிநாதம்

முதல் பாகம் 1994-04-27ல் வெளியானது.
ஜூனில் மறுபதிப்பு (தலா 1200 பிரதிகள்)
இது இரண்டாவது பாகம் (1200 பிரதிகள்)

ஆசிரியர் – 'மானா' (எம் .எம்.) மக்கீன் (இலங்கை)

உரிமை – பீ 54-1 / 2 தேசிய வீடமைப்புத் திட்டம்
கொழும்பு-10ல் வாழும் அப்பாவி
மனிதப்பறவைகள் மூவருக்கு

வித்து வழங்கியவர் – தொழில் அதிபர்
ஹாஸிம் உமர் ஹாஜி (இலங்கை)

முதல் அச்சுப் பதிவு – 1995-பெப்ரவரி-27

நிறைவேற்றியவர் – கலைஞர் ஆர். ராஜசேகரன் (இலங்கை)

கணனி எழுத்தமைப்பு – 'இக்ரா' இஸ்பஹான் (இலங்கை)
'டொப் பிரின்ட்' கொழும்பு-12

முகப்பு அட்டை அமைப்பு – 'ராமு' – சென்னை

வர்த்தகம் அச்சுப் பதிவும் – மணிமேகலை பிரசுரம் – சென்னை

பக்க அமைப்பும் ஒளியச்சுகளும் – எம்.டி.எம். ஹுஸைன்(ஹுனா) (இலங்கை)
எஸ்.டி.சாமி (")
எம். ஐ. லியாகத் அலி (")

வெளியீடு – நவமணி பதிப்பகம்
12, 2வது மெயின் ரோடு, சி.ஐ.டி. காலனி
சென்னை – 600 004

ஒரு தோன்றாத் துணை தொடர்ந்த வண்ணம்....



'லைட் ரீடிங்' என ஒரு நூல் வருமென கனவிலும் கண்டதில்லை. அதுவும் இரண்டாவதாகவும் ஒரு தொகுதி ஓராண்டுக்குள் வருமென நினைத்தவனல்லன்.

அனைத்தையுமே ஒரு 'தோன்றாத் துணை' நினைக்கின்றார். நிறை வேற்றுகின்றார். அவரே அன்பர் ஹாஸிம் உமர் ஹாஜி.

என் எழுத்துக்கள் தங்கு தடையின்றி சிறக்க, தமிழகத்தில் போய் நிற்க, அனைத்திற்குமே பின்னணி புரவலர் ஹாஸிம் உமர் ஹாஜி.

இன்றைய காலகட்டத்தில் இறைவனது 'கலம்' (எழுதுகோல்) வைத்திருப்போருக்கெல்லாம் ஒரு 'தோன்றாத் துணை' இருந்தேயாக வேண்டும்.

நான் அதிர்ஷ்டக்காரன். வாழ்நாள் முழுவதற்கும் ஒரு ஹாஸிம் உமர் ஹாஜி. அதுவும் ஒரு மேமன் சமூகத்தவர்.

அவருக்கு நன்றிக்கடன் செலுத்த வழியுமில்லை, வகையுமில்லை.

ஆனால் அவரது நல்வாழ்விற்கு இறைகிருபை விரும்பி கையேந்தி நிற்க இயலும். என்னுடன் என் 'நிழ'லும், சிறகடிக்கும் இரு சிறு 'குருவிகள்' அஞ்சானாவும், அஸீமும் இணைவர்.

இது, ஒரு நோன்பு அதிகாலைப் பொழுதில் (ஸஹர்) நிகழ்கிறது. எழுத்தால் பதிப்பதும் அப்படியொரு நேரத்திலேயே.

தாங்கள் எளிமை, இனிமையாய், எல்லோரது துயர் துடைப்பவராய் என்றென்றும் திகழ்க.

நல்லதே நினைப்போம். நல்லதே செய்வோம்.

மானா மக்கீன்

21.02.1995
(20ம் நோன்புப் பிறை)

முகப்பில்...

'லைட் ரீடிங்' முகப்பில் ரஜினி காந்த், கூடவே சரண்ராஜ். அத்தோடு ஒரு கடல் கன்னி ஒய்யாரமாக. அவர்கள் மூவரையும் ஏற்றிச் செல்ல அதிசய ஓட்டகமொன்று. ரஜினியும் சரண்ராஜும் அளிக்கும் தோற்றம் இலேசு மாசானதல்ல. (படம்: பாட்சா - படப்பிடிப்பு : நேசனல் செல்லையா)

அது சொல்லும் செய்தி தமிழகத்திற்கும் இலங்கைக்கும் மிக மிக முக்கியமானது. புரிய முடிந்தோருக்கு பாராட்டுக்கள். புரியாதோருக்கு இந்த நூலின் பல பக்கங்களில் தகவல் இருக்கிறது.

கடல் கன்னி - ? ஓ! அவளைப் பற்றி கனக்கிலடங்கா (கட்டுக்) கதைகள். எதைச் சொல்வேன்.? எதை விடுவேன்? என்றாலும் இவள் கைப்பட்ட நாள், ஆண்டு, இடம் மட்டும் தருகிறேன்.

7.4.1973, வளைகுடாக் கடல்.

என் எழுத்துக்கின் நீண்ட நாள் அபிமானி **துபாய் ஏ.எல்.எம். நயீம்** அன்பளிப்பு. அவரே அதிசய ஒட்டகத்தை அனுப்பி யுள்ளார்.

திமில்கள் பல கொண்ட ஒட்டக இனமும் பாலைவனப் பிரதேசத்தில் உள்ளது என்பதற்கு ஆதாரம் இந்தப் படம்.

சரி. பின்பக்கப் பிரமுகர்களையும் அறிமுகப்படுத்தி விடுகி றேன்.



பின்னட்டை பிரகாசம்

1994-04-23, 24ம் திகதிகளில் இலங்கை நூல் வெளியீட்டுச் சரித்திரத்தில் ஒரு பெரும் நிகழ்வு.

'லைட் ரீடிங்' கின் முதல் தொகுதி வெளியீடு. கண்டி மாநகரிலும், கொழும்பிலுமாக இரு நாட்கள் அடுத்தடுத்து நடந்தன. 'ராணி' ஆசிரியர் 'இதழியல் வேந்தர்' திருமிகு. அ.மா.சாமி பிரதம அதிதி. முதற்பிரதியை கண்டிப் பகுதி கல்ஹின்ன ஊரின் இளைய தலைமுறை **அல்ஹாஜ் முஸ்லிம் ஸலாஹுத்தீன் ஜே.பி.** பத்தாயிரம் ரூபா கொடுத்துப் பெற்றார். மறுநாள் கொழும்பிலும் அதிசயம் நடந்தது. திருச்சி மாநகர் ஃபெமினா ஓட்டல் நிறுவனரும், இலங்கையின் மதிப்புமிகு தொழிலதிபருமான எனது நெடுங்கால நண்பர் **அல்ஹாஜ் எஸ்.எம்.எம். முகம்மது இப்ராஹீம்** அவர்கள் தன் பங்குக்குப் பத்தாயிரம் ரூபாய் பண முடிப்பு வழங்கி சாதனை படைத்தார்.

இப்படி இலங்கையில் இவர்கள் இருவரும் இரு நாட்கள் தொடர்ந்து வழங்கிய பணமுடிப்பு போன்றோ அல்லது அதிகமாகவோ. வறுயாரும் இதுவரை செய்ததாக நான் அறிந்த வரையி தெரியாதது.

ஆனால் பேருவளைப் பகுதி தர்ஹா நகரில் கவிஞர் ஏ. இக்பால் வெளியிட்ட நூலுக்கு இதே பங்களிப்பை ஓர் அன்பர் செய்துள்ளதாக இக்பாலின் தகவல். அடுத்த தொகுப்பில் அவர் பெயரும் படமும்.

இப்பொழுது நான் ஆசைப்படுவது

ஒரு முஸ்லிம் ஸலாஹுத்தீன், ஒரு முஹம்மது இப்ராஹீம் இருவரது முன்மாதிரிகளையும் 'முறியடித்து' (பண முடிப்பைப் பெரிதாக்கி) மற்றொரு எழுத்தாளருக்கு யாராவது வழங்க வேண்டும். வரட்டும் அந்தக் காலமும்.

இது சம்பந்தமான ஓர் அடிக்குறிப்பும் உண்டு. அது வேதனையானது. நெஞ்சத்தைப் பிழிவது. தமிழ் நூல் வெளியீட்டில் நடந்த இப்படியொரு அற்புதமான நிகழ்வை அப்படியே இலங்கைத் தமிழ் இதழ்கள் இருட்டடிப்பு செய்தன.

அதிலும் ஓர் இதழுக்கு என் பங்களிப்பு 35 ஆண்டுகள்.

அதே நேரத்தில் சிங்கள, ஆங்கில இதழ்கள் அதிசயமாக வர்ணித்து வாழ்த்துக்கள் வழங்கின. தமிழக 'ராணி'யும் தன் பங்குக்குத் தகவல் வெளியிட்டது. இந்த நிகழ்வை அபியானிகளே விமர்சிக்க வேண்டும்.

விஷேட நன்றி பகர்வு:

எனது ஆசான் 'கல்கண்டு' தமிழ்வாணன் உருவாக்கிய சென்னை மணிமேகலைப் பிரசுர நிறுவனத்திற்குச் சேரும். அதன் நிர்வாகி திருமிகு ரவி தமிழ்வாணன் அவர்கள் அவர்தம் சகாக்களுடன் ஓவியர் 'ராமு' வின் ஒத்தாசையோடு இந்த அழகிய அட்டையை ஆர்வத்துடன் அச்சிட்டுத் தந்தார்கள். இதயத்தில் அவர்கள்.



எல்லோருக்கும் என்றும் நாடுவோம் நல்லதை!

மனித சமுதாயம் அனைத்தும் ஒரே இனத்தினர்தாம் என்பது திருக்குர்ஆனின் தத்துவம்.

இன்று பல நூறு கோடி மக்களாகப் பல்கிப் பெருகியுள்ள மனிதர்கள், ஆரம்பத்திலே ஆண்டவனால் படைக்கப்பட்ட ஆதம் - ஹவ்வா தம்பதிகளின் அடி வழிப் பிறந்தவர்கள்தாம் என்பது பெரும்பாலான மதங்கள் ஏற்றுக் கொண்ட தத்துவம்.

என்றாலும் மனிதர்களின் தோற்றத்திலே மாற்றங்கள் ஏன்? வண்ணத்திலே வித்தியாசங்கள் ஏற்பட்டது எப்படி? பேசும் மொழிகளிலே மாறுபாடு தோன்றியது எவ்வாறு?

இவையெல்லாம் சுவையான ஆராய்ச்சிகளுக்கு வழி வகுக்கும்.

நீங்கள் ஒருவர் மற்றொருவரை அறிந்து கொள்வதற்கான இறைவனின் அடையாளங்களா இவை இருக்கின்றன எனக் கூறுகிறது திருக்குர்ஆன்.

பிரிந்து பட்டுப்போன மக்களை ஒன்று சேர்க்கத் தோன்றியதுதான் சமயம். ஆனால் அந்தச் சமயங்கள் பேராலேயே சச்சரவுகளை வளர்த்துக் கொண்டிருக்கிறோம் நாம்.

'மஸ்ஹப் நஹீ ஸிக்காத்தா
ஆபஸ் மென் பெய்ர் ரக்னா'

'ஒருவருக்கொருவர் குரோதம் கொள்ளுமாறு மதம் ஒரு போதும் சொல்லவில்லை" எனப் பாடுகிறார் அமரகவி இக்பால்.

இனபேதம், மொழிபேதம், வட்டார பேதம் இவை எல்லாம் மனிதர்களே ஏற்படுத்திக் கொண்ட தடுப்புச் வர்கள். இவற்றைத் தகர்த்தெறிந்து ஒரே இறைவனுடைய நம்பிக்கையின் அடிப்படையில் ஒருமைப்பாடு காண்பதே தீர்க்கதரிசிகளின் பணியாக இருந்திருக்கிறது.

இது 'சிராஜுல் மில்லத்' ஆ.கா. அப்துஸ் ஸமத் எம்.ஏ. அவர்களின் கருத்தோவியம்.

அன்னார் முதுமையிலும் இளமைத் துடிப்புமிகு இதழாசிரியராக - தினமும் தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கு ஒரு 'மணிச்சுடர்' வழங்கும் ஆசிரியப் பெருந்தகையாக!

என் கண்களில் இப்படி வளைய வந்தாலும் தமிழக முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் இன்றைய சூழ்நிலையில் அவரே ஒரு கலங்கரை விளக்கம்., ஒரு தோன்றாத் துணை., ஒரு தாணைத் தலைவர்., ஒரு சமுதாயக் காவலர்.

இன்று தமிழகத்தில் மதவெறியர்களுக்கும் முஸ்லிம் விரோத சக்திகளுக்கும் முகமூடிகள் இல்லாதிருப்பதற்குக் காரணம் அவர் முதல்வர் 'ஜெ'யுடன் புரிந்துணர்வு கொண்டு முஸ்லிம் சமுதாயத்தை வழிநடத்திச் செல்வதுதான்.

கடந்த டிசம்பர் 1994ல் எனக்கு, ஒன்றுக்கு மேற்பட்ட தடவை சென்னை-நீடூர்-தஞ்சை என நேர்முகம் பெற்ற பாக்கியம். ஒரு சமயம், மைலாப்பூர் நிவ் வூட்லண்ட்ஸில் எனக்கு நடந்த பாராட்டில் அழைப்புத் தவறிய நிலையிலும் அதனைப் பொருட்படுத்தாது என் குழந்தை மனதிற்காக ஓடிவந்து மேடையிலும் கூட இடந்தேடாமல் மக்களோடு மக்களாய் வீற்றிருக்க விழைந்த பெரிய மனதுக்குரிய 'சிராஜுல் மில்லத்' அவர்.

அதனையும்விட, 'மணிச்சுடரில் மானா மக்கீனுக்கும் இடம் ஒதுக்கிக் கொடுக்கக் காத்திருக்கிறேன்' என எனக்குப் பகிரங்க அழைப்பு விடுத்துவிட்டு அவர்கள் காத்துக் கொண்டிருக்க நானோ மடையன் இன்னும் இலங்கையிலேயே.

அவர்கள்தம் நல்ல திடகாத்திரத்திற்கும் வலிமை மிகுந்த எழுத்துக்களுக்கும் இறைகிருபை வேண்டி நிற்கிறேன்.

அமைதிப் புறாவே கூக்கிரலை



நன்றி : கதிரவன்.



கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

இங்கே அழகை அள்ளிக் கொட்டுவது மதுரை மீனாட்சியின் அழகிய கோபுரம். பல தடவை பார்த்திருந்தாலும் பார்க்கிற ஒவ்வொரு தடவையும் ஒரு புதுக் கோலமே.

எந்த மதமாக இருந்தால் என்ன, அவரவர் வழிபட ஓர் ஆலயம் அவசியம் என்பதை உணர்ந்துவரும் காலகட்டம் இது.

'ஆலயம்' என்றால் ஆன்மாக்கள் வந்தடையும் இடம் அதாவது, மனதை லயப்படுத்தி (ஒருமைப்படுத்தி) இறைவனிடம் மனதை ஒரு முகப்படுத்துவதாகும்.

மதுரை போன்ற ஒரு 'சந்திப்பில்' உயர்ந்த கோபுரங்களைக் கொண்ட கோயில்களை ஏன் கட்டினார்கள். ஆலயத்துக்கு வரமுடியாதவர்கள் தூரத்திலிருந்தோ - அல்லது போய்க்கொண்டிருக்கும்போதோ கோபுரத்தைத் தரிசித்தாலே போதும். கடவுள் தரிசன புண்ணியம் கோபுர தரிசனத்தில் உண்டென்பது ஐதீகம்... அதனாலேயே 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்ற பழமொழி தொன்று தொட்டு.

'தமிழி' தெரிந்ததுண்டா?

இப்படி யாரும் கேட்டால் விழிக்காதீர்கள். தெரியும் என்று தைரியமாகச் சொல்லுங்கள்.

ஏனென்றால் நமக்கு நன்கு தெரிந்த தமிழைத்தான் 'தமிழி' என்றார்கள் அந்தக் காலத்தில்.

எந்தக் காலத்தில்? சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்.

அப்பொழுது அதன் பெயர் தமிழிதான்!.

உலகில் இருந்த 22 மொழிகளில் 'தமிழி'யும் ஒன்று.

'தமிழி'யில் இலக்கணமும் (தொல்காப்பியம்) அரிய சொற்களுக்குப் பொருளுணர்த்தும் பணபாடும் வளர்ந்திருந்தன.



மக்கத்து கஃபாப் பள்ளிக்கே அந்தப் பெயர்.

திடுக்கிட்டு விட வேண்டாம். முஸ்லிம் அபிமானிகளே.

கஃபாப் பள்ளிக்கு ஹராம் என்று பெயரா?

'ஹராம்' என்ற சொல்லுக்கு 'தடுக்கப்பட்டது' என்றே கேள்விப்பட்டதனால் நமக்கு தயக்கம் வரும்.

ஆனால் அதற்கு 'கண்ணியத்திற்குரியது' என்றும் ஒரு பொருள் இருப்பதை மதரஸாக்கள் சொல்லிக் கொடுத்திருக்கின்றனவா? சொல்லிக் கொடுத்திருப்பவர்களுக் நன்றி சொல்வேன்.

கஃபாவாகிய இறைவனது இல்லத்தை 'மஸ்ஜிதுல் ஹரம்' என்று மட்டுமல்ல 'மஸ்ஜிதுல் ஹராம்' என்றும் தைரியமாகச் சொல்வேன் சொல்லுங்கள்.

ஏனென்றால் கஃபாவில் சில காரியங்கள் தடுக்கப்பட்டுள்ளன. அவற்றை அங்கே செய்ய முடியாது. ஆகவே 'மஸ்ஜிதுல் ஹராம்' பொருத்தமே.

அதன் தோற்றத்தை ஒரு புதுமையான முறையில், ஓர் அபூர்வமான கோணத்தில மக்கா சஞ்சியில் கண்டெடுத்தேன் 27,000 லிருந்து 28,000 வரையிற்ல் இறைவனை வணங்கக்கூடிய இந்த இடத்தில் 2 லட்சத்து 50 ஆயிரம் பேரைத் தொழச் செய்யும் அற்புத சாதனைக்கு அடிகோலினார்கள் 5 ஆண்டுகளுக்கு முன். இருபதாம் நூற்றாண்டில் விஸ்தீரணம் செய்யப்பட்ட உலக வணக்கஸ்தலங்களுள் இதற்கே முதலிடம் எனச் சரித்திரத்தில் பதிவு.

* * *

ஒரு டி.வி. அறிவுரை

தொலைக்காட்சிப் பெட்டிக்கு மிக அருகாமையிலிருந்து பார்க்கும் போது கண் அசைவுகள் அதிக அளவில் ஏற்படுகின்றன கண் சோர்வு, தலைவலி போன்ற நிலை உண்டாகின்றன.

எனவே, தொலைக்காட்சியைப் பார்க்கும் போது பெட்டியின் அளவிற்கேற்ப தூரத்திலிருந்து பார்ப்பது நல்லது., பொதுவாக 20, 22 அங்குல திரை உள்ள தொலைக்காட்சிப் பெட்டியை 10 அடி தூரத்திலிருந்து காண்பது நல்லது.

கடவுளை 'ராவுத்தர்' கோலத்தில் கண்ட மாணிக்கவாசகரும் அருணகிரிநாதரும்

என் அபிமானிகளை சரித்திர காலத்திற்கு அழைத்துச் செல்ல ஆவல். இளைய தலைமுறையினர் கொட்டாவி 'கிட்டாவி' விடாமல் என்னுடன் வரச் சம்மதிக்க வேண்டும்.

அது எட்டாம் நூற்றாண்டு. அப்படியென்றால் 1200 ஆண்டுகளுக்கு முன். முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் ஹிஜ்ரி ஆண்டின் முதல் நூற்றாண்டு.

அப்பொழுது தமிழகம் யார் கையில் இருந்தது என்று ஆராய்ந்தால் உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழச் சிற்றரசர்களது ஆட்சி. மதுரையைத் தலை நகராகக் கொண்டு பாண்டிய மன்னர்களது மாட்சி. சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் தேவைப்பட்ட ஆயிரமாயிரம் குதிரைகளை அறபுகள் வழங்க வேண்டிய சூழல். உறையூரிலிருந்தும் மதுரையிலும் அறபுக்களின் வருகை ஜேஜே என்று நாள்தோறும். அப்படி வந்த அனைவருமே முஸ்லிம்கள். அப்பொழுதே தமிழுடன் இஸ்லாம் இரண்டறக் கலந்தது.

எட்டாம் நூற்றாண்டிலும் அதன் பின் 9ம் நூற்றாண்டிலும் தமிழகத்தில் குடியும் குடித்தனமுமாகிவிட்ட முஸ்லிம்களுக்கு பல பல பட்டப் பெயர்கள் சூட்டப்பட்டன.

அறபுக்களும் அவர்கள் வழித்தோன்றல்கள் சோனகர் (யவனர்) என்றழைக்கப்பட்டனர். மரக் கலங்களில் அவர்கள் வந்து சென்ற தால் 'மரக்கலராயர்' (மரைக்காயர்) என்ற சிறப்பு அடைமொழி கொடுக்கப்பட்டது. குதிரை வணிகம் செய்ததால் 'ராவுத்தர்' என்ற பட்டமும் சூட்டப்பட்டது. இஸ்லாத்தைத் தழுவிய தமிழ் குடும் பங்கள் 'லெப்பைகள்' என அழைக்கப்பட்டன.

இந்தப் பின்னணியில் எட்டாம் நூற்றாண்டில் படைக்கப்பட்ட தமிழ் இலக்கியங்களைப் புரட்டினால் 'ராவுத்தர்' என்ற சொற்பிர யோகம் மிகவும் தாராளமாக உள்ளது.

முக்கியமாக சமயக் குரவர்களில் சிறப்பானவரான மாணிக்க வாசகப் பெருமான் அவருடைய புகழுக்குரிய திருவாசகத்தில் சிவ பெருமானை ஒரு முஸ்லிம் உடையில் 'ராவுத்தர்' வம்சத்த வராகக் குதிரை வியாபாரம் செய்பவராகக் கண்டு மகிழ்கிறார்.

வெள்ளைக் கலிங்கத் தார் வெண்திருமுண்டத்தார்.
பள்ளிக்குப் பாயத்தார் அன்னே என்னும்
பள்ளிக்குப் பாயத்தார் பாய்பரி மேல் கொண்டேன்
உள்ளம் கவர்வரால் அன்னே என்னும்'

இதனை என் இளைய தலைமுறை அபிமானிகளுக்கு விளங்கிக் கொள்ளக் கொஞ்சம் கஷ்டமாகவே இருக்கும். இருந்தாலும் அற்புத மான அமுதத் தமிழ். பிரித்துப் பிரித்துப் படித்தால் சுவையோ சுவை.

ஒரு முஸ்லிம் வெள்ளைக் குப்பாயம் அணிந்து தலையை மொட்டை அடித்தவராகக் காட்சியளிக்கிறார். காட்சியளிப்பதோடு பள்ளிவாசலுக்குச் செல்லும் இறைபக்தர். பாண்டிய மன்னர் முன் தோன்றவும், செய்கிறார். அவர் வேறு யாருமல்ல சிவபெருமான்.

திருவாசகத்தில் அன்னைபத்து 7ம் பாடல் இது. இத்தோடும் இந்த அதிசயம் முடியவில்லை.

அரிமர்த்தன பாண்டிய மன்னனது அமைச்சரான மாணிக்க வாசகர் மன்னனுக்காக குதிரை வாங்கத் திருப் பெருந்துறை என்ற இடத்திற்குச் சென்றதும் அங்கு நரிபரி ஆனதும் நான் எஸ்.எஸ்.ஸி. க்கு ஆசையோடு படித்த இலக்கியப் பாடநூலில் இருக்கிறது.

இந்த நிகழ்விலே மாணிக்க வாசகரை ஆட்கொள்ள வந்த சிவ பெருமான் எதிலே ஏறிவந்தார் என்பது சிறு பிள்ளையும் அறியும். அது வெள்ளைக் குதிரை. திருப்பெருந் துறைப்புராணம் இப்படிச் சொல்கிறது.

..... கோட்டமில்லா மாணிக்கவாசகர் முன் குதிரை ராவுத்தனாக நின்று.....

போதுமா? அன்று ராவுத்தர் என்ற சொல்லைக் கொண்டு முஸ் லிம்களின் ஒரு பகுதியினரை தமிழ் மக்கள் மரியாதையுடன் அழைத்து வந்தனர். இன்றும் தமிழக இராமநாதபுரப் பகுதிகளில் அவ்வாறே.

தங்களது தனிப் பெருங் கடவுளையே ராவுத்தர் கோலத்தில் கற்பனை செய்து ஒருமைப்பாடு கண்டிருக்கிறார்கள் அன்றைய தமிழர்.

அருணகிரிநாதரும் விட்டாரா? அவரும் மாணிக்க வாசகருக்குச் சளைத்தவரல்லர்.

அவருடைய புகழ்பெற்ற 'கந்தர்' 'அலங்காரமும்', 'சுந்தர் கலிவெண்பா' வும் கையில் வைத்திருப்பவர்கள் இந்த வரிகள் ஏன் அதில் உள்ளன எனச் சிந்தித்ததுண்டா?

என்ன பெயர்கள் என்போருக்கு இதோ

- ''சூர்க்கொன்ற ராவுத்தனே''
- 'மாமயிலேறும் ராவுத்தனே'

இவ்விரண்டும் முருகனைக் குறிப்பதை யாரெல்லாம் அறிந்திருக்கிறீர்கள்?

இவற்றிலிருந்து நான் தெரிந்து கொண்டது.-

சைவ, வைணவ சமயங்கள் அந்த ஏழாம் எட்டாம் நூற்றாண்டு களில் இஸ்லாம் மார்க்கத்தை எதிர்க்கவில்லை. முஸ்லிம்களுடன் மோத நினைக்கவில்லை. விரட்டியடிக்க முயற்சிக்கவில்லை என்பதே.

தாங்கள் நம்பிய இறைவனையே முஸ்லிம்களின் கோலத்தில் கண்ட அவர்களின் உள்ளம் இப்பொழுது யாரிடம் ஒளிந்து கொண்டிருக்கிறதோ என தேடிக் கொண்டிருக்கிறேன்.

நமது குடல் விந்தையானது

நமது உடலில் விந்தையான பகுதி குடல். அதில் ஐந்தில் நான்கு பகுதியை வெட்டி எறிந்து விட்டாலும் மீதியுள்ள பகுதி மட்டும் குடலின் முழு வேலையையும் செய்யும். அதுமட்டுமல்ல. வெட்டிய பகுதியும் பிறைவில் வளர்ந்து விடவும் செய்யும்.

இதற்கு முன் பார்த்திராத
பாரதி இங்கே!
இந்து-முஸ்லிம் ஒற்றுமை
அவன் இலட்சியம்!

விளக்கம்→→→

அந்த மகாகவி கடைசிப் பயணத்திற்கு மயானத்தில் கிடத்தப பட்டிருந்தபோது அவரைச் சுற்றி நின்றவர்கள் மொத்தமாக 20 பேரே!.

அது மட்டுமா? அவர் தமிழ் மக்கள் மத்தியில் 39 ஆண்டுகூட வாழவில்லை.

அந்த 39லும் பதினேழு ஆண்டுகளில் (1904-21) பயங்கர வறுமை வாழ்க்கைக்கும் மலைப்புக்குமுரிய எதிர்ப்புக்களிடை யேயும் தமது சாதனைகளைப் புரிந்து விட்டார்.

'அப்படிப்பட்டவரைப் பேச நேரும் பொழுதும் நினைக்க நேரம் வரும் பொழுதும் புதிய பார்வையில் பாருங்கள்' என்பது இலங்கையில் ராஜாங்க அமைச்சராக இருந்த திருமிகு தேவராஜ் அவர்களுடைய வேண்டுகோள். (இப்பொழுது அவர் எம்.பி.)

''எல்லைகள் தாண்டிய - கட்டுப்பாடுகளை மீறிய குதூகல உணர்வு அவனது பாடல்களில் உண்டு. அவை புதிய புதிய கோணங்களில் ஆராயப்பட வேண்டியவை. அதில் நாம் இதற்கு முன் காணாத பாரதியை நாம் காணக்கூடும்'' - என அவர் ஒரு பாரதி விழாவில் குறிப்பிட்டது அப்படியே ஒலி நாடாவாக நெஞ்சில் பதிந்து போயிருக்கிறது.

எப்படி இதற்கு முன் காணாத பாரதியை நாம் காண்பது?

ஒரு ரோமப்புதிர்

ஒரு மனிதனின் தலையில் சராசரியாக எத்தனை ரோமங்கள் இருக்கும்?

சீறி விழுவீர்கள். 'எண்ணித் தொலையாத காரியங்கள் எத்தனையோ செய்ய வேண்டியிருக்கும் பொழுது இதற்கா நேரம்?' என்பீர்கள். ஆனால் யாரோ எண்ணிக் கணக்குத் தந்திருக்கிறார்கள். ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் என்று! மனிதனின் தலையில்தான் இத்தனை ரோமம் என்று கணக்குப் பேசுகிறது. பெண்மணிகள் தலையைப் பற்றி பேச்சைக் காணோம்.

ஆக - இந்த ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரோமங்களிலும் மாத மொன்றுக்கு மூவாயிரம் ரோமங்கள் உதிர்வதாகவும் கணக்கிட்டிருப்பது இன்னொரு விந்தை.

அதொன்றும் கஷ்டமல்ல. வாக்கினிலே இனிமையும் நினைவும் நல்லதாக இருந்தால் வானமிங்கு தென்படும். உண்மைகள் பளிச்சி டும்.

சரியாக 75 ஆண்டுகள் பின்னோக்கிப் பறப்போம். அப்பொழுது மகாகவி சுப்பிரமணிய பாரதி 'சுதேச மித்திரன்' நாளிதழில் உதவி ஆசிரியர் (1920-21)

அச்சமயத்தில் ஒரு தடவை சென்னை மெரீனாக் கடற்கரையில், 'பெண்ணுரிமை'க்காக பேச்சையும் மூச்சையும் செலவழித்த திரு. வி. கல்யாண சுந்தர முதலியார் என்ற பேரறிஞரின் பேச்சு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 'பாட்டுப் பாடிக் கூட்டத்தைச் சேர்ப்பது அப்போதைய பழக்கம். பாட்டுக்காரரான பாரதியார் கணீரென பாடல்களைப் பாடிக் கொண்டிருந்த பொழுது அன்று கடற்கரையில் நிறைய முஸ்லிம் மக்கள் குடும்பம் குடும்பமாக வந்திருப்பதை உணர்ந்தார். ஏதோவொரு விசேஷத் திருநாளை முன்னிட்டு அவர்கள் வந்திருந்தனரேயொழிய திரு. வி.க.பேச்சுக்காக அல்ல.

மகாகவி உடனே உற்சாக மேலிட்டவராக உச்சிக் குரலெடுத்து அல்லாஹ்'வைப் புகழத் தொடங்கி விட்டார்

அன்று புது சகாப்தம் இன்று புதிய சமுதாயம்

அமெரிக்காவில் ஒஹியோ மாகாணத்தின் முக்கிய நகரமாக இருப்பது டெய்டன். விண்வெளிப் பயணத்தின் தொடக்கம் அங்கேதான் நடந்தது. ரைட் சகோதரர்கள் என்று வரலாறு நினைவு கூரும் ஆர்வில் ரைட், வில்பர் ரைட் என்ற இரு சகோதரர்கள் தாங்கள் உருவாக்கிய முதல் விமானத்தில் டெய்டன் நகரிலிருந்துதான் பறந்தனர். அன்றிலிருந்து அறிவியல் உலகில் ஒரு புதிய சகாப்தமே ஆரம்பமாகியது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரில்தான் இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் 'இஸ்லாமிக் சொஸைட்டி ஆஃப் நார்த் அமெரிக்கா' கடந்த 27 ஆண்டுகளாக இயங்கி ஒரு புதிய சமுதாயத்தை ஒவ்வொரு ஆண்டிலும் அதிகரித்த வண்ணம் உள்ளது.

★ *'அல்லா, அல்லா, அல்லா'*

★ *பல்லாயிரம் பல்லாயிரம் கோடி கோடி யண்டங்கள்*
எல்லாத் திசையிலுமோ ரெல்லையில்லா வெளிவானிலே
நில்லாது சுழன்றோட நியமஞ் செய்தருள் நாயகன்
சொல்லாலும் மனத்தாலுந் தொடரொணாத
பெருஞ்சோதி! (அல்லா அல்லா)

★ *கல்லாதவராயினும் உண்மை சொல்லாதவராயினும்*
பொல்லாதவராயினும் தவமில்லாதவராயினும்
நல்லாருரை நீதியின்படி நில்லாதவராயினும்
எல்லாரும் வந்தேத்து மளவில் யம பயங்கெடச்
செய்பவன் (அல்லா அல்லா)

- இப்பாடலைச் செவியுற்ற முஸ்லிம்கள் மட்டுமல்ல. இந்து மக்களும் உணர்ச்சி வசப்பட்டுப் போனார்கள்.

பிராமண குலத்து ஸ்ரீமான் சி. சுப்பிரமண்ய அய்யர் ஏக இறைவனை நினைத்துருகிப் பண் இசைத்ததைப் பார்த்த சென்னை, ஆயிரம் விளக்குப் பகுதிப் பெரியார் ஒருவர், தொடர்ந்தும் பாரதியார் 'இன ஒற்றுமை'ப் பாடல்களைப் பாடுவதாக இருந்தால் மிகவும் பிரகாசமான பெரிய பெட்ரோ மாக்ஸ் (கேஸ்) விளக்குகளை தன் செலவில் இலவசமாக ஏற்பாடு செய்வதாக வாக்குறுதி கொடுத்ததோடு அன்றைய திரு. வி. க. வின் கூட்டத்திற்கு சுமார் 15 காஸ் விளக்குகளுக்கு உடனடியாக ஆவன செய்துவிட்டார்.

இதுவே அக்கால இந்து-முஸ்லிம் சகோதரத்துவம்.

இந்த அல்லாஹ் பாடலை அன்றைய 1920 ஆம் ஆண்டு காலகட்டத்தில் பாரதியார், தான் ஏறிய பல மேடைகளிலும் முழங்கினார்.

இப்பாடலை பாரதி ஆராய்ச்சியாளர்களில் பலரும் அவரை வைத்து 'தீஸிஸ்' எழுதி முனைவர்களானோரும், புத்தகங்கள் போட்டோரும் அடியோடு மறந்தார்கள். (சரியாகவே கோடிட்டுக் காட்டினார் கௌரவ தேவராஜ் அமைச்சர் - 'இதற்கு முன் காணாத பாரதியை நாம் காண வேண்டும்' என்று.)

இந்த ஒரு பாடலை மட்டும் வைத்துக் கொண்டே ஒரு முழு நூலே எழுதி விடலாம். பாரதி ஆராய்ச்சியிலேயே மூழ்கிப்போன பெ.சு. மணி கூட கோட்டை விட்டாரே ?

மரம் நட்டால்தான் மாப்பிள்ளை



பாட்டுக்கொரு பாரதி முஸ்லிம்களின் ஏக இறைவனைப் பற்றிப் பாடியது ஒன்றே. ஆனால் உரைநடை பல. அங்குமிங்கும் சென்று உரைகள் நிகழ்த்தியது அனேகம். (முக்கியமாக திருநெல்வேலி மாவட்டத்தில் ரவண சமுத்திரம், பொட்டல் புதூர் போன்ற பல ஊர்கள்.)

என் முஸ்லிம் அபிமானிகள் மறக்காமல் நெஞ்சில் பதிக்க வேண்டிய ஒன்று - பாரதி வாழ்ந்தது மிகவும் குறைந்த காலம். அதில் 17 ஆண்டுகளை மட்டுமே தமிழ் சமுதாயத்திற்குத் தாரை வார்க்க முடிந்தது. அப்படியும் தமிழ் பேசுவோராகிய முஸ்லிம் மக்களை மறந்தானில்லை மகாகவி. அவன் உங்களில் ஒருவன்.

இதனை நான் எழுத உதவியவர்கள் மூவர்.

1. திருமிகு பி.பி. தேவராஜ் எம்.பி. (அவருடைய அந்த நாவல்நகர் உரை)

2. புதுச்சேரி, நாகூர் அரசினர் கலைக் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் பேரன்பர் மு.சாயபு மரைக்காயர் எம்.ஏ.பி.எஸ்சி. (அவர்களது ஆய்வு நூல்)

நீடூர் நெய்வாசல் மாணிக்கங்கள்

தஞ்சை - அது நெஞ்சை வருடும் மண்.

இந்த நூலின் பல இடங்களில் தஞ்சாவூர் மாவட்டப் பெருமை பற்றி சொல்லி மகிழ்ந்துள்ளேன்.

ஏன் அப்படி முக்கியத்துவம்? எனக்கும் எனதினிய இல்லத்திற்கும் 'நிழ'லாக நின்று துலங்கும் துணைவியின் தந்தை யாரும் அவர்தம் மூதாதையரும் அந்த மண்ணினைச் சார்ந்த வர்கள் என்பதாலா?

அப்படித்தான். அந்த மண்ணின் வாசனை நூறு ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையிலும்

தஞ்சை மாவட்டத் தமிழர்கள் இலங்கை மலையகத்தோடு இரண்டறக் கலந்தனரென்றால் முஸ்லிம்களோ கொழும்பு-பேரு வளை-காலி போன்ற இடங்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

இப்பொழுதும் அப்படியே. இன்று பேருவலை-கொழும்பு மாணிக்கக்கல் வர்த்தகர்களுடன் அவர்களுக்கு நெருக்கம் அதிகம்.

அத்தகைய தஞ்சைக்குள் நுழைந்து அதைப் பார்த்து இன்னும் வெகுவேகமாக கடந்து சென்றால் கும்பகோணம். அப்புறம் மயிலாடுதுறை. (அது ஒரு காலத்தில் மாயவரம்) அதற்குச்

சமீபமாக நீடூர் - நெய்வாசல். கொழும்பு காலி வீதியில் பேரு வளையில் சீனன்கோட்டை என்கிற ஊர் எப்படி உள்ளடங்கிப் போய் செல்வச் செழிப்போடு விளங்குகிறதோ அச்சொட்டாக அதே மாதிரி தோற்றம். (யார் யாரை காப்பி அடித்தார்கள் என்பது ஆய்வுக்குரியது!)

அந்த நீடூர் மனிதர்களுள் கணிசமானோர் ஜெய்ப்பூர் இலங்கை - ஹாங்காங் - பேங்காக் - சிங்கப்பூர் - ஜப்பான் என இரத்தினக் கற்களைச் சுமந்து கொண்டு வானத்திலேயே மிதந்து கொண்டிருப்பார்கள்.

அப்படி மிதந்தாலுங்கூட . அவர்களுக்கு இஸ்லாம் ஒரு கண்ணிலும் இன்பத் தமிழ் இன்னொரு கண்ணிலும்.

1994ம் டிசம்பர் இறுதிப் பொழுதுகளில் உலகத் தமிழ் மாநாட்டுக்காக தஞ்சாவூர் முனைந்து கொண்டிருந்த நேரத்தில் இந்த நீடூர்க்கிராமமும் சுறுசுறுப்படைந்திருந்தது. ***சட்டத்தரணியும் 'சிந்தனைச் சித்தருமான பெரியவர் ஏ.எம். ஸயீதும், காரைக்கால் பேராசிரியர் சாயபு மரைக்காரும்*** இருநாள் இஸ்லாமிய இலக்கிய மாநாட்டினை நடத்திட செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள். வெற்றியும் கண்டார்கள்.

தமிழக அரசு நடத்திய தஞ்சைத் தமிழ் மாநாடு பாராட்டுக்களை யும் கௌரவங்களையும், நூல் வெளியீடுகளையும் நடத்துவதற்கு முன்பே இந்தக் கிராமத்து இலக்கிய மாநாட்டில் பலர் (இலங்கை யர் உட்பட) பாராட்டப் பெற்றனர். அதிசயிக்க வேண்டிய வகையில் நூல்கள் இருபது வெளியிடப்பட்டன. இருபதுக்கும் இருபதினாயிரம் கொடுத்து நீடூர் முன்னாள் பஞ்சாயத்து தலைவர் பெரியவர் ***டி.எஸ்.ஆர். அப்துல் மஜீத்*** அவர்கள் பெற்றுக் கொண்ட நிகழ்ச்சியும் நடந்தது.

இதற்கு முன்புங்கூட அன்னார் அப்படியான காரியம் செய்ததுண்டு. நீடூர் பொறியியலாளர் ***அல்ஹாஜ் பி.எஸ்.ஆர். அகமத்*** அவர்களது ஆக்கமான 'அல்லாஹ்வின் விருந்தி னர்கள்' ஆக்கத்தையும் 30 ஆயிரம் கொடுத்துப் பெற்றார்.

இப்படி, தமிழ்-இஸ்லாமியத் தொண்டுக்கு உறுதுணை நிற்ப தில் அப்துல் மஜீத் 'இளைஞர்' காட்டும் முன்மாதிரியை அவரது இரத்தத்துப் பிள்ளைக் கனியமுதுகளான ***நஜீமுத்தீன் - ஹுமாயூன்*** (பாங்கொக் தமிழ்ப்பண்பாட்டுக் கழகச் செயலர்) ***அய்யூப்*** ('நம்ம ஊரு செய்தி' ஆசிரியர்) - ***ஜமீல்*** -சிந்தனைச் சிற்பி' ***அப்துல் பாரி*** (சிங்கப்பூர் தமிழ் வளர்ச்சிக் கழகம்) - ***சலாஹுத்தீன்*** அனைவருமே பின்பற்றி உலகளாவிய ரீதியில் செயல்படுகின்றனர். ***(அப்துல்பாரி*** அவர்களது ***'பெற்றோர்***

மாணாக்கர் கையேடு' என்ற நூல் உலகத் தமிழ் மாநாட்டுக்கு வந்திருந்த அனைத்து ஆய்வாளர்கள் கரங்களிலும் தவழ்ந்து கொண்டிருந்தது என்றால் அவரது தமிழ்ப்பணியை எளிதாக எடைபோட்டு விடலாம்.)

இவர்களைப் போல இதே நீடூரில் அருமையான இரு சகோதரர்கள் **ஏ. ஜலாலுத்தீன், ஏ. ரபியுத்தீன்.** தலைமையார் அமைதிக்கொரு மனிதர். தம்பியோ நேர் எதிர் (என்னையே உரித்தார்ப் போல)

அன்பர் ரபியுத்தீனின் துடிதுடிப்பில், அற்புதமான புன்சிரிப்பில் அவர் பறக்கும் இடமெல்லாம் வர்த்தகம் செழிக்கிறது. இஸ்லாமும் தமிழும் வாழ்கிறது. வளமான வர்த்தகத்தை ஒரு கையினால் இயக்குகிறார். மற்றொரு கையினால் இஸ்லாமும் தமிழும் வளர்க்கிறார். தற்சமயம் அவர் ஹாங்காங் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத் தலைவர். எதிர்காலத்தில் **உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டின் அமைப்புச் செயலர்.** (இந்த ஆசை தமிழக முஸ்லிம் சமுதாய தாணைத் தலைவர் **சிராஜுல் மில்லத் ஆ.கா. அப்துஸ் ஸமத்** அவர்களுடையது)

ஒரு காலத்தில் காயல்பட்டனமும் கீழக்கரையும் போட்டி போட்டு இஸ்லாமும் தமிழும் வளர்த்தது. அது இப்பொழுது இடம் பெயர்ந்து தஞ்சாவூர் மண்ணுக்குப் போய்ச் சேர்ந்து நீடூர் நெய்வாசலில் மணம் பரப்புகின்றது. சந்தேகமேயில்லை.

இந்த மாணிக்க மனிதர்கள் இரத்தினக்கற்களுடன் வான வெளியில் பறந்து கொண்டே இருக்கட்டும். அப்பொழுதுதான் இஸ்லாத்தில் இரண்டறக் கலந்தவாறே தமிழ் மேலும் சிறப்படையும்

(இங்கு படத்தில் **ஏ. ரபியுத்தீன்** காணப்படுகிறார்)

ஒரு கட்டடத்திற்கு அறுப்புப் பெயர்ப்பலகை

தமிழகத்தில் முதல்முறை.

எம்.எஸ்.எம். மர்சூக் ஒரு காலத்துக் கலைஞர் கொழும்பில்.

இப்பொழுது தமிழ் நாட்டு மதுரை மாநகரில் ஒரு தொழிலதிபர் அங்கே அனைவருமே அதிசயிக்கும்படி நவீன வசதிகளுடன் பலமாடி வணிக அங்காடிக் கட்டடம் ஒன்றினை கட்டி கடந்த 22.09.94ல் திறந்திருக்கிறார். எந்த அரசியல் வாதியையும் எந்தத் திரை நட்சத்திரத்தையும் வைத்து அதைச் செய்யாமல் தன் அருந்துணைவியார் கலைஹா பீபியையும், பேத்தியார் ருக்ஷானா அஃப்ரின் ரஃபியையும் கொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்து ஆச்சரியப்படுத்தியிருக்கிறார். டவுன் ஹால் பாதை வழியாக மீனாட்சியைத் தரிசிக்க செல்பவர்கள் இந்த டவரை மிஸ் பண்ண முடியாது. சாதாரணமாக மதுரை போன்ற நகரங்களில் இப்படியெல்லாம் நடப்பதில்லை. அத்தோடு, முதல் முறையாக தமிழ், ஆங்கிலத்துடன் அறபுக்கும் இடம்.

எப்படி என்கிறீர்களா? **'கலைஹா டவர்ஸ்'** என்று கட்டடத்திற்குப் பெயர் சூட்டி அறபு மொழியிலும் பெயர் மின்னுகிறது.

முதன் முறையாக தமிழகத்தில் இப்படி அறபுப் பெயர்ப்பலகை மதுரையில் இருப்பது அதிசயமாகப்படலாம். ஆனால் வரலாறு தெரிந்தவர்கள் அதிசயப்பட வேண்டியதில்லை. பண்டைய மதுரை யம்பதியில் அறபு வர்த்தகர்களின் செல்வாக்கும் தமிழ் மக்களுடன் அவர்கள் கொண்டிருந்த அந்நியோன்யமும் வரலாற்றுப் புகழ் கொண்டதாகும்.

இயேசு பயன்படுத்திய புனித கோப்பை

பஸ்கா என அழைக்கப்பட்ட அப்பண்டிகையின் பொழுது திவ்விய இயேசு தனது 12 சிஷ்யர்களையும் பந்திக்கு அழைத்தார். அது கடைசியான போஜனமாக கண்ணீர் வரவழைக்கும் வரலாறாகி

விட்டது. படத்தில் காணப்படும் இந்தப் பாத்திரத்தை அப்பொழுது அவர்களுக்கு வழங்கி அதில் திராட்சை ரசப் பானத்தை அருந்தக் கொடுத்தார் அன்பின் இயேசு.

அதன் பின் அதனை பேதுரு என்ற சிஷ்யனே பாதுகாத்து வந்தான். அவன் கி.பி. 67ல் கொலையாவதற்கு முன்பாக ரோமாபுரியில் வைத்து யோவான் மாற்குக்குக் கொடுத்து விட்டான். (இவன் வீட்டிலேயே அந்த இறுதி உணவு உண்ணலும் நிகழ்ந்தது)

மாற்கு தான் செல்லும் இடங்களுக்கெல்லாம் அதனைக் கொண்டு செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் (1910) சிரியாவில், ஆண்டியோக் என்னும் இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டது.

ஓர் இடிந்து போன கிறிஸ்துவ ஆலயத்தின் பீடத்தின் கீழ் இருந்தது. வேலையாள் கண்ணில் பட்டது.

ஆராய்ச்சியாளர்களுக்குக் கிடைத்த சான்றுகள் மூலம் இது இயேசு பயன்படுத்திய பாத்திரமே என்பது உறுதியாகி விட்டது.

தற்போது அமெரிக்காவில் மெட்ரோபொலிட்டன் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகிறது.

இப்பாத்திரத்தில் இயேசுவின் உருவமும் அவருடைய சிஷ்யர்களின் உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. அத்தோடு பறவைகள், திராட்சைச் செடி போன்றவற்றையும் வெள்ளியில் செதுக்கிப் பதித்திருக்கிறான் மாற்கு. இவனே முதன் முதலாக இயேசுவின் உருவத்தை களி மண்ணால் செய்தவனுங் கூட.

இதுவே இன்றைய தேவை

1993 பெப்ரவரி 19-20-21 களில் தஞ்சாவூர்-அய்யம்பேட்டை, 14ஆம் ஆண்டு திருக்குர்ஆன் திருவிழாவுக்காக விழாக்கோலம் பூண்டு வரலாறு படைத்தது.

திருக்குர்ஆன் மனனப் போட்டி, பட்டி மன்றம், கவியரங்கம், கன்னியர் திருமணம், பொற்கிழி வழங்கிப் போற்றல் எனப் பல நிகழ்ச்சிகளை ஒரு தனி மனிதராக நடத்தி முடித்தார் அந்த 69 வயது

வாலிபர் ஹாஜி எம். அப்துர் ரஹீம். (மேலும் விரிவான குறிப்புக்களை 'தஞ்சாவூர் கலை-இலக்கிய ஆத்மிகப் பாலத்தில்' என்ற கட்டுரையில் காண்க.)

அவரது அந்தச் சேவைகளை வைத்தகண் வாங்காமல் கண்ட வண்ணம் இருந்தன இரு தமிழ் உள்ளங்கள்.

சென்னையைச் சேர்ந்த டி. குருமூர்த்தி பி.ஏ. ஒருவர். தஞ்சை ஜி.வெங்கட்ராமன் பி.ஏ. மற்றொருவர். அவர்களிருவரும் அப்துற ரஹீம் ஹாஜியின் பள்ளித் தோழர்கள். தங்கள் இளமைக்கால சகா தளர்ந்த வயதிலும் தனது பொன்னான நேரத்தையும் பொருளையும் பொதுச் சேவையில் செலவிட்டு வருவதைப் பார்த்துப் பூரித்துப் போயினர். அதனை அடக்க முடியாதவர்களாய் விழாவின் இறுதி நாளில் அருமை நண்பருக்குப் பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தனர்.

இந் நிகழ்வைக் கண்டு மெய்சிலிர்த்த ஆயிரமாயிரம் மக்கள் கூட்டத்தில் நானும் ஒருவன்.

அன்று அந்த நிகழ்ச்சியைக் கண்டு, என் புரவலர் ஹாஜி ஹாஷிம் உமர் சொன்ன வார்த்தைகளை இப்பொழுதும் உச்சரித்துக் கொண்டேயிருக்கிறேன். நாளையும் சொல்லிக் காட்டுவேன்.

என்ன தெரியுமா அது?

'இன்றைய இந்திய-இலங்கை அன்னையர் விரும்புவதெல்லாம் இனப்புரிந்துணர்வும், மத நல்லிணக்கமுமே. அதுவே இப்போதைய அதி அத்தியாவசியத் தேவை. ஒரு குருமூர்த்தியும் ஒரு வெங்கட்ரா மனும் அய்யம்பேட்டையில் அப்துற்றஹீமுக்குச் செய்தது அனைத்து இடங்களிலும் வியாபிக்க வேண்டும். அதற்கு இறை துணையும் வேண்டும்.''

மத நல்லிணக்கம், மனித நேயம் - கிராமங்கள் சுற்றுத் தருகின்றன

"ஒக்கும் தீனுக்கும் வலியதீன்" என்ற வாக்கியம் திருக்குர் ஆனில் உண்டு. எங்கள் மார்க்கம் எங்களுக்கு, உங்கள் மார்க்கம் உங்களுக்கு என்ற அர்த்தம் அதற்கு. யாரும் தங்களது மதத்தைப் பற்றி உயர்வாக நினைப்பதில் தவறில்லை. அதற்காக மற்ற மதத்தைத் தாழ்வானது என்று நினைக்க வேண்டியதில்லை. எல்லாவற்றையும் விட மக்களுக்கு வேண்டியது சகோதர மனப்பான்மையே. ஒரு அயோத்தி சம்பவத்திற்குப் பிறகு இந்துக் கோயில் திருப்பணிக்கு ஒரு ரஹீம் நன்கொடை அளிப்பதென்பது மத நல்லிணக்கத்திற்கு மாபெரும் தொண்டு."

- ஸ்ரீமத் குமாரசாமி தம்பிரான்
திருப்பனந்தாள் மடம்

காசியில் உள்ள குமரகுருபரர் மடம் முகலாய மன்னர் அவ்ரங்கஸேப் வழங்கிய நிலத்திலும் அவர் உதவிய பணத்திலும் உருவானது. இந்த உண்மையை ஞானச்செம்மல் குமரகுருபரர் சரிதம் படித்தோர் அறியலாம்:

மடத்திலிருந்த தங்கத்தினாலான பூஜை விக்கிரகத்தை மராத்திய இந்துப் படையினர் கவர்ந்து சென்றதை திப்பு சுல்தான் மீட்டளித்தார். இதை மடத்தின் வரலாற்றைப் படித்தால் அறியலாம்.

அதே சிங்கேரி மடத்திலிருந்த சாரதாதேவியின் பெரிய தங்க விக்கிரகத்தைக் கவர்ந்து சென்ற மராட்டியருடன் திப்பு சுல்தான் போராடி அதை மீட்டெடுத்ததும் வரலாற்றில். (பாலகிருஷ்ண நாயுடு எழுதிய 'டணாயக்கன் கோட்டை' வரலாற்று நவீனம் - பக்கம் 534)

திருப்பனந்தாள் மடாதிபதியுடன் ரஹீம்

- இவற்றைப் போல இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பொழுதிலும் (1993) ஒரு சம்பவம். சற்று மாறுதலானது ஒரு நாட்டின் ஜனாதிபதியோ, பிரதமரோ முதல்வரோ செய்ததல்ல அது. தமிழ்நாட்டின் கிராமமொன்றின் ஒரு சாமான்ய மனிதர் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்.

பரதநாட்டியத்திற்கு பெயர் பெற்ற பந்த நல்லூர் கேள்விப்பட்டிருப்பீர்களே, தஞ்சாவூரில் கும்பகோணம் சமீபம். அதன் அருகே கீழ் மாந்தூர் கிராமம். பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்களும் ஒரளவு முஸ்லிம்களும் உள்ள ஊர். அருகருகே ஒரு பள்ளிவாசலும் மாரியம்மன் கோவிலும். 1993 மத்தியில் கோவிலில் கும்பாபிஷேகம். அதற்குப் பின்னணியில் இருந்தவர் ஒரு முஸ்லிம்.

'மனித நேயத்திற்கு மதம் அணைபோட முடியாது, கூடாது' என்ற கொள்கையுடைய அவர், தனது சொந்த ஊரின் மக்கள் வணங்கும் கோயில் திருப்பணிக்கு 2 லட்சம் வாரி வழங்கி மடப்பள்ளி, வாகனங்கள் வைக்க ஓர் அறை, இரும்புக் கேட்டுகளுடன் கூடிய அழகிய சுற்றுச் சுவர் முதலியனவெல்லாம் புதிதாக அமைக்க உதவினார். அவர் சேவைக்கு நன்றி செலுத்தி அவர் பெயர் (ரஹீம்) கோயில் வாசல் கதவில். (இந்த றஹீம் என்ற பெயர் விசேஷமானது. அது இறைவனது 99 பெயர்களுள் ஒன்றென்பர் முஸ்லிம்கள்.

அது மட்டுமல்ல, கோயிலில் 11 ஏழை ஜோடிகளுக்கு இலவசத் திருமணம் நடைபெற்ற பொழுது (அவர்கள் விவசாயக் கூலிகள்) பெரிய விருந்தொன்றுக்கும் ஏற்பாடு செய்து அந்தச் செலவுகளையும் ஏற்றுக் கொண்டார் அவர்.

அனைத்தும் திருப்பனந்தாள் காசி மட அதிபர் ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான் மேற்பார்வையில் நடப்பதை விரும்பினார் றஹீம். அவ்வாறே நடந்தது.

இந்தத் திருப்பனந்தாள் மடம் பற்றியும் ஒரு செய்தி இருக்கிறது. திருவாய்ப்பாடி என்கிற ஊரின் தர்கா விழாவுக்கு ஆண்டுதோறும் நன்கொடை அளித்து வருகிற ஒரு மடம் அது.

ஸ்ரீகுமாரசாமித் தம்பிரான் ஒரு குறிப்பு இப்படிச் சொல்கிறார். அதைப்படித்தால் யாருக்கும் மெய்சிலிர்த்துப் போகும்.

"லக்கும் தீனுக்கும் வலியத்தீன்" என்ற வாக்கியம் திருக்குர்ஆனில் உண்டு. எங்கள் மார்க்கம் எங்களுக்கு. உங்கள் மார்க்கம் உங்களுக்கு என்ற அர்த்தம் அதற்கு. யாரும் தங்களது மதத்தைப் பற்றி உயர்வாக நினைப்பதில் தவறில்லை. அதற்காக மற்ற மதத்தைத் தாழ்வானது என்று நினைக்க வேண்டியதில்லை. எல்லாவற்றையும் விட மக்களுக்கு வேண்டியது சகோதர மனப்பான்மையே. ஒரு அயோத்தி சம்பவத்திற்குப் பிறகு இந்துக் கோயில் திருப்பணிக்கு ஒரு ரஹீம் நன்கொடை அளிப்பதென்பது மத நல்லிணக்கத்திற்கு மாபெரும் தொண்டு.''

ஜனாப் றஹீம், அவர் ஊருக்கு அருகில் உள்ள கருப்பூர் பள்ளிவாசல் திறப்பு விழாவுக்கும் ஒரு லட்சம் நன்கொடை வழங்கியுள்ளார் என்பதையும் அந்தத் தமிழ் மகனை இப்பொழுது சிங்கப்பூர் தன் மைந்தனாக வரிந்துவிட்டதாகவும் அறிகிறேன். அவர் அங்கே ஒரு பிரபல உணவகச் சொந்தக் காரர். எங்கிருந்தாலும் வாழ்ந்து நல்லதையே நினைத்து நன்மைகளையே செய்யட்டும் என வாழ்த்துகிறேன்.



உங்கள் மின்விசிறி எப்படி?

இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை மின்விசிறியை சர்விஸ் செய்ய வேண்டும். அதில் உள்ள பேரிங்குகளுக்கு கிரிஸ், மற்றும் எண்ணெய் போட வேண்டும்.

மின் விசிறி ஓடிக்கொண்டிருக்கையில் திடீர் என வேகம் குறைந்தால் அல்லது பின்புறம் ஓடினால் அதில் உள்ள கண்டன்சர் பலவீனமாகிவிட்டதென அர்த்தம். உடனே சரிசெய்ய வேண்டும். இல்லையேல் பெரிய செலவுக்கு வழி ஏற்படும்.

மேசை விசிறிகளில் இரண்டு 'புஷ்'கள் உள்ளன. அவற்றை வருடத்திற்கு ஒருமுறை சர்வீஸ் செய்து எண்ணெய் போட நல்ல முறையில் இயங்கும்.

மின்சாரத் ஓட்டத்தை 'ஏர்த்' செய்யாமல் மேசை விசிறிகளை இயக்குவது ஆபத்து. (எதிர்பாராத விதமாக வெளியாகும் மின்சார அதிர்ச்சியிலிருந்து உயிரைப் பாதுகாப்பது இந்த 'ஏர்த்'தான்) அவை 3-பின் பிளக் பாயின்டிலேயே பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

இந்த மனிதர்கள் இருவரும் ஹாலந்து நாட்டுக்காரர்கள். 'பெண்கள் சிகையலங்காரம் செயற்கை, எங்கள் அலங் காரம்தான் இயற்கை என்று சவாலிடுபவர்கள் போல. தலையை எப்படியோ ஒரு விதமாகக் கோலப்படுத்தி இருக்கிறார்கள். உடம்பிலே பச்சை வேறு குத்தியிருக்கிறார்கள். இவர்களைப் பார்க்க எப்படியிருக்கிறது?

இரு வேளைத் தொழுகை இருந்தது

இரு வேளைத் தொழுகை நடைபெற்று வந்த காலமும் ஒன்றிருந்தது. அது முஹம்மத் (ஸல்) அவர்களது விண்பயண (மி.ஃராஜ்) நிகழ்வு வரையில் நடைபெற்றது. அதன் பின்பே ஐவேளை.





பஞ்சமுக விளக்கில் பளிச்சிடுகிறது தத்துவம்

எனக்குக் கிடைத்த திருமண அழைப்பிதழ் ஒன்று பார்வையை அப்படி இப்படி திருப்ப முடியாமல் செய்தது. அதில் பஞ்சமுக விளக்குக்குக் கொடுத்திருந்த முக்கியத்துவம், தகவல்களைத் தேடி ஓட வைத்தது.

படத்தைப் பாருங்கள். ஐந்து நுனியிலும் ஒரே அளவினதான ஒளிச்சுடர் பல தத்துவங்களைத் தருவதாக அமைந்து விட்டிருக்கிறது.

பஞ்ச பூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவற்றை ஒருமுகப்படுத்தி வணங்கும் வழியாகவே இவ் விளக்கு பயன்படலாயிற்று.

இது ஐம்புலன்களை அடக்கும் தத்துவத்தையும் விளக்குகின்றது.

ஐந்துமுக விளக்கில் தனியாக ஒரு முகத்தை, அல்லது இரண்டு முகங்களையோ மட்டும் ஏற்றி வைக்கலாகாது என்பதுண்டு. அதனால் பஞ்சமுக விளக்கு இருக்கக்கூடிய வீட்டில் கூட தினசரி விளக்கேற்றுதலுக்கு அதனைப் பயன்படுத்துவதில்லை.

விழாக்கள், பண்டிகைகள், சுபநிகழ்ச்சிகள் நடக்கும் பொழுது மட்டும்தான் பஞ்சமுக விளக்குக்கு முக்கியத்துவம்.

மேலும் - இவ்விளக்கு, பார்வை, பேச்சு, கேட்டல் நுகர்தல், சிந்தித்தல் ஆகிய ஐந்து புலன் உணர்வுகளை அடக்கிக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்து ஒரே ஒளிமுகமாய் மனத்தை இருத்தும் பழக்கத்திற்கு மனிதரை இட்டுச் செல்லும் தன்மையை கொண்டது.

கோவில் கர்ப்ப கிரகங்களில் உள்ள விளக்குகள் அனைத்துமே பஞ்சமுக விளக்குகளே.

கரை சேர்க்கிறார் – கல்விக்காக!

படம் என்ன விசேடத்தைத் சொல்கிறதென்று பார்த்தால் ஓர் ஆசாமி (அதுவும் சீனக் காரரோ, தைவான் காரரோ) சிறுவர்கள் இருவரை நீரிலிருந்து கரை சேர்ப்பதாகத் தோன்றுகின்றது.

ஒரு வகையில் சரி. இருந்தாலும் பின்னணியில் இருக்கும் தகவல் அற்புதமானது. ஆற்றைக் கடக்கும் அறிவுத் தாகம் இது. ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையில் நிலவும் அந்நியோன்யம்.

மத்திய சீனாவில் விவசாயப் பெரு மக்களின் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டும் கைங்கரியம் அப்படியொன்றும் இலேசானதல்ல. காடு மலை கடந்து செல்ல வேண்டுமென்பது மட்டுமல்ல, காட்டாறு களையும் கடந்தாக வேண்டும். அதுவும் தினமும்.

இங்கே படத்தில் ஓர் ஆசிரியர் தன் மாணாக்கர் இருவருக்கு ஆற்றைக் கடக்க உதவுகிறார். ஒரு பிள்ளை முதுகில். மற்றது இடுப்பில்.

சீனத்து ஆசிரியமணியின் செய்கையை நினைத்து மெய்சிலிர்ப்பு ஏற்படுகிறது. அவரது சேவையை நமது ஆசிரியப் பெருந்தகைகளுக்கு அர்ப்பணிக்க ஆசை எனக்கு!. சமர்ப்பிக்கிறேன் இங்கே!.

திருக்குறளை முதன் முதல் நூலாக்கியவர் வெள்ளையர்

தமிழ் சமுதாயத்தினரின் அருமை பெருமையான திருக் குறள் ஆரம்பத்தில் ஓலைச் சுவடியிலேயே இருந்தது. இதனை நூல் வடிவில் கொண்டு வர எந்தத் தமிழரும் முன்வராத நிலையில் ஒரு வெள்ளையர் அந்தக் கைங்கரியத்தைச் செய்தார்.

யார்? எந்த ஆண்டு?

பிரிட்டிஷ் சிவில் சேவை அதிகாரியாகக் கடமையாற்றிய எலிஸ் துரை 1825ல்.

பொக்ஸிங் டே

அன்பை வளர்த்து அமைதியைப்
பேணப் பிறந்தார் ஈஸா நபி
என்ற இயேசுபிரான்.

அன்னவரது பிறந்த தினமான கிறிஸ்துமஸ் பல்வேறுநாடுகளில் பல்வேறு தினங்களில் கொண்டாடப்பட்டு வந்ததுண்டு.

ஜனவரி 6, மார்ச் 25, டிசம்பர் 25 என்றெல்லாம் கொண்டாடி மகிழ்ந்தார்கள். கி.பி. 354ல் ரோம் நகரப் பாதிரியார் (லுபீரியஷ்) தான் டிசம்பர் 25லேயே அவரை நினைத்து மகிழ வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றினார்.

கிறிஸ்துமஸ் நாளுக்கு மறுநாள் 'பொக்ஸிங்டே' என மற்றொரு கொண்டாட்டம் உண்டு. இதை தமிழ்ப்படுத்தினால் 'குத்துச் சண்டை' என வரும் அப்படியானால் முதல்நாள் குதூகலம், கும்மாளம், மறுநாள் குத்துச் சண்டை என்றா அர்த்தம்?

'பொக்ஸிங் டே'யில் மாபெரும் தத்துவம் உள்ளது. அது இப்போதைய சூழ்நிலைக்கு மிக அவசியமானது.

பல்லாண்டுகளுக்கு முன், தேவாலயங்களில் (சர்ச்) பணம் போட என ஓர் உண்டியல் பெட்டி வைத்திருந்தார்கள். வசதி படைத்தவர்கள் ஏழை, எளியவர்களுக்கு உதவும் பொருட்டு அந்த 'பொக்ஸ்' (பெட்டி)களில் பணம் போடுவார்கள். இது நாளடைவில் பெரும் பாரமுள்ள பெட்டியாகிவிடும். கிறிஸ்துமஸின்போதுதான் அந்தப் பெட்டியை உடைத்து உதவி கோரும் எளியவர்களுக்கு வழங்குவார்கள். இதுவே 'பொக்ஸிங் டே' அற்புதமான ஏற்பாடு.



மின் விபத்துக்களிலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்

தினமும் பல மின் விபத்துக்கள் நடைபெறுகின்றன. பொதுவான விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ள -

★ பழுதடைந்த பிளக்குகளையோ அல்லது விசைகளையோ உடனடியாக மாற்றிக் கொள்ளுங்கள்.

★ பழுதடைந்த வயர்களை உடனடியாக மாற்றிக் கொள்ளுங்கள். விசேஷமாக மின்சார ஸ்திரிப் பெட்டியை ஒன்றினைக்கும் வயரினைப்பை.

★ 'டிரிப்ஸ் ஸ்விட்ச்' ஒழுங்காக வேலை செய்கின்றதாவென்று அவ்வப்போது பரீட்சை பார்த்துக் கொள்ளுங்கள்.

★ நிலத்தில் விழுந்து கிடக்கும் மின்கம்பிகளை தொடாதீர்கள். மின்கம்பிகளை தொட்ட வண்ணமிருக்கும் மாரங்களை அப் புறப்படுத்தாதீர்கள்.

★ தொலைக்காட்சி அன்டென்னாக்களை மின் கம்பிகளுக்கு அருகே பொருத்தாதீர்கள்.

★ யாரேனும் மின்சாரத்தினால் தாக்குண்டால் பிரதான மின்னினைப்பை உடனே துண்டித்து விடுங்கள். அவரது உடம்பைத் தொட வேண்டாம். ஈரமில்லாத துணியைக் கொண்டோ அல்லது தும்பிலான கயிற்றினாலோ அவரை இழுத்து விடுங்கள்.

பிள்ளைகள் கம்பித் துண்டுகளையோ பென்சில்களையோ 'பிளக்' முனைகளில் செலுத்தாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.



திரௌபதி ஐவரை மணக்க நேர்ந்தது எதனால்?

பஞ்சபாண்டவர்கள் ஏன் திரௌபதியை மணந்தார்கள்? அல்லது திரௌபதிதான் ஏன் ஐவரை மணக்க ஒப்பினாள்?

இதில் ஒரு தாய் முக்கிய பங்கு வகிக்கிறாள். அவள் குந்திதேவி. பாண்டவர்களின் அருமை அன்னை.

அப்பொழுது அரக்கு மாளிகையிலிருந்து பஞ்ச பாண்டவர்கள் தப்பி வந்திருந்தார்கள். பிராமணர்களைப் போன்று வேடமிட்டு, தினம் யாசகம் செய்து வீட்டுக்கு வருவது வழக்கம். வரும் ஒவ்வொரு சமயத்திலும் அம்மாவிடம் வந்து, 'அம்மா பிச்சை கொண்டு வந்திருக்கிறோம்' என்று சொல்லுவார்கள். அவளும், 'ஐவருமாகப் பகிர்ந்து கொள்ளுங்கள், குழந்தைகளே' என்பாள்.

ஒரு நாள் திரௌபதியை அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்கள். வழக்கமாகச் சொல்வது போல 'அம்மா பிச்சை கொண்டு வந்திருக்கிறோம்' என்றார்கள். அவளும் பழக்க தோசத் தில் 'ஐவரும் பகிர்ந்து கொள்ளுங்கள்' என்றாள்.

'யாகாவாராயினும் நா காக்க' என்பது தப்பியே தப்பிப் போனது. விபரீதமாகிவிட்டது.

தாய் சொல்லைத் தட்டியே அறியாத ஐவரும் அவளை மணந்தார்கள். அதுவும் ஓர் ஒழுங்கு முறையில்தான்.

'அவள் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொருவரோடு வாழ வேண்டும். அப்புறம் நெருப்பில் குதித்துத் தன்னை சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்' என்று நாரதர் சொல்லிக் கொடுத்தார். திரௌபதி நடந்து காட்டினாள்.

- இதிகாசத்தில் புதைந்துள்ள புதிர்களில் ஒன்றுக்கு விளக்கம் இது.

(சென்னை மேற்கு மாம்பலம் ஸ்ரீராம் சமாஜ் ஆதரவில் 'தினம் ஒரு திருக்கதை'யை புலவர் சிதம்பரம் சுவாமிநாதன் நிகழ்த்திக் கொண்டிருந்த பொழுது அவ் வழியே போன என் செவிகளில் கணீரென ஒலித்ததை இங்கு தந்துள்ளேன்.)

முகப்பவுடர் இப்படித்தான் உருவாகிறது

ஏதாவதொரு பவுடரை தினமும் முகமெல்லாம் அப்பிக் கொள்கிறோம்.

இந்த முகப் பவுடர் உருவாகும் விதம் முகம் சுளிக்க வைக்கிறது.

- உலர்ந்த சைனாக் களிமண்.
- மக்னீஷியம் கார்பனெட்
- மெக்னீஷியம் கலந்த சோப்புத்தூள்

அல்லது

- துத்தநாகம் கலந்த சோப்புத் தூள்.
- ஜிங்க் ஆக்சைட்
- மா போல் அரைக்கப்பட்ட மாக்கல்

இவை அனைத்தையும் சலித்து அதனுடன் வாசனையைச் சேர்த்து முகப்பவுடர் தயாரிக்கிறார்கள்.

சிரிப்....

நடிகை ஒருத்தி எழுதியதாக பத்திரிகையில் கட்டுரை ஒன்று வந்தது.

சக நடிகை கேட்டாள்... உண்மையைச் சொல், இதை உனக்கு எழுதிக் கொடுத்தது யார்''

உடனே முதல் நடிகை, 'இதை உனக்குப் படித்துக் காட்டியது யார்?''

கைரேகையில் காதலைத் தெரியலாம்

ஞாயிறு காலை வேளையில் பொழுதை எப்படிப் போக்குவது என்ற சிந்தனை சில பேருக்கு வந்து விடும். இள வட்டங்களுக்கு யோசனை யோசனையாக வந்த வண்ணம் இருக்கும். அவர்களுக்கு என்னுடைய சின்ன உதவி.

ஒருவரின் கைரேகையைக் கொண்டு அவர்களுடைய காதல் உணர்வை அறிந்து சொல்லுங்கள்.

உங்கள் நண்பர் அல்லது நண்பியின் கையை நீட்டச் சொல்லுங்கள். முதல் படத்தில் இருப்பது போல இதய ரேகை நீண்டு வளைந்திருந்தால் அவர்கள் மிகவும் காதல் உணர்வு கொண்டவர்கள்.

இரண்டாவது படத்தில் உள்ளதைப் போன்று இதயரேகை மெதுவாக வளைந்திருந்தால் அவர்கள் தங்கள் காதல் உணர்வுகளை வார்த்தைகளில் வடிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். தொட்டால் சுருங்கி வகையினர்.

மூன்றாவது படத்தில் உள்ளதைப் போல் இதய ரேகை திடீரென நடுவிரலை நோக்கி உயர்ந்திருந்தால் அவர்கள் செக்ஸில் அதிக நாட்டம் கொண்டவர்கள். காமுகர்கள் என்று சொல்லப்படுகின்ற வர்களை இதில் சேர்க்கலாம்.

நான்காவது படத்தில் சின்னதாக - நேராக இதய ரேகை நீண்டிருக்கிறது. இப்படி இருந்தால் அவர்கள் காதல் விஷயத்தில் மிகவும் நியாயமாக நடந்து கொள்பவர்கள். இவர்களால் தங்கள் உணர்வுகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள இயலும்.

கடைசியாக ஐந்தாவது படத்தில் உள்ளது போல் சுமாரான நீளத்துடன் இதய ரேகை இருந்தால், எதையும் நன்றாக யோசிப்பவர் என்றும், தான் நினைத்ததை அடைந்தே தீர வேண்டும் என்ற எண்ணம் உடையவர் என்றும் அறிந்து கொள்ளலாம்.

என்ன, பொழுது கமகமவென்று காற்றாய்ப் பறக்கிறதா?

விக்னேஸ்வரியானார் விநாயகர்

நாம் விக்னேஸ்வரி கணேசினி எனும் பெயர்களில் விநாயகப் பெருமானை அறிந்திருக்கிறோமா?

பெண் உருவில் உள்ள விநாயகப் பெருமானுக்கே அந்தப் பெயர்.

அவரை 'விக்னேஸ்வரி' என்றும், கணேசினி என்றும் அழைக்கும் அதிசயம் நடக்கவே செய்கிறது.

ஆண் யானைக்குத்தான் தந்தம் இருக்கும். அந்த வகையில் விநாயகர் ஆண் என்பதால் அவருடைய யானை முகத்தில் நிச்சயம் தந்தம் உண்டு.

இந்தியாவில் இரண்டே இடங்களில் மட்டும் விநாயகர் தந்தம் இல்லாமல் இருக்கிறார். பெண் யானை முகம் தாங்கி உடலில் சேலை கட்டி, பெண்களைப் போல் நகைகள் அணிந்து காட்சியளிப்பதைத்தான் விக்னேஸ்வரி என்றும் கணேசினி என்றும் கூறுகிறார்கள்.

அவரைப் பார்த்தே தீர வேண்டுமே என்று நினைப்பவர்கள் ஜபல்பூர் அருகே உள்ள பீராகேட் செல்ல வேண்டும். 'அவ்வளவு தூரம் எப்படிப் போவது? பக்கத்தில் இல்லையா? என்பவர்களுக்கு ஒரு நற்செய்தி. தமிழகத்தில் குமரி மாவட்டம் சுசீந்திரம் அருகில் உள்ள கோயிலில் இந்த அதிசயத்தைக் காணலாம்.

தமிழகப் பெண்களுக்கு எப்படிப்பட்ட கணவர் தேவை?

புகழ்பெற்ற 'கல்கி' சஞ்சிகை கல்லூரி மாணவியர் கட்டுரைப் போட்டியொன்றினை நடத்தி, 'உங்கள் இலட்சியக் கணவர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும்' என எழுதுங்கள் எனக் கேட்டுக் கொண்டது.

முதல் பரிசை ஒரு தமிழ் மாணவியும் ஒரு முஸ்லிம் மாணவியும் தட்டிக் கொண்டார்கள். ஒருவர் பி.எஸ்.ஸி. கணிதவியல் கற்பவர். மற்றவர் எம். ஃபில். பொருளாதாரம். அவர்கள் கட்டுரைகளிலிருந்து சில வரிகளை இங்கு தந்துள்ளேன். நமது கன்னியர்கள் காளையர்கள் சிந்தைக்குச் சமர்ப்பணம்.

● இந்த உலகிலேயே அவருடைய முழு அன்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவளாக என்னை மட்டுமே வைத்திருப்பவராக அவர் விளங்க வேண்டும். என்னை விடப் பதினைந்து வயது மூத்தவராக இருந்தாலும், தோற்றப் பொலிவில்லாதவராக இருந்தாலும், உயர்ந்த படிப்பு படிக்காதவராக இருந்தாலும், கொஞ்சமே சம்பளம் வாங்குபவராக இருந்தாலும் அவரையே என் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய கணவராக நான் தேர்ந்தெடுப்பேன்.

அ.சுதா,

பி.எஸ்.ஸி. கணிதவியல், வைணவா மகளிர் கல்லூரி, சென்னை

● படிக்காதவர் என்ற போதிலும் என்னைப் போன்ற சில பெண்கள் திருமணத்திற்குப் சம்மதம் தெரிவிப்பார்கள். 'என் கணவர் இவ்வளவு படித்திருக்கிறார்.' என்று பெருமையாகக் கூறும் பெண்களிடையே, 'எனது மனைவி இவ்வளவு படித்திருக்கிறாள் என்று கூறும் ஆண்மகனை நான் எதிர்பார்கிறேன்.

வரதட்சணை நிச்சயம் கொடுக்கவே மாட்டேன். தவறிருப்பின் தட்டிக் கேட்கத் தயங்க மாட்டேன். அவரும் தயங்கக்கூடாது.

இ. சாந்த் உஸ்மானி எம்.ஃபில். - பொருளாதாரம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.

- மேலே படித்த இரு குறிப்புகளிலிருந்து ஒன்று மட்டும் எனக்கு நிச்சயமாகத் தெரிகிறது. தமிழ் நாட்டில் நன்றாகப் படித்துப் பட்டதாரிகளாகிறவர்கள் பெண்கள். அவர்களுக்கு சரிசமமாகப் படித்த ஆண்களைத் தேடுவது கஷ்டம். அதனால் பெண்களே படிப்பில் குறைந்த ஆண்களுக்குப் பச்சைக் கொடி காட்டுகிறார்கள் என்பது. உங்களுக்கு எப்படி?

எந்தக் குழந்தை முதலில் பேசும்?

ஆண் குழந்தைகளைக் காட்டிலும் பெண் குழந்தைகளே சீக்கிரமாகப் பேசக் கற்றுக் கொள்கின்றன.

இதனை உறுதி செய்வது போல குரங்குகளிலும் பெண் குரங்குகளே சீக்கிரம் சங்கேத ஒலி எழுப்பக் கற்றுக் கொள்கின்றன.

இத் தகவல் ஆட்லாண்டா மனித ஆராய்ச்சி நிறுவனத்திலுடையது.

கடவுளுடன் போராடுகிறவன்

அதிர்ச்சி அடைவீர்கள். உலகில் உள்ள ஒரு நாடு கடவுளுடன் போராடவே பிறந்திருக்கி என்ன மண்ணாங்கட்டி கதை, கடவுளுடனா, போராடுவதா என்பீர்கள். நான் என்ன செய்வது? நாட்டின் பெயரையே 'கடவுளுடன் போராடுகிறவன்' என்று வைத்துள்ளார்கள். இஸ்ரேல்தான் அந்த நாடு. அந்தப் பெயருக்கு அதுவே அர்த்தம்.

தங்கக் கடற்கரை தரிசனம்

அமைதி, நிம்மதியைத் தேடி உலக மனிதர்கள் எங்கெல்லாமோ வலம் வந்து கொண்டிருக்கிறார்கள்.

எனக்கும் ஓரிடம் இருக்கிறது. அலைகடலுக்கு அப்பால் 'தங்கக் கடற்கரை'யாக தமிழ் நாட்டிலிருக்கிறது அது.

சென்னையிலிருந்து சுமார் 20 மைல் தொலைவில் 'கோல்டன் பீச்'சாக உள்ளது.



ஒரு காலத்தில் முந்திரிக் காடுகளும், சவுக்குத் தோப்புகளுமாக இருந்த இடத்தில் 'அருமை அண்ணாச்சி' வி.ஜீ. பன்னீர்தாஸ் தன் பாசமுள்ள தம்பி சந்தோஷம் அவர்களுடன் இணைந்து நனவாக்கிய இலட்சியக் கனவு அது.

உட்லுக்கும் உள்ளத்திற்கும் உற்சாகமூட்டும் சூழல்.

இராட்சதப் பரப்பளவுள்ள மரகதப்பாயொன்றை விரித்து வைத்தாற் போன்ற பசுமை -

அடிக்கொரு தரம் கடலலைகள் வந்து கொஞ்சும் மென்மை சுகம்.

இந்த இடத்திற்குள் நுழைந்து விட்டால் ஒற்றுமையுணர்வு எங்கிருந்தோ வந்து விடும். 'எம்மதமும் சம்மதம்' என்று வாய் முணுமுணுக்கும்.

திருக்கோயிலா, பள்ளிவாசலா, கிறிஸ்தவ ஆலயமா மூன்றும் உங்கள் கண்களிலிருந்து தப்பாது. எதை நோக்கியும் நீங்கள் பக்திப் பரவசப்படலாம்.

இந்தத் தங்கக் கடற்கரை வளாகத்தைச் சுற்றிலும் எத்தனை எத்தனையோ காட்சிகள்.

பன்னீர் கோட்டையொன்று அந்தக் கால மன்னர் மன்னர்களது கோட்டையைப் போலவே அகழிகள் சூழ. இதில் இருபது முப்பது அடி உயர 108 கருங்கற் தூண்கள். பெரும் அதிசயம் புரிபவை இவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஓசை தரும். பைபிள், திருக்குர்ஆன், கீதை உபதேசங்களின் ஒலிகளும் சில தூண்களில் கேட்கும்.

உலகப் பொதுமறை வழங்கிய திருவள்ளுவருக்காக 'தமிழ் மறைக் கோட்டம்' ஒன்று. உள்ளத் தெளிவுக்கு இங்கே தினமும் மூன்று திருக்குறள் பாக்கள், விளக்க உரையுடன்!.

ஒரு ரூபாயில் ஒரு நாட்டையே உருவாக்கலாம்' என்பது பல காட்சியகங்களில் ஒன்று. 85 கோடி பாரத மக்கள் ஒவ்வொருவரும் ஒரு ரூபாய் அளித்தாலே போதும். ஒப்பற்ற நாடாகிவிடும் என்றுணர்த்துகின்ற இடம் இது.

'புதுமைக் கானகம்' என்ற மற்றொரு காட்சியகம் இந்திய மாநிலங்களின் சிறப்பையெல்லாம் ஒன்றிணைத்துக் கண்களைக் கவர்கிறது.

கடற்கரை ஓரம் அல்லவா! கப்பலும் வேண்டாமா? அதோ.. கப்பலும் தெரிகிறது. ஒரு வித்தியாசம். அதில் சொகுசுக் குடியிருப்புக்கள், தங்குமிடங்கள் இருக்கின்றன.

இன்னொரு மண்டபத்தில் எப்பொழுதும் கரகாட்டம், பூரவி யாட்டம், மற்றோர் இடத்தில் மாஜிக் காட்சிகள் அடிக்கொரு தடவை. இன்னும் பற்பல உல்லாசங்கள், உணவகங்கள், வேடிக்கை கள். முழுப் பட்டியலும் தர எனக்கு இடப் பஞ்சம். மன்னிக்குக.

நான் அங்கிருந்த சமயத்தில் சுமார் பத்தாயிரம் பேர் அந்த 56 ஏக்கர் பரப்பில் வலம் வந்தனர். இந்தியாவின் பல பகுதி மக்களையும் அங்கு கண்டேன். முழு இடத்தையும் சுற்றிப் பார்க்க வாகன வசதியும் உண்டு.

வட இந்தியாவில் இப்டியானதொரு சுற்றுலாத்தளம் அறி வையும் ஆனந்தத்தையும் அள்ளி வழங்க அமையப் பெறாததால் அங்கிருந்தும் மக்கள் திரள் திரளாக இங்கே. முஸ்லிம் சமூகத்தினர் கணிசமாக.

உண்மையில் இப்படியானதொரு உல்லாசபுரியை இந்திய அர சாங்கமே அமைத்திருக்க வேண்டியது. சாதித்ததோ தனி மனிதர் இருவர். அதுவும் தங்கத் தமிழக மண்ணின் மைந்தர்கள். அவர்க ளுள் ஒருவரான பன்னீர்தாஸ் 'அண்ணாச்சி' 6 ஆண்டுகளுக்கு முன் அமரரானதிலிருந்து டாக்டர் சந்தோஷம் 'தனிமர'மான போதிலும் தமையனாரின் இன்னும் பல எண்ணக் கனவுகளை நிறைவேற்றி முடிப்பதிலேயே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டியங்கு கிறார்.

தற்போது ஒரு கவிஞராகவும் பெயரெடுத்து விட்டார். இவரது இலக்கியச் சேவை பற்றி அறிய 'நர்கீஸ்' முஸ்தபா ஹுஸைன் பற்றி இதே நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரையைப் பாருங்கள்.

வயிற்று வலிக்குப் புழுங்கலரிசி

இந்தியக் கிராமப் புறங்களில் புழுங்கலரிசிச் சோறில் உப்பும் தண்ணீரும் கலந்து சாப்பிட்டால் வயிற்று வலி ஓரளவு குணமாகும் என்று தெரிந்து வைத்திருக்கி றார்கள்.

இப்போது இந்த நடை முறையை உலக சுகாதார ஸ்தாப னம் அங்கீகரித்துள்ளது.

வருமுன் உணர்த்தும் திறன்

உலகில் சில அசாதாரணமான நிகழ்வுகள் நடக்க வேண்டும் என்றிருந்தால் அதை உணர்த்தும் வகையில் சூசகமாக சில அதற்கு முன்பே வெளியாவதுண்டு. எழுத்தாளர்கள் - ஓவியர்கள் இந்த வரிசையில் முன்னணியில். அவர்கள் இறைவன் கொடுத்த அருட் கொடையை கொண்டு ஒரு கோணத்தில் ஒன்றை சிருஷ்டிக்க அது அச்சொட்டாக உண்மை நிகழ்வாகும். அமரர் ராஜிவின் அகால மரணம் நிகழ ஓரிரண்டு நாட்களுக்கு முன் சுடச்சுட வெளியான 'கல்கண்டு' இதழின் அட்டையில் இங்கு பிரசுரமாகியுள்ள படம் வெளியாகி இருந்தது. 'பிரதமர் நாற்காலியை பிடிப்பாரா ராஜீவ்?' என்ற கேள்வியையும் கேட்டிருந்தது.

படத்தை உற்றுக் கவனியுங்கள், சிறகுகள் விரித்த பதவி நாற்காலி ஒன்று. அது பறந்து வருகிறதா, பறந்து போகிறதா என்று கணிக்க முடியாது. அதனை ஏறிட்டு, கழுத்தளவு முகத்தை நன்றாக உயர்த்தி அண்ணார்ந்து பார்க்கும் ராஜீவ் காணப்படுகிறார். தமிழ கத்தில் அவருக்கு என்ன நேர்ந்தது என்பதையும், அவர் தன் உடலில் எந்தப் பாகத்தைப் பறி கொடுத்தார் என்பதையும் உலகமே அறியும். பதவி நாற்காலியும் அவரது சிரசின் பெரும் பாகமும் பறந்து மேலே மேலே போய்விட்டன.

படத்தை வரைந்த ஓவியரும், வெளியிட்ட ஆசிரியரும் அப்படி யான குரூரமான எண்ணத்தில் செயல்படவில்லை என்பதை நூற்றுக்கு நூறு நம்பலாம். ஆனால் உலகத்தை உலுக்கிய ஒரு நிகழ்வு எப்படியோ ஒருவிதத்தில், அதே தமிழ்நாட்டில் அதிகளவு விற்ப னையுள்ள ஒரு சஞ்சிகை மூலம் உணர்த்தப்பட்டிருப்பது அதிச யத்திலும் அதிசயமாக உள்ளது. நமக்கு அப்பாற்பட்ட சக்தியின் இயக்கமே இப்படித்தானா? என்று கேட்கத் தோன்றுகிறது.

(இந்தக் குறிப்பு நமது எழுத்துலக ஆசான் தமிழ்வாணனின் வாரிசுக்குச் சமர்ப்பணம்)

முஸ்லிம்களின் வழக்கமொன்றுக்கு அமெரிக்காவில் மௌசு

முஸ்லிம் சகோதரர்கள் மத்தியில் அவர்கள் இளவயதினருக்குச் செய்யும் ஒரு கடமை இருக்கிறது.

அதைக் 'கத்னா' என்பர். 'சுன்னத்துச் செய்தல்' என்றும் சொல்வர். 'விருத்த சேதனம்' எனவும் நல்ல தமிழைப் பயன்படுத்திக் குறிப்பிடுவர்.

இவ்விடயம் உடல் உறுப்பு சம்பந்தமானது. அதுவும் 'உயிர் உறுப்பு' என வர்ணிக்கப்படுகின்ற ஆண்களின் மர்ம அவயவத்தில் நடத்தப்படுகின்ற ஒரு சிறு சத்திர சிகிச்சை. 10-12 வயது தாண்டி பிடுதவற்குள் செய்துவிட வேண்டுமென்பது ஒரு கட்டாயம்.

முஸ்லிம்களின் இந்த நடைமுறை வழக்கத்தை இப்பொழுது படுவேகமாக அமெரிக்கா கைக்கொண்டுள்ளது.

1971ல் வல்லரசு கொண்டிருந்த கொள்கைக்கும் இப்பொழுது 24 ஆண்டுகளுக்குப் பிறகு அது நடந்து கொள்வதற்கும் பாரிய வித்தியாசங்கள். சவூதி அரேபிய நெருக்கமும் ஒரு காரண மெனலாம்.

இந்த விருத்த சேதனமுறையை இளவயது ஆண் பிள்ளை களுக்குச் செய்துவிடுவதனால், அதிக அபாயத்தையும் அளவற்ற துன்பத்தையும் தரக்கூடிய சிறுநீரக நோய்கள் மற்றும் சிறுநீர்க் குழாயைப் பாதிக்கும் வியாதிகள் முதலியவற்றைத் பெருமளவு தடுத்துவிட முடியும்.

ஓர் ஆய்வில் விருத்த சேதனம் செய்து கொள்ளாத சிறுவர்கள், செய்து கொண்டவர்களைப் பார்க்கிலும் 11 தடவை அதிகமான அளவில் சிறு நீர்க்குழாய் சம்பந்தப்பட்ட நோய்களில் பாதிக்கப்ப டும் வாய்ப்புடன் இருந்திருக்கக் காணப்பட்டார்கள்.

முதுமை வராமல் தடுக்க

இந்தியத் தூரதர்ஷனில் ஒளிபரப்பான மகாபாரதத் தொடரில் அடிக்கடி ஒருவரையொருவர் 'ஆயுஷ்மான் பவ' என்று சொல்லிக் கொண்டார்கள். இதற்குப் பொருள் 'ஆயுள் முழுவதும் நலமாக வாழ்க' என்பது. 3000 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றதாகக் கூறப்படும் மகாபாரத காலத்தில் ஆயுள் முழுவதும் வாழ்ந்தவர்கள் உண்டு.

ஓர் ஆயுள் முடிவதற்கு ஆண்டுகள் 120 பிடிக்குமாம்.

இந்தக் காலத்தில் இப்படி 120 ஆண்டுகள் ஏன் வாழ முடியவில்லை?. மூப்பு சீக்கிரம் வந்துவிடுவதுதான். லட்சக்கணக்கான செல்களினால் உருவாக்கப்பட்டுள்ள நமது உடலில் அவை ஒவ்வொரு வினாடியிலும் அழிந்து கொண்டிருப்பது ஒரு முக்கிய காரணம்.

நாம் நினைத்தால் மூப்பைத் தள்ளிப் போடலாம். (ஆனால் மரணத்தையல்ல)

'அதிக நாட்கள் உயிர் வாழ மூப்புத்தன்மையின் வேகத்தைக் குறைக்க வேண்டும். உடலின் உஷ்ணத்தையும் கணிசமாகக் குறைக்க வேண்டும். வியாதிக் கிருமிகள் உடலில் சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குறைந்தளவு கலோரி உணவைச் சாப்பிட்டால் மேற் கூறியவை சாத்தியமாகும்' என்கிறார் ரொனால்ட் ஹர்ட் என்ற ஆய்வாளர்.

மெலிந்தோர் கவலை விடுக

வெள்ளரிக்காயுடன் பேரீச்சம் பழத்தைச் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் உடல் பருமனாகி அழகாகவும் ஆகிவிடுமாம்.

இதை முஹம்மத் நபி (ஸ) அவர்களது துணைவியரு ஒருவரான ஆயிஷா (ர அவர்கள் பரீட்சித்துப் பய அடைந்தார்களாம்.

ஒரு நடிகரின் ஆரம்பமும் கடைசியும்

இன்று தமிழ்த் திரைப்படங்களில் கமல், ரஜினி எப்படியோ அப்படி அன்று ஒரு தியாகராஜபாகவதர்.

தங்க ஆபரணத் தொழிலில் ஈடுபட்டிருந்த சமூகத்தைச் சேர்ந்த அவர் திரைக்கு வந்து கொடிகட்டப் பறந்தார். திருச்சி சொந்த ஊர்.

நடிப்பை விட இசையால் தமிழ்ப்பேசும் மக்களை வசப்படுத்தியிருந்தார். அவர் படங்களில் டசன் கணக்கில் பாட்டுகள் இருக்கும். அத்தனையும் தேனாக இனிக்கும்.

'ஹரிதாஸ்' என்ற ஒரு படம் 3 ஆண்டுகள் தொடர்ந்து காட்டப்பட்டது. அந்த மாதிரி ஒரு படமும் இதுவரையில் காட்டப்பட்டதில்லை.

சென்னையில் அவரது படப்பிடிப்பு இருக்கும் நாட்களில் பகலுணவுக்குப் பல பெரிய வீடுகளிலிருந்து போட்டி போட்டுக் கொண்டு சாப்பாடு தொகை தொகையாக வரும்.

'பாகவதர் எங்கள் வீட்டுச் சாப்பாட்டை இன்று சாப்பிடமாட்டாரா' என்று ஏங்கித் தவம் கிடப்பார்கள். அப்படியொரு பிரேமை தியாகராஜ பாகவதர் மீது!

அவர் தனது சொந்த ஊரான திருச்சிக்கு வந்தால் அவரை ரயில்வே நிலையத்திலிருந்து வெளியில் அழைத்துச் செல்லப் பொலிஸ் துணையும் காவலும் தேவைப்பட்டன. அதே பாகவதர் தன் கடைசிக் காலத்தில் அதே திருச்சி ரயில் நிலையத்தில் தன்னுடைய ஒரேயொரு பெட்டியையும் தண்ணீர் கூஜாவையும் தானே தூக்கிக் கொண்டு தன்னந்தனியாக ஸ்டேசனை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த போது அவரை யாரும் கண்டு கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை! ஒரு நிம்மதியான இறப்பும் கிடைக்கவில்லை.

டெல்லி குமரிப் பெண்களுக்குக் 'கராத்தே'

புதுடெல்லிக் குமரிப் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வந்தால் படாத பாடு படுகிறார்கள் என்பது இப்பொழுது நிரூபிக்கப்பட்டுள்ளது.

ரோட்டோர ரோமியோக்கள், பஸ்சில் உரசி உரசி உல்லாசம் காண்பவர்கள், கையைப் பிடித்திழுப்பவர்கள், கழுத்துச் சங்கிலியை அறுப்பவர்கள் இப்படி யாரிடமாவது குமரிகள் சங்கடத்தில் மாட்டிக் கொள்கிறார்கள்.

இந்த நகர நரகத்திலிருந்து தப்ப இப்போது அவர்களுக்கு கை கொடுப்பது 'கராத்தே'

டெல்லி பொலிஸ் நிர்வாகமே காராத்தே வகுப்புக்களை நடத்தத் தொடங்கி விட்டது.

உயர் குடும்பத்துக் குமரிகள் நூறு நூறாக இதில் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். மத்திய தரப் பெண்களும் வர வேண்டும் என விரும்புகிறது பொலிஸ். குமரிகள் மட்டுமல்லாமல் குடும்பப் பெண்களும் கராத்தேயில் பயிற்சி பெற்றால்தான் டெல்லியில் கஷ்டமில்லாமல் வாழலாம் என்ற அபிப்பிராயம் ஏற்பட்டுப் போய் இருக்கிறது.

ஆங்கிலத்தில் ஆதிக்கம் செலுத்தும் எழுத்து

ஆங்கிலத்தில் எந்த எழுத்தில் தொடங்கும் சொற்கள் அதிகம்? 'எஸ்' என்ற எழுத்தில் தொடங்கும் சொற்களே. ஆங்கில அகராதியைப் புரட்டிப் பார்த்தால் 'எஸ்'ஸில் தொடங்கும் சொற்கள் 37 ஆயிரத்துக்குக் குறையாகவிருப்பதைக் காணலாமாம். (நான் எண்ணிப் பார்க்கவில்லை. அதனால் 'மாம்' போடுகிறேன்.) மேலும் 'எக்ஸ்'-'பீ' என்ற இரு எழுத்துக்கள் நீங்கலாக ஏனைய சகல எழுத்துக்களுடனும் அது கூட்டுச் சேருகிறது.

கண்பார்வை அற்றோர் 90 லட்சம்

இந்தியாவில் 90 லட்சம் பேர் கண் பார்வையற்றோராக உள்ளனர். இது ஆறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த கணக்கு இப்பொழுது இன்னும் அதிகமாகவே இருக்கும். நமக்கு விழிகளைத் தந்த இறைவனை எப்பொழுதும் நினைப்போம்.

30-02-2000ல் ஒரு பிரச்சினை?

எதிர்வரும் 2000ம் ஆண்டில் பெப்ரவரிக்கு 30 நாட்கள் உண்டு. அந்த 30ம் திகதி பிறப்பவர்கள் அவர்களின் ஆயுளில் பிறந்த நாளைக் கொண்டாடவே முடியாது. ஏனென்றால் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் 30 நாள் வரும். பேர்த் டே கொண்டாடுவது எப்படி?

விரைந்து வரும் விண்வெளி வாழ்க்கை

இன்னும் 5 வருடங்களில் ஆண்டு 2000.

அதனை 21ம் நூற்றாண்டு என அழைப்போம்.

விண்வெளி வாழ்க்கை கைகூடி விடுகிற நிகழ்வுகள் நடக்கப் போகின்றன 'ரொபோ' என்ற இயந்திர மனிதன் சாதாரண மனிதனைத் தூக்கிச் சாப்பிடப் போகிறான்.

இந்நிலையில் அறிவியல் பற்றி, விண்வெளி பற்றி, ஒரு பொதுவான அறிவை இப்பொழுதிருந்தே நமது இளைய தலைமுறைக்கு வழங்கவேண்டியது கடமை. 'டெக்'கில் டி.வி. யில் தமிழ் சினிமா பார்ப்பது மட்டும் சோறு போடவே போடாது.

முதலில் விண்வெளியில் மனிதன் இதுவரையில் என்ன சாதித்திருக்கிறான் என்பதை பட்டியலிட விருப்பம்.

விண்வெளி ஆராய்ச்சியில் சூரியனை முதன் முதலாக சுற்றிய செயற்கைக்கோள் என்னும் சிறப்பைப் பெறுவது 1952 ஜனவரியில் செலுத்தப்பட்ட 'லூனா-1' சந்திரனுக்குச் சென்ற முதல் விண்வெளிக்கலம் 'லூனிக்-2'. இது, 1959 செப்டம்பரில் நடந்தது.

* 'லூனா-10 சந்திரனைப் பலமுறை சுற்றி பல தகவல்களை முதன் முதலாகப் பூமிக்கு அனுப்பியது.

* 'லூனா-13' சந்திரனின் மண்ணை முதன் முதலாகத் தோண்டி எடுத்து வந்தது.

* 'அப்பலோ-11' என்னும் கலத்தில் முதன்முதலில் சந்திரனில் மனிதன் இறங்கினான்.

* உலகில் விண்வெளியில் மிதந்த முதல் ஆய்வுகூடம் 'சல்யூட்-1' (ரஷ்யா)

* பல கோள்களை ஆராய்வதற்காக முதலில் அனுப்பப்பட்ட விண்கலம் 'பயோனிர்-10' (அமெரிக்கா) சூரிய மண்டலத்தை தாண்டிச் சென்ற முதல் செயற்கைக் கோளும் இதுதான்.

* வெள்ளி கிரகத்தில் இறங்கிய முதல் செயற்கைக் கோள் 'வெளிரா-3'

* செவ்வாய்க் கிரகத்தில் இறங்கிய முதல் கலம் 'ஜோன்ட்-2'

* உலகின் முதல் வானிலைச் செயற்கைக் கோள் - 'டைரோஸ்'

* உலகின் முதல் ஆய்வு செயற்கைக்கோள் 'அன்னா-1'

* உலகின் முதல் செய்தித் தொடர்பு செயற்கைக்கோள் - டெல்ஸ்டார்'

* 1977 - அக்டோபரில் 'சோயுஸ்-26' விண்கலத்தில் சென்ற ரஷ்ய வீரர், ரஷ்யாவில் மிதக்கும் விண்வெளி ஆய்வு கூடம் 'சல்யூட்-6' உடன் இணைந்து மூன்று மாதங்கள் தங்கி ஆராய்ச்சி செய்துவிட்டு பூமிக்குத் திரும்பினார். விண்வெளிப்பயண வரலாற்றில் முதன் முதலாக அதிக நாட்கள் விண்ணில் தங்கியது இதுவே முதன் முறை.

* 1987 - ஏப்ரலில் ரஷ்யா விண்வெளியில் தொழிற்சாலையை நிறுவி புரட்சி செய்தது. இதில் செமி கண்டக்டர்கள், லேசர் கருவி, புற ஊதாக்கருவி, மின்னணுக்கருவி போன்றவற்றில் பயன்படும் மானோ கிரிஸ்டல்கள் முதலியவற்றை, புவிஈர்ப்பு விசையில்லாத எடை குறைவான நிலையில் குறைந்த செலவில் தயாரிக்க முடிந்தது.

1987க்குப் பிறகும் கடந்த 8 ஆண்டுகளில் இன்னும் பல நிகழ்வுகள் அடுத்த புத்தகத்தில் தருகிறேன்.

செம்பிலே நீர் எதற்கு?

இந்துக குடும்பங்களில் குடி தண்ணீரைச் செப்புக் குடத்தி லேயே வைத்துக் குடிகும் பழக கம நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அது ஏன் என்பதற்கு நமது கவியரசர் கண்ணதாசன் விளக்கு மட்டுமா சிவப்பு? என்ற நாவலில் தந்திருக்கும் தகவல் இது.

* செம்பு கலந்த தண்ணீர் காம உணர்வுகளைக் குறைத்துத் தடுக கும் முக்கியமாக இந்து விதவை கள் செம்பிலே நீர்த்தம் வைத்து அதிலே துளசி இலைகளைப் போட்டு குடிக்கிறார்கள்.

10 ஆண்டுகளில் 10 ஆயிரம் அறுவைச் சிகிச்சைகள்

'அப்பல்லோ' எனறால் வி வெளிக் கலசம் மட்டும் அல் அது புகழ்பெற்ற சென மருத்துவமனையின் பெய மாகும்.

ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண் களில் 10 ஆயிரம் இருதய அ வைச் சிகிச்சைகள் நடத்தி இருக்கின்றன.

10 ஆயிரமாவது அறுவை அப்தாப் என்ற 3 வயது சிறு லுக்கு நடந்துள்ளது.



சுந்தராம்பாளுக்கு ஒரு வாரிசு!

'ஞானப் பழத்தைப் பிழிந்து, ரசம் அனுபவிப்போடு நாம் உண்ணவும் கொடுத்த சங்கரன் கும்பிடும் தண்டபாணித் தெய்வமே'

இப்படியொரு பாடலை 95 ஆண்டுகளுக்கு முன்னால் சங்கரதாஸ் சுவாமிகள் பழனி முருகன் சந்நிதியில் இயற்ற, ஓர் இசைக் குயிலை, ஒரு கோகிலவாணியை கொடுமுடி தந்த சந்தராம்பாளாக தமிழ் இசையுலகம் பெற்றது.

பத்தாண்டுகளுக்கு முன் அந்த 'ஔவையார்' நீங்கா உறக்கம் கொண்டார். ஆனாலும் அவர் இன்னும் உயிர் வாழ்வது போல ஒரு கோவை கமலா ஒரு வாரிசாக அவர் குரலையே வரித்துக் கொண்டு வலம் வருகிறார் தமிழகத்தில்.

கே.பி. சுந்தராம்பாளை அறியாமலும் பார்க்காமலும் அவரை மானசீகக் குருவாகக் கொண்டு பாடத் துவங்கிய 38 வயதுக் கமலா ஒரு கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

கே.பி.எஸ். ஸின் கடைசிக் காலத்தில் நேருக்கு நேர் சந்தித்து தன் பாடல் திறமையை அவரிடமே வெளிப்படுத்தி, 'இனி, நீதான் என் வாரிசு'' என்று பாராட்டுப் பெற்றுக் கொண்டவர். எம்.ஜி.ஆரும் கோவை திரைப்பட விழாவில் அப்படியே அழைத்துப் பிரபல்யம் அடையச் செய்தார். முன்னால் பிரதமர் இந்திரா காந்தியும் இவரது பாடல் நிகழ்ச்சியில் இறுதிவரை அமர்ந்து கேட்டதைப் பெருமையாகக் கருதுகிறார்.

புகைப்பிடிக்காதிருக்க புதுப்புது உத்திகள்

கஜகஸ்தான் (ரஷ்யா) 'தெல்மான்ஸ்கி' அரசுப் பண்ணையில் உள்ளவர்களுக்கு நல்ல வாய்ப்பு.

அங்கே புகை பிடிக்காதவர்களுக்கும், நோய்க்கால விடுமுறை (மெடிக்கல் லீவு) எடுத்துக் கொள்ளாதவர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை நாட்களின் எண்ணிக்கை நான்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. அருகில் உள்ள மற்றொரு பண்ணைத் தொழிலாளர்களுக்கும் இன்னொரு அதிர்ஷ்டம். அவர்கள் புகை பிடிப்பதை நிறுத்தினால் வாடகை தள்ளுபடி உண்டு.

ஒரு பெட்டிக்குப் பெயர் 'பட்ஜெட்'

'பட்ஜெட்', 'பட்ஜெட்' என்கிறார்களே அது உண்மையில் ஒரு பெட்டியின் பெயர். அக்காலத்தில் இங்கிலாந்து நாட்டின் நிதி மைச்சர் - வரவு செலவுத் திட்டக் குறிப்புகளை உள்ளடக்கிய ஒரு தோல் பெட்டியைக் கையோடு கொண்டு சென்றார். அந்தப் பெட்டிக்கே அந்தப் பெயரை வைத்தார். இன்றைக்கு வரையிலும் நிலைத்து நிற்கிறது.

வெள்ளைக் கிளியே, வா வா!

காகம் என்றால் கருமை நிறமானதென்றும் - மயில் இறக்கைகள் பல வண்ண நிறங் கொண்டதென்றும் -

கிளியை நினைத்தால் பச்சை வண்ணமே என்றும் அறிந்து வைத்திருக்கின்ற நாம், வெள்ளைக் காக்காவை ஓரளவுக்குத் தெரிந்திருக்கிறோம்.

இதுபோல வெள்ளைப் புலி, வெள்ளை ஒநாய், வெள்ளைக் கரடி, பால் நிற வெள்ளாடு ஆகியவற்றுடன் வெள்ளைக் கிளியையும் அறிந்திருக்கிறோமா?

படத்தில் வலது புறத்தில் காணப்படுவது பார்க்க அழகாக இருக்கிறது. அதற்கொரு வருத்தம். அதை வேறு நிறத்துக் கிளிகள் சேர்த்துக் கொள்வதில்லை. ஆகவே தனியாக ஒதுங்கியே வாழ்கிறது. இங்கே நிழற் படத்திற்காக நீலக் கிளியொன்றுடன் சேர்ந்து 'போஸ்' கொடுக்க சம்மதித்தது.

பொதுவாக உயிரினங்களில் வெள்ளை நிறமல்லாத ஜீவராசிகளுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை. அது வெள்ளையை ஒதுக்கி வைக்கும். (மனிதர் வர்க்கத்திலிருந்து காப்பியடித்த பழக்கமோ என்னவோ) அதனால் நிறையவே கஷ்டம். பாவம்!

ஜப்பானியர்களை ஜோதிடம் ஆட்டிப் படைக்கிறது

இந்திய இலங்கை மக்களின் 'பேவரிட்'டான ஜோதிடம் இப்பொழுது ஜப்பானியர்களை ஆட்டிப் படைக்கிறது.

ஒரு ஜோதிட இதழ் ஓர் இலட்சத்திலிருந்து நாலு லட்சத்திற்கு அதிகரித்து விட்டது.

வர்த்தக விளம்பரங்களில் ராசியான ஜோதிட வாக்கியங்களை இணைத்துப் பிரகரிக்கிறார்கள்.

அன்றாடம் வாங்கும் உணவுப் பொருட்களின் பேக்குகளுக்குள் வருங்காலம் பற்றிய குறிப்புகள் வண்ண வண்ண அட்டைகளில் வைக்கப்படுகின்றன. இதில் ஜப்பானியப் பெண்களுக்குப் பெரும் மோகம்.

'இன்று எந்தக் கலர் லிப்ஸ்டிக் பூசினால் அதிர்ஷ்டகரமாக இருக்கும்' என்ற குறிப்புக்களை உடைய அழகுப் பொருட்களுக்குக் கிராக்கி.

'தமிழ் நாடு'ம் சங்கரலிங்க நாடாரும்.

தமிழ் பேசும் மக்கள் வாழும் ன்னிந்தியாவுக்கு 'தமிழ்நாடு' ாப் பெயர் சூட்ட வேண்டும் 38 ஆண்டுகளுக்கு முன் 56) 77 நாட்கள் உண்ணா விர

த்தம் இருந்து உயிர்த் தியாகம் செய தார் ஓர் உத்தமர். அவரே சங்க ரலிங்க நாடார். அவருக்கு 'தமிழ் காவலர்கள்' ஏதாவது செய்தி ருக்கிறார்களா என விளக கெண்ணெய் போட்டு தேடிக் கொண்டிருக்கிறேன்.

இதுதான் மனித நேயம்

அலுவலில் ஈடுபட்டிருந்த தந்தையை தன் குறும்பால் இடையூறு செய்து கொண்டிருந்தான் அவரது எட்டு வயதுப் பாலகன். மகனின் கவனத்தை வேறு திசையில் திருப்ப வேண்டும் என்பதற்காக அருகில் இருந்த ஒரு உலகப் படத்தை எடுத்து சுக்கு நூறாகக் கிழித்து மகனிடம் கொடுத்து 'இதை ஒன்றாக சேர்த்து உலகப் படத்தை கொண்டுவா?" என்று கூறி தன் அலுவலில் ஈடுபட்டார் தந்தை. மகனால் அது முடியாது வேலையில் ஈடுபடலாம் என்ற நம்பிக்கை.

தந்தையின் நம்பிக்கை வீண் போனது.

அவர் எதிர்பாரத வகையில் ஒரு ஐந்து நிமிட அவகாசத்துக் குள்ளாகவே கிழிக்கப்பட்ட உலகப் படத்தை எந்தெந்த நாடு எங்கெங்கு இருக்க வேண்டுமோ அங்கெல்லாம் சரியாக வைத்து மகன் தந்தையிடம் கொடுத்தான்.

ஆச்சரியப்பட்ட தந்தை 'எப்படி இது முடிந்தது?' என்று கேட்டபோது மகன் சொன்னான்.

உலகப் படத்துக்குப் பின்னால் ஒரு மனிதனை சரியாகப் பொருத்தி விட்டேன். உலகம் வந்து விட்டது.

மகனைப் பார்த்து தந்தை சொன்னார்:

"மனிதனைப் வைத்து உலகத்தைப் பொருத்தி விட்டாய். மனி தன் உலகத்தை சரியாகப் பொருந்திக் கொண்டால் அதுதான் மனித நேயம்."

அபிவையார்

தமிழில் முதல் கணித நூல் இலங்கையில்

1849ம் ஆண்டில் வெளியான 'பால கணிதம்' தமிழில் வெளி வந்த முதல் கணித நூலாகும். இது இலங்கையில் வெளியிடப் பட்டது என்கிறது 'முத்தாரம்' சஞ்சிகை.

இரண்டணா விலையில்



இரண்டாயிரம் பிரதிகள்.

ஆயிரம் பிரதி அடித்தால் அதில் ஐநூறு பிரதி போகுமா என்று இலக்கிய வாதிகள் அச்சப்பட்டுக் கொண்டிருக்கிற ஒரு கால கட்டம் இது. ஆராய்ச்சி அறிஞர் கலாநிதி ம.மு. உவைஸ் (இலங்கை) அவர்களிடமுள்ள ஓர் 'இலக்கியப் புதைய'லில் நான் ஒரு நூலைக் கண்டேன். வயது 91. அப்பவே இரண்டாயிரம் பிரதிகள். இரண்டே அணாக்கள் விலை. கொழும்பு 'நடராஜா' அச்சகத்தில் பதிப்பு. 'கீர்த்தி மிகு கீழக்கரை' இரத்தத்தில் உதித்து கற்பிட்டி 'திகழி' கிராமத்தில் வாழ்ந்து புகழ் பரப்பி, 'திகழிக் கவிஞர்' என்று பெயரெடுத்து தனது 34வது வயதில் அங்கேயே இறைவனடி சேர்ந்த அப்துல் மஜீதுப் புலவர் ஆக்கம்.

ஸ்பெஸல் சைவம்

குற்றாலீஸ்வரன் ஒரு சைவம்!

சமீபத்தில் நீரில் சாதனைகள் பல புரிந்த குற்றாலீஸ்வரன் என்ற சிறுவன் மிக மிக சுத்தமாக சைவமாம். அவன் அசைவம் சாப்பிட்டதேயில்லை. முட்டை கூட பிடிக்காது.

இதேபோல, பிரபல டெனனிஸ் வீரர்களான போரிஸ் பெக்கர், சாம்பிராஸ், மார்டினா நவ்ரத்தில்லோவா ஆகியோரும் சுத்தமான சைவர்கள்.

பஞ்சாப்பில் உள்ள மல்யுத்த வீரர்களும் அப்படியே.

சைவம் சாப்பிட்டால் கலகம் குறையும்.

சைவ உணவு சாப்பிடுவது நாட்டில் நடக்கும் கலகத்தைக் குறைக்க உதவும் என்பது மறைந்த முன்னாள் இந்திய ஜனாதிபதி ஜெயில் சிங் தகவல்.

''வெஜிடேரியன் என்பது வெறும் உணவு குறித்த பிரச்சினை அல்ல. அது ஒரு வாழ்க்கை முறை. சொல்லப்போனால் நாட்டில் நடக்கும் கலவரம், வன்முறை ஆகியவற்றைக் குறைக்க, அடங்கிப் போகச் செய்ய 'வெஜிடேரியன்' உதவும் என அவர் ஒ உணவு மாநாட்டில் சொல் யுள்ளார்.

அங்கத்தில் குறைதான் ஆனால்...

சில ஆண்டுகளுக்கு முன் (1988ல்) மலேஷியா கோலாலம்பூர் நீதி மன்றத்தில் நெஞ்சை நெருடும் நிகழ்ச்சி.

கால்களிரண்டையும் பிறவியிலேயே இழந்து, கை ஒன்றையும் இல்லாமலாக்கிக் கொண்ட 28 வயது துவான் ஜோஹாரி அதான் மலேயாப் பல்கலைக்கழகத்தில் வக்கீலாக சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். அதே பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் ஹானர்ஸ் பட்டம் பெற்ற அந்த 'துவான்' தனது இயற்கைக்குறைகளை ஒரு பெரும் குறையாகவே நினைக்கவில்லை.

தடுமலுக்கும் இருமலுக்கும் தடுமாறிப் போய் ஸ்பெஷலி
களைத் தேடுகிற நாம், அல்லது சிறு காயத்திற்கும் புண்ணுக்
'பெட் ரெஸ்ட்' எடுத்துப் பழகி வாழ்க்கையே இருண்டு விட்ட
கருதுவோருக்கு கால்களை இழந்து கையை இல்லாமலாக்கிய
ஒரு சவால்.

மலாக்கா மண்ணில் பிறந்த துவான், 9 பிள்ளைகள் பிறந்த
குடும்பத்தில் நாலாமவர். பெற்றவர்கள் அவரை ஒதுக்கி
ஒன்றுக்கும் லாயக்கற்றவராக ஆக்கியிருக்கலாம். ஆனால்
கள் இலட்சத்தில் ஒரு தாய் தந்தை, ஒன்றுக்கும் உதவாத
உயர்ந்த ஒரு தொழிலில் கொண்டு போய் வைத்து விட்டார்கள்

'தங்கத்திலே 'ஒரு குறையிருந்தாலும் தரத்தினில்
வதுண்டோ? அங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் அன்பு
வதுண்டோ? என்று பல தத்துவங்களைச் சொல்லும் கவி
கண்ணதாசன் பாடலுக்கு இதைவிட இலக்கணம் தேவையா?

இப்படத்தை அன்பளித்த
கொழும்பின் கலை, இலக்கிய ஆர்
எம்.எஸ்.ஷாஜஹ

திருக்குர்ஆனின் மிகத்தொன்மையான அச்சுப் பிரதி

நான்கு நூற்றாண்களுக்கு முன் 16ம் நூற்றாண்டில் அச்சான குர்ஆன் பிரதியொன்று அண்மையில் கிடைத்துள்ளது. இது உலகில் முதன் முதலில் அச்சான குர்ஆன் பிரதி எனக் கருதப்படுகிறது. இத்தாலி வெனிஸ் நகரிலுள்ள ஒரு நூலகத்தில் (செயின்ட் மைக்கல்) பண்டைக்கால நூல்களின் மத்தியில் அது அடுக்கி வைக்கக் காணப்பட்டது.

மிலான் பல்கலைக்கழக அறபு மொழி இலக்கியத்துறைப் பேராசிரியர் சொஜியோ நோவா தகவலின்படி, அப்பிரதி கி.பி 1537ல் வெனிஸ் நகரில் பெகின்னோ என்பவரால் அச்சிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இலவச 'ஹலோ'க்கள் இங்கே....

சென்னை விமானத் தளம் சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்பட்டதிலிருந்து பிரயாணிகள் பிராணிகளாகக் கருதப்படுவதில்லை.

ஒவ்வொருவரும் வி.ஐ.பி.கள். ஒவ்வொருவரும் இந்திய அதிதிகள்.

ஒரு செக்கிழுரிட்டி செக்கிங். அப்புறம் விமான வரி செலுத்தல் பிறகு பொருட்களை போட்டு கடைசியாக கடவுச்சீட்டை சரி பார்த்தல் அதைத் தாண்டினால் ஓர் இடத்தில் கையில் வைத்திருக்கும் பொருட்களைச் சோதிப்பார்கள். அவ்வளவே.

இவை அத்தனையும் எந்தவிதச் சிரமமுமில்லாமல் நடக்கின்றன.

பெட்டிகளைத் திறந்து பொருட்கள் ஒவ்வொன்றையும் பரிசோதித்து அதைக் கொண்டு போக முடியாது இதைக் கொண்டு போக முடியாது என்ற பேச்சுக்கே இடமில்லை.

ஆகவே தரிப்பிடத்தில் நிறையப் பொழுதிருக்கிறது. நேரம் வெறுமனே சிரிக்கிறது. கையில் வைத்திருந்த அத்தனை பத்திரிகைகளையும் கடித்துக் குதறிய பிறகும் என்போன்ற வர்களுக்கு நிறைய நேரமிருந்தது. இனி என்ன செய்யலாம் எனத் தடுமாறிக் கொண்டிருந்த பொழுது 'அது' பார்வையில் பட்டது. அருகிலேயே 'இலவசம்' என அறிவிப்பு.

நேரத்தைப் போக்க இதுதான் சரியான வழி என்ற முடிவில் இலக்கங்களைத் தேடி பலருக்கும் ஹலோ, ஹலோ என்றேன்.

ஆமாம் காசு எதுவும் போடாமல் தொலைபேசியில் இலக்கங்களைச் சுழற்றி எத்தனை ஹலோக்களும் போட்டுப் பேசலாம் என்று வசதி செய்திருக்கிறார்கள். ஆனால் இது பிரயாணிகளுக்கு மட்டும், பிரயாணிகள் பிரத்தியேகமாகத் தங்கும் இடத்தில் மட்டும்.

தமிழகத்தின் திருநெல்வேலிச் சீமை போல தஞ்சாவூர்ப் பகுதியும் தனிச் சிறப்புக் கொண்டது.

அந்தப் பகுதி கலையை வளர்க்கும்.

ஆன்மீகத்தைப் பரப்பும். எங்கும் இயற்கைச் சூழல்.

அந்த மண்ணின் மைந்தர்களின் மனங்கள் விசாலமானவை.

மத நல்லிணக்கம் அவர்கள் மத்தியில்.

தஞ்சாவூரில் பெரிய கோயில் இருப்பதும், நாகபட்டினத்தில் அன்னை வேளாங்கண்ணியும், நாகூரில் சாஹுல் ஹமீது நாயகமும் வாழ்வாங்கு வாழ்வதும் சுமார் 50 மைல்கள் இடைவெளித் தூரத்துக்குள்ளேதான்.

பாருங்கள் படத்தை. இது அவளது ஆலயம் என்று எழுதினால் நம்பமாட்டீர்கள். ஏதோ, வெளிநாடு ஒன்றில் உள்ளது என்றுதான் அடித்துச் சொல்வீர்கள்.

ஒரு திறந்த வெளிக் கிராமத்தில் இப்படி அழகுருவான ஆலயம்.

அன்னையின் அற்புதங்கள் வெளியுலகுக்குத் தெரிய வந்து 500 ஆண்டுகளுக்கு மேலாகின்றன.

இலங்கையை ஆக்கிரமிக்க 16ம் நூற்றாண்டில் (1505) வந்த போத்துக்கீசியர் அதற்கு கடல் மார்க்கத்தையே தேர்ந்தெடுத்தனர். அப்படி வந்த இடத்தில் ஒரு குழுவினர் கடல் அன்னையின் ஆத்திரத்திற்குப் பலியாகவிருந்த வேளையில் தப்பி கரை சேர்ந்தது நாகபட்டணத்தைச் சேர்ந்த வேளாங்கண்ணி கிராமத்தில்தான். அங்கே ஒரு குடிசை ஆலயத்தில் குடியிருந்த மாதாவே தங்களை காத்தாள் என போர்த்துக்கேசியர்கள் நம்பினார்கள். அவளுக்கென பெரும் ஆலயமொன்றுக்கு அடிகோலினார்கள்.

அன்றிலிருந்து அவளது அற்புதங்கள் வெளியுலகிற்கு வெளிச்சமாயின.

ஒவ்வொரு தினமும் தரிசிக்கும் நூற்றுக் கணக்கானோர், செப்டம்பர் மாதமானதும் பல்லாயிரமாகப் பெருகுகின்றனர்.

வியக்கும் தகவல்கள் பலவற்றுள் ஒன்று -

இலங்கைக் கடலில் அன்னைபேரால் புட்டிகளில் அடைத்துப் போடப்பட்ட காணிக்கைகள் அவளை அடைந்ததுண்டு!. இன்றும் அவை பாதுகாக்கப்படுகின்றன.

மேலும் விழாக் காலங்களில் நடக்கும் பல புதுமைகளுள் தமிழக கிறிஸ்தவர்கள் சிலர் இந்து சம்பிரதாயப்படி 'திருப்பதி மொட்டை' அடித்துக் கொள்வது.

எப்படியோ இன பேதமோ, மத பேதமோ அற்றவளாக அன்னை வேளாங்கண்ணி காட்சி கொடுப்பதை ஆயிரம் முறை வாழ்த்தி வரவேற்க வேண்டும்.

(இந்த எழுத்துக்களை உருவாக்க 'தினகரன்' முன்னைநாள் எழுத்தாளரும் எனது நெருங்கிய அன்பருமான திரு ஜெரால்ட் மெல் உதவிக்கரம் நீட்டினார். நன்றி பல)

தொழும் போது ஏன் இந்த முகமூடி?

வளைகுடாப் போரின் நிகழ்வு ஒன்றினைச் சித்தரிக்கும் இந்தப் படம் 'உலகப் புகழ்பெற்ற நிழற்படம்' என்ற மகுடத்தில் பெரும்பாலான உலக சஞ்சிகைகளில் பிரசுரமாகியுள்ளது. தமிழ் 'முத்தாரம்' இதழும் தந்துள்ளது.

இறைவனைத் தொழும் முஸ்லிம் ஒருவருக்கு ஏன் இந்தக் கோலம்?

அந்தப் போரின் பொழுது இரசாயன விஷக் குண்டுகள் எந்த நாட்டிலும் வீசப் படலாம், வெடிக்கப்படலாம் என்ற அச்சம் இருந்தது. முக்கியமாக இஸ்ரேலிலும், சவூதி அரேபியாவிலும் பெரும் அச்சுறுத்தல். இஸ்ரேல் எகூதியர்கள் 50 லட்சம் விஷவாயு முகமூடிகளை உபயோகித்தார்கள். சவூதி அறபிகளும் அப்படியே? அவர்கள் ஐவேளைத் தொழுகையிலும் அணிந்த வண்ணம் கடமையை நிறைவேற்றினார்கள். அப்பொழுது பள்ளிவாசல் ஒன்றில் 'கிளிக்' ஆன படம் இது.

பொற்கோயிலுக்கு அடிக்கல் நாட்டிய முஸ்லிம்

இந்தியாவிலேயே பணக்கார மாநிலம் பஞ்சாப். சீக்கியர்கள் வாழுமிடம். தலையில் டர்பனும், தாடியும் உடைய சீக்கியர்கள் உலகெங்கும் பரந்திருக்கிறார்கள். 'காலிஸ்தான்' எனத் தனிநாடு கேட்டுப் பல உயிர்கள் பலியாகிவிட்டன.

அவர்களுடைய புனித கோயில் 'பொற்கோயி'லாக அமிர்தரஸ் என்ற நகரிலுள்ளது. கஃபா பள்ளி மக்காவில் உள்ளது போல.

இந்தக் பொற்கோயிலைப் பற்றிய ஒரு சுவையான தகவல் இப்போது வெளியாகியுள்ளது.

✸ அந்தப் பொற்கோயில் கட்டப்பட முடிவானபோது அதற்கு அடிக்கல் நாட்டியவர் ஒரு முஸ்லிம் துறவியாகும். (ஃபக்கீர்)

நர்கீஸ் முஸ்தபா ஹுஸைனுக்கு சந்தனம்மாள் கவுரவம்

மின்னாமல், முழங்காமல் மிக மிக அமைதியோடு 'நர்கிஸ்' என அழகிய மலரின் பெயரைச் சூட்டிக் கொண்டு 22 ஆண்டுகளுக்கு மேலாக முஸ்லிம் மாதர்களுக்கென ஒரு தமிழ் சஞ்சிகை வந்த வண்ணம்.

இதன் மௌசு பற்றி நாளெல்லாம் பொழுதெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கலாம். இன்று தமிழகத்திலேயே முஸ்லிம் சஞ்சிகைகளில் அதிக விற்பனையுள்ளதாக முதலிடத்தில் இருக்கிறது.

அதன் முதுகெலும்பாக ஒரு முஸ்தபா ஹுஸைன் பெரியவர் அன்னாருக்கு சந்தனம்மாள் விருது.

யார் இந்த அம்மையார்?. இன்று தமிழகத்தில் கலை-இலக்கிய சேவையில் முன்னணியில் நிற்கும் பெரும் தொழில் அதிபர் பெருமைக்குரிய உயர் திரு வி.ஜி.சந்தோஷம் அவர்களையும் அவரது அருமைச் சகோதரர் காலஞ்சென்ற வி.ஜி.பன்னீர்தாஸ் அவர்களையும் ஈன்றெடுத்தவரே அருமைச் சந்தனம்மாள் அவர்கள்.

அந்த மூதாட்டியின் நினைவில் செயல்படும் அறக்கட்டளையின் சார்பில் இலக்கியப் படைப்பாளர்களுக்கும், கவிஞர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் ஆண்டு தோறும் பரிசும் பாராட்டிதழும் வழங்கிக் கௌரவிப்பது செயல்பட்ட வண்ணம் உள்ளது. அந்த வகையிலேயே 1991ம் ஆண்டிற்கான விருது பெரியவர் முஸ்தபா ஹுஸைன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இரண்டு பெரும் சிறப்புகள்

✸ ஒன்று - ஒரு சிரேஷ்ட தமிழக முஸ்லிம் எழுத்தாளர், பத்திரிகையாளர் அடைந்துள்ள கௌரவம்.

✸ மற்றொன்று - தமிழகத்தில் பலநூறு ஆண்டுகளாக நிலவி வரும் ஒருமைப்பாட்டுணர்வை சாந்தி சமாதான சகோதரத்துவ சக வாழ்க்கையை நின்று நிலைக்க வைக்க எடுக்கப்பட்டுள்ள முயற்சி.

1991க்குப் பிறகு கடந்த நான்காண்டுகளிலும் இன்னும் வேறு சில முஸ்லிம் எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்கள் கௌரவிக்கப்பட டுள்ளனர். இலங்கைக்குப் பெருமை சேர்க்க நான்.

'அண்ணாச்சி' வி.ஐ.பி. சந்தோஷம் அருமை அன்னையார் சந்தனம்மாள் பெயரில் ஆற்றிவரும் அருந்தொண்டுக்கு ஆயிரமா யிரம் 'நர்கிஸ்' மலர்களை அள்ளிச் சொரிகின்ற நேரத்தில், 'நர்கிஸ்' பெரியவர் பின்னணி பற்றியும் தெரிவோம். அவர் 'தூத்துக்குடி முஸ்தபா ஹுஸைன்' எனப் புகழ் கொண்டவர். பாளை யங்கோட்டை புனித சவேரியார் தயாரிப்பான அவர், 1940லேயே திருநெல்வேலி (நெல்லை) சைவ சித்தாந்த சபை நடத்திய மாவட்ட சொற்பொழிவுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றுக் கொண்ட வர்.

37 ஆண்டுகள் தென்னக ரயில்வேயில் சேவையாற்றிக் கொண்டே தாருல் இஸ்லாம், சைபுல் இஸ்லாம், பால்யன், சன்மார்க்க சங்கு, இஸ்லாமிய தாரகை, மறுமலர்ச்சி, கண்மலர் ஆகிய பத்திரிகைகளில் 1945 முதல் தொடர்ந்து அரசியல், இலக்கிய சமூக கட்டுரைகள் எழுதி வந்துள்ளார். தமிழகம் முழுவதும் மீலாது மேடைகளில் சொற்பொழிவாற்றியுள்ளார். அவ்வாறே சிங்கப்பூர். மலேசியாவில் இலக்கியச் சொற்பொழிவுகள், இலங்கை விஜயமும் நடந்ததுண்டு. 'நர்கிஸ்' பிரதம ஆசிரியராகத் திகழும் பெரியவர், தனது அருமை மகளார் அனீஸ் பாத்திமாவுக்கு நிர்வாக ஆசிரியை பதவி வழங்கி கௌரவப்படுத்தியுள்ளார்.

தற்சமயம் உடல் நலம் குன்றிப் படுக்கையில் இருந்தாலும் உள்ளம் தளராமல் உறுதியான எழுத்துக்களை மாதாமாதம் பதிப்பித்த வண்ணம் இருப்பது ஓர் அற்புதமே.

என் வாழ்க்கையில் நான் நேருக்கு நேர் கண்ட பெருமதிப்பிற்கு ரிய பெரியவர், பேச்சாளர், எழுத்தாளர்.



தொலைக்காட்சி பார்ப்பவர்களுக்கு

அறைக் கதவுகளையும் ஜன்னல் கதவுகளையும் இறுக மூடிவிட்டு பார்க்காதீர்கள். காரணம் -

தூய்மையான காற்றிற்கு வரவேற்பு இல்லாமல் போவதுடன் அசுத்தமான காற்றிற்கு 'டாடா' சொல்ல முடியாமல் அசுத்த காற்றையே மீண்டும் சுவாசிப்பதால் உடல் நலம் கெடுகிறது.

எல்லா விளக்குகளையும் அணைத்து விட்டு இருட்டறையில் டெலிவிஷன் பார்க்காதீர்கள்.- காரணம்

டி.வி. திரையிலிருந்து நேரடியாக வரும் ஒரு விதமான ஒளிக் கதிர்கள் நம் கண்களுக்கு இதமாக இருப்பதில்லை. மேலும் கண்ணில் இருக்கும் மென்மையான விழித்திரை நாளடைவில் பழுதடைந்துவிடும்.

தொடர்ந்து அவ்வாறு அதிக சத்தத்துடன் கேட்பதால் செவிப பறைகள் பழுதடைந்து காது கேட்பதில் குறைவு ஏற்படக்கூடும்.

டி.வி. திரை உங்கள் கண் பார்வைக்கு நேர் எதிர் கோணத்திலோ அல்லது சற்று உயரமாகவோ இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். தாழ்வான டி.வி. திரையை நீண்ட நேரம் குனிந்து பார்ப்பது அவ்வளவு நல்லதல்ல. காரணம் -

கழுத்து வலிப்பதுடன் முதுகுக் கூனல் ஏற்படவும் வாய்ப்புகள் அதிகம்.

டி.வி. பார்க்கும் போது டி.வி.யிலிருந்து குறைந்தது 10 அடி தூரமாவது இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

நம் வாழ்க்கையில் தொலைக்காட்சியும் அதன் பெட்டியும் மிக முக்கியமா னதாகி விட்டதால் 'தைரியமாக' ஒரு தமிழக சஞ்சிகையிலிருந்து 'காப்பி' அடித்திருக்கிறேன்.
இதழுக்கு நன்றி.

ஆண்மையை அதிகரிக்கும் பாம்பு உணவு

பாம்பு சூப் ருசிக்காக மட்டும் அல்லது ஆரோக்கியத்துக்காகவும் சாப்பிடுவது சீனர்களிடையே காணப்படும் ஒரு பழக்கம். அதுவும் குளிர்காலம் துவங்கியதும் நன்றாகக் கொதிக்க வைத்த பாம்பு சூப்பில் ஒரு கப் அருந்தி விட்டால் ஸீஸன் முழுவதும் குளிர் தெரியாமல், உடம்பின் உஷ்ண நிலை சீராக வைக்கப்படும் என்று நம் தலையில் அடித்துச் சத்தியம் பண்ணா குறை.

தவிர, பாம்பு சூப் ஆண்மை பெருக உதவுமாம். அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார்கள். விரும்பிச் சாப்பிட அதுவும் காரணம்.

வலை பின்னிய கூண்டுகளில் வகை வகை பாம்புகளை கடைகளில் வைத்திருக்கிறார்கள். நமக்கு எது வேண்டும் என்று சுட்டிக் காட்டினால் இடுக்கியில் அதைப் பிடித்து எடுத்து கண்ணெதிரே கொன்று நட்நடு வாசலில், எரியும் அடுப்பு மேல் இருக்கும் குண்டான் தண்ணீரில் போட்டு கொதிக்க வைக்கிறார்கள். பிறகு ஓரிரு மூலிகைப் பொடிகளைச் சேர்த்து ரசத்தை கிண்ணத்தில் விட்டுக் கொடுக்கிறார்கள்.

உயிரோடு இருக்கும் பாம்புகள் ஒரு பக்கம், செத்து 'ஊறுகாயாக மாறின பாம்புகளை கொண்ட ஜாடிகள் இன்னொரு பக்கம். வடகம் மாதிரி காயவைத்த பல்லி, நீர் குதிரை, ஈசல் குவியல்கள் இன்னொரு பக்கம் என்று இருக்கும் கடைகளில் ஐந்து நிமிஷங்களுக்கு மேல் நிற்க முடியாமல் ஒரு வாடை வேறு. என்ன கேட்கும் போதே வயிற்றைப் பிரட்டுகிறதா?

ஆனால் 'புரியாணி' மாதிரியான சாப்பாடு அவர்களுக்கு.



கால் பந்தாட்டம் தோன்றக் காரணம் ஒரு மண்டையோடு

புட்போல் என்ற கால் பந்து விளையாட்டு கோடிக்கணக்கா னவர்களைக் கவர்ந்துள்ளது.

இது தோன்றக் காரணம் ஒரு மண்டையோடு. அதுவும் ஒரு டென்மார்க் பிரஜையின் மண்டையோடு.

11ம் நூற்றாண்டில் இந்த டென்மார்க் காரர்கள் இங்கிலாந்தை ஆண்டனர். அவர்கள் மீது மக்களுக்கு அளவிட முடியாத வெறுப்பு. அவர்கள் ஆட்சிப் பொறுப்பை விட்டகன்ற பிறகும் வெறுப்பு மாறவில்லை. ஒரு சமயம் புதைபொருள் ஆய்வில் கிடைக்கப் பெற்ற மண்டையோடு டென்மார்க் காரருடையதாக இருக்கக் காணப்பட்டது. அவ்வளவுதான் அதை வந்தவர்களும் போனவர்க ளும் எட்டி உதைத்து மகிழ்ந்தனர். நாளடைவில் இதுவே ஒரு விளையாட்டாகியது.

காரணம் - நாள் தோறும் புதிய மண்டை ஓடுகள் கிடைத்துக் கொண்டிருந்தன. மக்களும் கால்களுக்கு வேலை கொடுத்துக் கொண்டே இருந்தனர்.

இருந்தாலும் தொடர்ந்தும் மண்டை ஓடு கிடைக்குமா? காற்ற டித்த தோல்பையை உதைத்து விளையாடத் தொடங்கினர். அப்படி யும் கூட டென்மார்க் ஆளின் தலையை உதைத்தல் என்றே பெயரிட்டிருந்தனர். 12ம் நூற்றாண்டு வரை இந்தப் பெயரே நிலைத்து அப்புறம் புட்போல் ஆகியது. அப்போதெல்லாம் விளையாட்டில் எவ்வித விதிமுறையும் இருக்கவில்லை. சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் இலண்டன் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகம் முறையான விதிகளை ஆக்கிக் கொடுத்தது.

'சிவ பூசையில் கரடி' அது மிருகமல்ல

'சிவபூசையில் கரடி புகுந்தாற்போல்' என்று ஒரு பழமொழி. இதில் கரடி இல்லாமல் குரங்கு, நாய், நரி அல்லது பாம்பு அல்லது வேறு பிராணிகள் புகுந்தால் குழப்பம் நிகழாதா என்ன? ஏன் கரடியை மட்டும் சொல்ல வேண்டும். செய்வதும் ஏன் சிவபூசையாக இருக்க வேண்டும்? வேறு தெய்வங்களின் பூசையாக ஏன் இருக்கக் கூடாது?

சிவனைப் பல தெய்வங்கள் பூசை செய்ததற்காகப் புரா[illegible] கூறுகின்றன என்பதால் சிவபூசை முக்கியத்துவம் பெறுகின்றது பூசையின்போது மனம் அலை பாயாமல் ஒருமைப்பாட்டுக்கு வேண்டும் என்பது யாவரும் அறிந்ததே. கரடியென இங்கு குறிப்பிடுவது ஒரு ராகம். (கரடி மிருகம் இல்லை) இந்த ராகத்தை வாசித்தால் பூசையில் மனம் ஒன்றியிருக்க மாட்டாது. மனம் பேதலிக்குமாம். ஒன்று படாத மனதுடன் பூசை செய்வது பிரயோசனமில்லை என்பதையே இப்படிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த விளக்கம் கிருபானந்த வாரியார் அவர்களுடையது.

நடை எனும் நல்மருந்து

பல்வேறு நோய்களுக்கு அமெரிக்க மருத்துவர்கள் காலை நடை. மாலை நடை, இரவு நடை, எனப் பல்வேறு நடைகளைப் பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

நடப்போர் சங்கங்கள் மேல்நாடுகளில் பெருகி வருகின்றன. போட்டிகளும் உண்டு.

வால்டர் ஸ்டெய்ன் என்பவர் நியுஜெர்சியைச் சேர்ந்த ஓர் அரசியல் வாதி. இவர் நடக்கும் வழக்கமே இல்லாதவர். நீரிழிவு நோயுண்டு, மருந்துகளை மட்டும் சாப்பிட்டு வந்தார். இரத்தத்தில் சர்க்கரை அளவு 700 ஐத் தொட்டது. (இருக்க வேண்டியது 80-120) நீண்ட நாள் வாழ வாய்ப்பில்லை என மருத்துவரும் கூறிவிட்டார். தற்செயலாக நாளிதழொன்றில் விளம்பரமொன்றைக் கண்டார். அதன்படி நடக்க ஆரம்பித்தார். 3 மாதங்களில் நடைப்போட்டிகளில் கலந்து கொள்ளுமளவுக்குத் தேறி விட்டார். சர்க்கரை அளவு 250 ஆகக் குறைந்தது.

இவரது மருத்துவர் நாஸ்பெர்க் சொல்வது -

'வால்டர் மாதிரியே எல்லா நோயாளிகளுக்கும் நடையையே சிபார்சு செய்தேன். இரவு உணவுக்குப் பின் நடக்கும் போது இரத்தத்தில் சர்க்கரை அளவு குறைகிறது. அமெரிக்க நீரிழிவு நோயாளிகள் சங்கமும் நடையைச் சிபார்சு செய்கிறது''

நடையானது ஆஸ்துமா, நீரிழிவு, இருதய நோய், முதுகுவலி போன்ற பல நோய்களைக் குணமாக்குகிறது. சுறுசுறுப்பை அளிக்கிறது. மனவளத்தைப் பெருக்குகிறது.

வாருங்கள் நாமும் நடப்போம்.

ஒரே எழுத்தாளர் ஆறு இதழ்களில்...

1992-1993 களில் தமிழகத்தின் ஒரு தமிழ் எழுத்தாளர் ஒரே சமயத்தில் ஆறு இதழ்களில் தொடர் கதைகள் எழுதி வந்தார். அந்த வாரத்திற்கு அந்தந்த வாரத்தில்தான் அவர் தொடர் கதையை உட்கார்ந்து எழுதுவாராம். இந்தப் போக்கினால் தொடர் கதைகளுக்கு மதிப்புக் குறைந்து கொண்டு போகிறதென வயிற்றெரிச்சல் பட்டது 'முத்தாரம்' என்ற இதழ். அது சரி, எழுத்தாளர் யார் என்பதை ஊகிக்க முடிகிறதா? 'பாலகுமாரன்' என்பது என் கணிப்பு.

முஸ்லிம் பெயர்களில் வேண்டும் கவனம்

முஸ்லிம் அபிமானிகள் பெயர்கள் வைப்பதில் கொஞ்சம் கவனம் எடுக்க வேண்டும்.

பாருங்கள் இந்தப் பெயர்களை

★ பாஸிக் -	கெட்டவன்
★ மஜ்னூன்-	பைத்தியக்காரன்
★ ஷபீஹா-	மடப்பெண்
★ ஜுனூப்-	மாதவிலக்குக்காரி
★ மிக்னஷா -	தும்புத்தடி

இவை போல இன்னும் நூற்றுக் கணக்கில்.

அழகையும் நாகரிகத்தையும் பார்க்காதீர்கள். கருத்தை கண்டுபிடித்து சூட்டுங்கள்.

கவிக்கோவின் தேர்ந்த தேர்வு நூல்

கவிக்கோ அப்துர் ரஹ்மான் தமிழ் பேசும் இலக்கிய நெஞ்சங்கள் அறிந்த பெயர். அவர் சுத்தமான மதுரைக்காரர். அவரது இரத்தத்தில் இலக்கியம் ஒடுவதற்குக் காரணமே தந்தையார் 'மஹதி' தான். 60 ஆண்டுகளுக்கு முன்னரல் விரல்விட்டு ஜொலித்த முஸ்லிம் சிறுகதையாளர். 1930 லேயே 'ஆனந்த போதினி'யில் இவரது முதல் கதை வந்தது. கீழக்கரை இஸ்லாமிய - இலக்கியச் சந்திப்பில் இலங்கை முனைவர் (கலாநிதி) நுஃமான் அவர்களுக்கு அவரது சிறுகதைத் தொகுதி 'இமயத்தின் சிரிப்பு' ஒரு சில பிரதிகளைத் தனயனார் வழங்க அதிலொன்று நானும் பெறக் கிடைத்தது பாக்கியமே. அந்தக் காலத்தில் இரண்டே ரூபாய் விலையில், அழகிய மூவர்ண அட்டையுடன் 192 பக்கங்களில் மதுரை, சீழ்ச் சந்தைப் பேட்டை சாந்தி மன்றம் வெளியிட்டுள்ளது. அருமையான சமூக வரலாற்றுக் கதைகள் 15 அடங்கியுள்ளன. இது என் புத்தகப் பெட்டகத்தில் ஒரு பொக்கிஷம். இதனை புதுத் தலை முறைக்கு மறு பதிப்பாக்கி 'கவிக்கோ' சரித்திரம் படைத்தால் என்ன?

பழம்பெரும் பைபிள்

லத்தீன் மொழியில் பக்கத்திற்கு முப்பத்தாறே வரிகள் உள்ள பைபிள் உண்டு. 1460ம் ஆண்டு அச்சுப் பதிவு. இதுபோன்ற மதமும் இன்னும் 13தான் இருக்கின்றனவாம். இது வெளியாவதற்கு 4 ஆண்டுகளுக்கு முன் அச்சில் ஏறிய மற்றொரு பைபிளில் பக்கத்திற்கு 42 வரிகளாம் இதுவும் 48 பிரதிகள் மட்டுமே உலகில் உள்ளன.

நம்மவர்!

தஞ்சாவூர் மண்ணின் கலை - இலக்கிய - ஆத்மீகப் பாலத்தில்

முப்பெரும் தமிழ் மன்னர்களில் சோழப் பெருமன்னன் ராஜ ராஜ சோழன் தன்னிகரில்லாதவன்.

அவன் ஆண்ட தஞ்சையின் (தஞ்சாவூர்) மண் இலேசுமா சானதல்ல.

அவன் காலத்தில் ஆத்மீகம் இனமுயோட, கலையும் இலக்கி யமும் தழைத்தன. இனப் புரிந்துணர்வு இருந்தது. எங்கும் பகமை எதிலும் இனிமை. இயற்கைச் சூழலில் இன்ப வாழ்க்கை வாழ்ந்தனர்.

இன்று என்ன நிலைமை? நேர்மாற்றமா? இல்லவேயில்லை.

இந்தியாவின் வடக்கிலே எது நடந்தால் என்ன, தெற்கு தெற்குத்தான் என்பதுபோல நிலைமை. அதுவும் தஞ்சை மண்ணை யாரும் மாசுபடுத்திவிட முடியாது என்பதை நிருபிக்க அப்துல் காதரும், ஆறுமுகமும் தமிழே எங்கள் தாய் என்று வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இதில் இப்பொழுது 'அய்யம் பேட்டை' சக்கராப் பள்ளி என்கின்ற தஞ்சாவூரின் அழகிய அமைதியான ஓர் ஊர் முக்கி யத்துவம் பெறுகின்றது.

அங்கே ஓர் அற்புதமான பாலம் போட்டிருக்கிறார்கள்.

ஒரு பெரியவர் - பெருமனங் கொண்ட ஓர் இலட்சிய மனிதர் - அல்ஹாஜ் எம். அப்துர் றஹீம் பி.ஏ. அப்பாலத்திற்கு முழு முதற் காரணமாகிறார்.

இவரை நிறுவனராகக் கொண்டு 13 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கும் 'பீ.ஏ. டிரஸ்ட்' என்ற ஓர் அறக்கட்டளை அமைப்பின் உறுப்பினர்களும் வைபவக் குழுவினரும் இப்பொழுது வெகு மும்முரமாக ஏற்பாடுகளில் ஈடுபட்ட வண்ணம். நிகழ்வுக்கான நாட்கள் 1993 பெப்ரவரி 20-21 தேதிகள் என இருந்தாலும், 19ம் திகதி வெள்ளி மாலையிலேயே நபிகள் நாயகம் (ஸல்) புகழ்பாடும் புர்தா ஷரீஃப் நிகழ்ச்சியுடன் ஆரம்பித்து, 'பட்டி மன்றம்' நடத்தவும் ஒழுங்கு செய்திருப்பதால் அதனை மூன்று நாள் திருவிழா என்றே குறிக்க வேண்டும்.'மாபெரும் 14வது திருக்குர்ஆன் திருவிழா' - அருள்மறைக் குர்ஆன் வசன மனனப்போட்டி விழா' எனப் பெயர் சூட்டப்பட்டிருப்பினும் 'கவின்மிகு கவியரங்கம்' 'ஏழைக் குமர்க ளின் திருமண வைபவம்' 'பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்ச்சி' என முத்தான மூன்று நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இதில், கடைசியாக குறித்திருக்கும் தலைப்பு காலமெல்லாம் பொன்னெழுத்துக்களால் பொறித்திருக்கப்பட வேண்டியவை. ஏனெனில் அதில் இலங்கையருக்கும் இடம்.

இந்திய-இலங்கை - கலை இலக்கிய பாலம் அமைய வேண்டும். அதில் இரு நாட்டவரும் செல்ல வேண்டும். ஒரு வழிப் பாதைக்கு மூடுவிழா நடத்த வேண்டும்'. எனப் பல ஆண்டுகளாகப் பலர் எழுதியும் பேசியும் வந்ததை நானும் தொடர்ந்தேன்.

இந்த வகையில் 21.02.93 இரவு 7.15க்கு தஞ்சை மண்ணில் நவரத்தினமாக ஒன்பது பேர் கௌரவிக்கப்படுகையில் அதிர் இருவர் இலங்கைப் புத்திரர்களாகப் பளிச்சிடுவர்.

ஒருவர் தமிழ், ஆங்கில இரு மொழிக் கவிஞரும் பன்னூலாசிரிய ருமான கல்லூட்டுக் கவிராயர் கல்ஹின்னை எம்.எச்.எம். ஹலீம தீன். அவரால் இலங்கை மலையகம் மாபெரும் மதிப்புக குள்ளாகிறது.

மற்றவர் கொழும்பு வாசி. வாராவாரம் 'தினகரன்' (இலங்கை) வாரமஞ்சரி மூலம் வாசகர்களுடன் உறவாடிக் கொண்டிருக்கும் எம்.எம். மக்கீன். (வேறு யாருமல்ல அபிமானிகளே, நானே!)

மேலும் இலங்கையைச் சேர்ந்த வேறு சிலரும் வேறு வகைகளில் போற்றப்பட்டு சிறப்பிடம் பெற உள்ளார்கள்.

★ கொழும்பின் மேமன் சமுதாய பிரபல தொழிலதிபர் அல்ஹாஜ் ஹாஷிம் உமர். திருக்குர்ஆன் வசன மனனப் போட்டியைத் துவக்கி வைக்கிறார்.

★ கொழும்பு வர்த்தகப் பெருமக்கள், ஹாஜிகள் வை.எம். இபுறாஹிம் ஜே.பி., எம்.ஆர்.எம். பாரூக் ஜே.பி., முஹம்மது முஸ்லிம் சலாஹுத்தீன் முதலியோர் 14 வது திருக்குர்ஆன் திருவிழாவுக்கு முன்னிலை வகிக்கிறார்கள்.

சம்மான்காரர் யார்?

இலங்கையில் இந்திய வம்சாவளி முஸ்லிம்களை 'சம்மான்காரர்' எனச் சொல்வது வழக்கம். இதை ஒரு சிலர் அவமானப்படுத்தும் சொல்லாகப் பாவிப்பர்.

உண்மை புரிந்தால் பேச்சு மூச்சற்றுப்போவார்கள் அந்த ஒரு சிலர்.

கிட்டத்தட்ட 91 ஆண்டுகளுக்கு முன் 'இஸ்லாம் மித்திரன்' 1986 ஜனவரி 27ம் ஆம் திகதியிட்ட இதழில் வந்துள்ள விளக்கம் ''சம்மான்காரர்'' என்பதும் 'மரைக்கார்' என்பதும் ஒரு பொருட் சொற்களே. 'மரக்கலம்' என்பதும் 'சம்மான்' என்பதும் சில வகைப் பாய்க்கப்பல்களின் பெயர்கள். பாய்க் கப்பல்களில் பயணம் செய்தவர்களை 'மரைக்கான்' அல்லது 'சம்மான்(காரன்) என அழைத்தார்கள். ஈஸ்ட் இந்திய கம்பனியாரால் இலங்கை ஆளப்பட்ட காலத்தில் இந்திய முஸ்லிம்கள் சிறு பாய்க்கப்பலில் வருவதுண்டு. அவர்கள் கப்பல்களில் பிரயாணஞ் செய்யும் வியாபாரிகளாகவும் மேன்மையுடையவர்களுமாக இருந்திருக்கிறார்கள்.

★ கல்ஹின்னை அல்மனார் மாணவி ஷர்மிளா ஜஸ்மின் கஃபூர் அதே மேடையில் சிறப்புரை.

★ கண்டி மௌலானா எச். சலாஹுத்தீன் பாரி, அகில இலங்கை சமாதான நீதியரசர் நிறைவு விழாப் பேருரையும் துஆவும்.

★ பத்திரிகை நிருபர் எப்.எம்.பைரூஸ் ஒரு பார்வையாளராக அதிதியாக.

(இந்த எழுத்துக்களை நான் 1993 ஜனவரியில் பதித்தேன். பெரியவர் அப்துற் றஹீம் அவர்களது கௌரவிப்பு சென்ற ஆண்டிலும் (1994) இலங்கையருக்குக் கிடைத்தது. அவரைத் தொடர்ந்து தஞ்சாவூர் நீடூர் - நெய்வாசல் (மயிலாடுதுறை) மக்களும் இந்திய -இலங்கைப் பாலம் அமைப்பதில் மும்முரமாக ஈடுபட்டனர். 'டிசம்பர் இறுதியில் அங்கு நடந்த இஸ்லாமிய இலக்கிய ாநாட்டிலும் இலங்கையர் மூவர் கௌரவிக்கப்பட்டனர்.)

கடந்த நூற்றாண்(
காலக்
(இலங்கைப் பொலிஸ்)

கன்னியருக்கு டோஸ்

''கன்னிப் பெண்ணுக்குக் கணவனை தவிர வேறெதுவும் வேணடியதில்லை. கணவன் கிடைத்த பின் அவளுக்கு எல்லாமே வேண்டும்''

- ஆங்கிலப் பழமொழி

திருக்குர்ஆன் பெட்டகம்

இது சரித்திர காலத்திற்கு இட்டுச் செல்லும் படம். சுல்தான் சுலைமான் காலத்தில் அவரது பெரும் பொக்கிஷமாகக் கருதப்பட்டு வந்த 'குர்ஆன் பெட்டகம்' இது. கருங்காலி மரத்தினாலும் முத்துக்கள், யானைத் தந்தம், ஆமையோடு, வெள்ளி முதலியனவற்றைக் கொண்டும் உருவானது. பார்ப்பதற்கு பல ஆயிரம் கண்கள் தேவை.

'பெட்டகம்' என்ற தமிழ்ச் சொல்லை இலங்கையில் 'பொட்டவ'மாகவே பேச்சு வழக்கில் கொண்டு வந்து, வித விதமான குர்ஆன் வகைகளைப் பாதுகாக்க ஒரு 'பொட்டவ'மும் ஹதீஸ் கிரந்தங்களைச் சேகரித்துக் காப்பாற்ற இன்னொன்றும், மௌலிது திரட்டுகளை வைக்க மற்றொன்றுமாக அக்காலத்துப் பெரியவர்கள் பொன்னாகப் பொக்கிஷமாகப் பாதுகாத்தார்களாம். அது வைக்கப்பட்டிருந்த இடம் மிகப் பரிசுத்தத்துடன் இருக்குமாம். எந்த ஊரில் தெரியுமா? வெலிகாமம். இலங்கையின் தென்பகுதியில் உள்ளது.

சட்டென்று தீர்வு சொல்ல இயலாத ஒன்று

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே'

என நமக்கு எப்பொழுதோ 'அட்வைஸ்' தரப்பட்டுள்ளது.

இருந்தாலும் தமிழின் மீதுள்ள ஆர்வத்தால் முழுக்க முழுக்க தமிழாகவே பார்க்க விரும்புவது இயற்கை. தவறில்லை. (அதனாலேயே 'லைட்ரீடிங்' தலைப்பும் சிலருக்கு சுளிப்பைத் தருகிறது).

ஆனால் அறிவியலில் ஆங்கிலச் சொற்கள் உள்ளன. அவற்றைத் தமிழ்ப்படுத்தியே தீர ஒரு கோஷ்டி. 'வேண்டாம் அப்படியே அதைத் தமிழ் எழுத்துக்களில் வடித்து விடுவோம்' என்று மற்றொரு கோஷ்டி.

.மீட்டர் [Meter],லீட்டர் [Liter],கிராம் [Gram],சென்டிகிரேடு [Centigrade],நியூட்டன் [Newton],பாசுகல்[Pascal],அம்பியர் [Amper],வோல்ட் [Volt],எர்ட்ஸ் [Hertz],போன்ற அலகுகளையும், லேசர் [Laser],ரேடார்[Radar],போன்ற காரணப் பெயர்ச் சுருக்கங்களையும், அன்டனா [Antenna],ஏரியல் [Aerial],டிரான்ஸ்பாண்டர்[Transponder],கைரோ[gyro],பூரோட் [Burette],பிப்பெட்[Pipette],போன்ற சில இடுகுறிப் பெயர்களையும் வலிந்து மொழிபெயர்த்துத் திணித்தல் வேண்டுமா? என்பது அவர்கள் கேள்வி.

இந்த நூற்றாண்டில் தொடக்கத்தில் அறிமுகமான பஸ் டிக்கட், எஞ்சின், டிரெயின் - டிராம் - டெலிவிசன் - ரேடியோ - ராக்கட் - சாடிலைட் போன்ற அளவற்ற ஆங்கிலச் சொற்கள் தமிழ்ப்படுத்தப்பட்டுங்கூட அன்றாட வழக்குச் சொற்களாக வேயுள்ளன என்பது அவர்கள் காட்டும் காரணம். (சட் என்று தீர்வு சொல்ல முடியாததொன்று)

ஆண்களுக்கும் பெண்கள் முடிதிருத்தும்

அண்மையில் ஓர் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பம்பாய், டெல்லி போன்ற நகரங்களில் ஆண்களுக்கென்றும் ஒப்பனை நிலையங்கள் பெண்களால் நடத்தப்படுகின்றன. இங்கு முகம் வெளுக்கச் செய்தல், முகப்ப ருக்கள் அகற்றுதல் முடி வெட்டு தல் மீசை ஒதுக்குதல் தாடி அலங்காரம் செய்தல் போன்ற பல ஒப்பனைப் பணிகள் செய்யப்ப டுகின்றன.

அனைத்தையும் செய்வது பெண்களே; படத்தில் பார்த்து ரசியுங்கள்.

தமிழகத்தில் கோவை போய் இருக்கிறீர்களா? கோயம்புத்தூராகிய அந்நகரம் மிக ரம்மியமானது. மதுரை, திருச்சியைவிட அழகானது. ஆனால் செல்வோர் குறைவு.

கலை இலக்கிய விஷயங்களில் கோவை மக்களின் ரசனை சிந்தனையோட்டம் அலாதி, தனி ரகம்.

இப்பொழுது அங்கே ஒரு இலக்கிய அமைப்பு பலரும் பாராட்டக் கூடிய ஒரு செயலில் இறங்கியுள்ளது.

* உலகத்தில் தமிழ் மொழி மூலம் சிறந்த சிறு கதைகளைப் படைக்கும் நூலாசிரியர்களுக்குப் பொற்கிழி.

* தமிழ் இலக்கியத்திற்குப் பல்துறையில் பல்லாண்டு காலம் தொண்டாற்றி வரும் முதுபெரும் எழுத்தாளர்களுக்குப் பாராட்டு.

'லில்லி தேவசிகாமணி நினைவு இலக்கியப் பரிசுத் திட்டம் என அந்த இலட்சிய முயற்சிக்குப் பெயர். ஒரு தனி மனிதரின் திட்டம். அதுவும் தன் அன்புத் துணைவியின் நினைவில் அமைப்பு. (திரு ஈ.எஸ். தேவசிகாமணி - திருமதி லில்லி)

சில ஆண்டுகளுக்கு முன் மொத்தம் 11 பேரினது சிறு கதை நூற்களுக்குப் பரிசு பாராட்டும். அதிலே இலங்கையர் ஒருவரும் பெற்றார் பாக்கியம்.

அவர் உடுவை தில்லை நடராஜா. கால் நூற்றாண்டு கடந்த கலை இலக்கியவாதி. இன்று புலிகள் நடமாடும் வடபகுதி ஊரான பவுரியா அரசு அதிபர். அதிஉன்னதமான அந்தப் பதவியிலே

இருந்தாலும் அந்தக் காலங்களில் ஒரு சாமான்யராக கொழும்பு வீதிகளிலே இலக்கிய வட்டத்தினரோடு நடை போட்டதை மறந்தவரல்லர். கூட வந்தவர்களையும் குறைத்து மதிப்பிட்டவரும் அல்லர்.

அவருடைய 'நிர்வாணம்' என்ற நூலையும், மற்றும் பத்துப் பேரினது நூற்களையும் (இனி புதிதாய் - எம்.வி. வெங்கட்ராம் அப்பாவின் சினேகிதர் - அசோகமித்திரன், கிணறு - ஆர் சூடாமணி, தாசன் கதைகள் - என் ஆர் தாசன், ஞானக் கூத்து - மா. அரங்கநாதன், பொய்முகம் - வாசந்தி, ஊமை உறவுகள் - அனுராதா ரமணன், நாற்காலியும் நான்கு தலைமுறைகளும் - திலகவதி, சாந்தகுமாரி - சா. கந்தசாமி, வெளியேற்றம் - பாவண்ணன்) கி. இராஜநாராயணன் தி.க.சிவசங்கரன் ஆகியோருடன் அமைப்பின் தலைவர் ஈ.எஸ்.தேவசிகாமணி, செயலர் செ.ஞானன் ஆகியோர் பரிசீலனை செய்து பதினொரு சிறுகதைத் தொகுதிகளும் சர்வதேச தரம் வாய்ந்தவை எனத் தெரிந்தெடுத்தனர்.

24-05-92ல் கோவை அலங்கார் நட்சத்திர ஓட்டலில் வைபவம். நம்மவர் நடராஜாவும் தரிசனம். அனைவருக்கும் 1501 ரூபா பணப் பரிசில். பொன்னாடை அவர்களுக்கான போக்குவரத்து வசதிகள், தங்குமிட வசதிகள் கன கச்சிதம். அத்தோடு முடிந்ததா, நிழற் படங்களின் அல்பம் வீடியோ பிரதிகள் அனைத்தும் அவர்களுடன் இணைந்தன.

இதே வைபவத்தில் மூத்த எழுத்தாளர்கள் 'ஐவருக்குப் (நாரண துரைக் கண்ணன், லா.ச. ராமாமிர்தம், தொ.மு.சி. இரகு நாதன், ஆர்.எஸ். ஜேக்கப், டாக்டர் வாசவன்) பாராட்டுக்களும் நடந்தன.

அனைத்திற்கும் மேலாக -

முகவரி தேவையாயின் இதோ:

லில்லி தேவசிகாமணி நினைவு இலக்கியப் பரிசுத் திட்டம்.

57, அரசுக் கலைக்கல்லூரி சாலை,

கோயம்பத்தூர். 641518

தமிழ்நாடு (இந்தியா)

ஒரு சதாவதானப் பாவலர்



'சதாவதானி' என்ற சமாசாரம் பெரியது. அதன் அர்த்தத்தைச் சொல்லவோ விளக்கவோ நிறைய இடம் தேவை. என்னை மன்னித்து இந்தக் குறிப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்.

சதாவதானம் - இறைவனால் மிகச் சிலருக்கு மட்டும் வழங்கப்படும் ஒரு திறமை. 'பல்கலைச் செல்வன்' 'பல்கலை வேந்தன்' என்ற பதங்களை எல்லாம் தாண்டிப் போகக்கூடியது. ஒருவர் ஒரு கணக்கைக் கேட்டால் உடனே விடை கொடுக்க வேண்டும். இன்னொருவர் பின்புறமிருந்து பூக்களை எறிவார். எத்தனை பூக்கள் எறியப்பட்டன என்று சொல்ல வேண்டும். மற்றொருவர் மணியொன்றைப் பலமாக அடிப்பார். அது எத்தனை தடவை அடிக்கப்பட்டதென்பதைத் தெரிவிக்க வேண்டும். ஓர் இலக்கியப் பிரியர் ஒரு பாட்டின் ஆரம்ப அடி அல்லது கடைசி அடியைக் கூறி பாட்டு முழுவதையும் பூர்த்தி செய்ய வேண்டினாலும் நிறைவேற்ற வேண்டும். இவையெல்லாம் ஒரே சமயத்தில் நடக்கவும் வேண்டும்.

இதற்கே 'அவதானம்' என்பர். இந்த வகையில் 31.7.1872 ல் பிறந்து, 1950ம் ஆண்டுவரை 78 ஆண்டுகள் வாழ்ந்த ஒரு பெரும் பாவலர் தமிழ் நாட்டில் கொடிகட்டிப் பறந்தார். அவரே செய்குத்தம்பிப் பாவலர்.

நாகர் கோயிலை அடுத்த இலங்கடையில் பிறந்து, 16வது வயதிற்குள் செய்யுள் இயற்றுவதில் திறமை பெற்று, அந்த வயதிலேயே 'பாவலர்' பட்டம் பெற்றவர். 19ம் வயதில் சென்னை வந்து 'சீறாப்புராணம்' போன்ற பல இஸ்லாமிய இலக்கியங்களைப் பதிப்பித்து 'கம்பராமாயண'த்திலும் ஆழமான பயிற்சி பெற்றவர். பிற்காலத்தில் 'சதாவதானி' எனப் போற்றப்பட்டார். இப்பெரும் பாவலரின் படமொன்றை இங்கு பிரசுரித்து அதனை இளையதலைமுறை இலக்கிய நெஞ்சங்களுக்கு அன்பளிப்புச் செய்வதில் நான் பெருமையும் பெருமிதமும் அடைகின்றேன்.

அறபு வழங்கிய கடன்



அறபு மொழியில் எண்கள் எழுதப்பட்ட முறை இது. ஆறாம் நூற்றாண்டில் (சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்) ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள இலக்கங்களை இப்படி எழுதினார்கள். எங்கே நல்லது கிடைத்தாலும் எடுத்துக் கொள்கிற ஆங்கில மொழி தனது எண்களின் வடிவங்களை அறபு மொழிச் சாயலில் அமைத்துக் கொண்டது.

தூங்கு மூஞ்சி மரமே...

உச்சியில் கிரீடம் வைத்தது போல் பரந்து தழைக்கும் பெரிய, அழகான மரம் தூங்கு மூஞ்சி மரம். இதன் மரப்பட்டை சொர சொரப்பாக இருக்கும்.

இந்த மரத்தின் இலைகள் கூட்டிலைகளாகவும், நீளமானவையாகவும் காணப்படுகின்றன. ஆனால் இலைகளுக்குக் காம்பு இல்லை. கிளை நுனியில் அடர்ந்து காணப்படுகிறது. சுற்றுப்புறத்தில் நிகழும் வாயுமண்டல நிலைக்கேற்ப இலைகள் தங்களுடைய நிலையைத் தாங்களாகவே மாற்றிக் கொள்ளக் கூடிய அபாரத் திறன் பெற்றவையாக விளங்குகின்றன. சூரிய வெளிச்சம் முழுமையான அளவில் இருக்கும் போது சிற்றிலைகள் நிமிர்ந்து நிற்கின்றன. சூரியனின் கதிர்கள் நுழைய இயலாதபடி இலைகள் அடர்ந்து நிழல் தருகின்றன. இரவிலும், போதுமான அளவு வெளிச்சம் இல்லாத சமயங்களிலும் மற்றும் மழை பெய்யக் கூடியது போன்ற சூழ்நிலை நிலவும் போதும் இலைகள் மடிப்படைந்த நிலையில் ஒரு பக்கமாக மூடிக்கொள்ளும் சக்தி பெற்றவை.

தூங்கு மூஞ்சி மரத்தின் அடியில் ஈரம் இருக்கிறது. இதனால் இந்த மரத்திற்கு மழை மரம் என்கிற சிறப்புப் பெயரும் உண்டு. மரக்கிளையின் நுனியில் இளஞ் சிவப்பு நிறப் பூக்கள் கூம்பு வடிவில் கொத்தாக இருக்கும். பூவின் நாது இழைகள் நீண்டு பார்ப்பதற்கு அழகான பட்டுக்குஞ்சம் போல இருக்கும்.

'ஞானக்கீரை' கேள்விப்பட்டிருக்கிறீர்களா

தூதுவளை நம்நாட்டுக்கீரை வகைகளுள் ஒன்று. 'தூதுணம்' என்பது இதன் இலக்கியப் பெயர். சித்த மருத்துவர்கள் ஓர் அரிய மூலிகையாகவே கருதுகின்றார்கள். அவர்கள் இதனை 'ஞானக்கீரை' என்று அழைக்கின்றனர்.

இக்கீரையின் பூவைப்பற்றித் தேரையர் என்ற சித்தர் சொல்லும் போது, 'முற்றும் தளர்ந்த கிழவனையும் வாலிபனாக்கும் சக்தி பெற்றது' என்கிறார்.

சாதாரணமாக எங்கும் பயிராகக்கூடிய கீரை, வறட்சியான பிரதேசங்களிலும் வேலிகளிலும் தன்னிச்சையாகவே வளரக் கூடியது. கத்தரிச்செடி கண்டிக்கிறீர்களா, அதன் இலையைப் போன்றதே இதுவும், இலைகள் சிறியவைகளாகவும் கனமாகவும் இருக்கும். கொக்கி போன்ற முட்கள் நிறைந்திருக்கும். எனவே எளிதில் பறித்துப் பயன்படுத்த முடியாது.

இருந்தாலும் உடல் நலம் விரும்புவோர் பயன்படுத்தித்தான் ஆக வேண்டும்.

அதுவும் இளமையிலே அநேக துர்ச் செயல்கள் காரணமாக முதுமைத்தன்மை அடைந்தவர்கள் இதைப் பயன்படுத்தினால் இளமைத் தோற்றத்தை மீண்டும் பெற்றுவிடலாம். கவர்ச்சியான கட்டான உடலமைப்புக் கிடைக்கும்.

தூதுவளைக் கீரையை அதே முட்களுடன் மண்சட்டியில் போட்டு நெய் கொண்டு வதக்கிவிட முள் எல்லாம் கருகிப் போய்விடும். பின் முறையாக சமைத்துண்ணலாம். கிழமைக்கொரு முறை சாப்பிட முடிந்தால் அமிர்த சஞ்சீவியோடு நீங்கள் உறவாடுகிறீர்கள் என்று அர்த்தம்.

இதன் பூவானது, தீயவழிகளில் சென்று தாதுவை இழந்த இளைஞர்களுக்கு இன்றியமையாதது. இந்தப் பூவோடு முருங்கைப் பூவையும் சேர்த்துக் கொண்டு இரண்டையும் உலர்த்தி எடுத்த பிறகு உரலில் வைத்து இடிக்க வேண்டும். இடித்ததை எடுத்துச் சர்க்கரையோ சீனியோ சேர்த்துக் காய்ச்சிய பசும்பாலில் கலந்து தொடர்ந்து அருந்தி வந்தால் தாது விருத்தி உண்டாகி, நரம்பு பலமடையும்.

இப்படி 24 நாட்கள் செய்துவர வேண்டும். தீய பழக்கங்களை அறவே நிறுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் பலன்.

ஏப்ரல் பௌர்ணமி

பர்மா தேசத்தில் ஒரு திரு விழா. ஒவ்வொரு ஏப்ரல் பௌர்ணமி தினத்தன்றும் ஒருவர் மீது ஒருவர் தண்ணீர் தெளித்து மகிழ்ச்சியுடன் விளையாடுவார்கள். இது வடநாட்டு ஹோலிப் பண்டிகை போன்றிருக்கும். நமது தமிழக மதுரையிலும் அதே நாளில் அதே போன்ற நீர் விளையாட்டு நடக்கிறது. பீச்சாங்குழலில் நீர் நிரப்பி ஒருவர் மீது ஒருவர் பீய்ச்சி அடித்து மகிழ்வர். அன்றுதான் அழகரும் வைகை ஆற்றில் இறங்குகின்றார். ஏப்ரல் பௌர்ணமியே சித்ரா பௌர்ணமியே சித்ரா பௌர்ணமி.

நாய்க்கடிக்கு நடவடிக்கை நான்கு

1. முதலில் உடனடியாக வெந் நீர் ஊற்றிக் கழுவ வேண்டும்.

2. அடுத்த சோப்பு நீரால் மூன்று, நான்கு முறை கழுவ வேண்டும்.

3. டிஞ்சர் ஆயோடின் மருந்திட்டு, மூடாமல் வைத்திருக்க வேண்டும்.

4. மருத்துவரை அணுகி தடுப்பு ஊசி போட்டுக் கொள்ள வேண்டும்.

ஒரு 345 வயது வள்ளல்!

வள்ளல் சீதக்காதியே - இலங்கை, இந்திய உறவின் இணைப்புப் பாலமே.

1991 புத்தாண்டில் காலை இளம் பொழுது உங்கள் அடக்கஸ்தலம் (கபுறடியில்) எனக்கு காத்து நின்றது. என் இளமைக்காலத்தில் தங்களைப் பற்றி அறிந்ததிலிருந்து என்று உங்கள் அடக்கத்தலத்தை (கபுறடியை)க் காண்பேன் என்றிருந்தேன். அது கீர்த்திமிகு கீழக்கரை இஸ்லாமிய - தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் பொழுது நிறைவாயிற்று. தங்கள் தற்போதைய வசிப்பிடத்தைக் காண நான் எடுத்துக் கொண்ட காலங்கள் மிக நீண்டவை. சுமார் 40 ஆண்டுகள்



தாங்கள் 110 கற்தூண்களைக் கொண்டு கட்டுவித்துள்ள கீழக்கரை 'கொத்வாப் பள்ளிவாச' (ஜும்ஆப் பள்ளி)லில் உங்களுக்கும் உங்கள் சகோதரருக்குமென ஒரு சிறு இடத்தை ஒதுக்கிக் கொண்டு அமைதி உறக்கம். உங்கள் இருவரது சிறு அறைகளும் பூட்டியபடி. அது யாருக்கும் திறக்கப்படுவதில்லை. மக்கள் தரிசனத்திற்கு விடப்படுவதில்லை.

என்றாலும் உங்கள் முதிய வயதில் (சுமார் 345) என்னை அருகில் அழைத்துப் பார்க்க விருப்புக் கொண்டீர்களோ என்னவோ, ஒரு கட்டளையிட்டதுபோல இந்த எழுத்தாளனுக்காக விசேடமாகக் கதவுகளைத் திறந்தார்கள். நான் கண்ட காட்சி என்ன?

எங்கெங்கோ, யார் யாருக்கோ அவர்களுடையது அடக்கத்தலங்கள் எப்படியெப்படி எல்லாமோ சர்வ அலங்காரமாக ஜொலி ஜொலிக்க தாங்களோ மணல் மேட்டிலே இரு மீசான் (அடையாளப் பலகை)களுடன் வாசம். ஏதோ பெயருக்கு மண் சரிந்துவிடாதபடி சிறு செங்கல் மதில். நாற்புறத்திலும் மாதுளை மரமும் மருதோன்றிச் செடியும் உங்களுக்கு காற்றிசைக்கின்றன.

சீதக்காதி பெருமகனே, தாங்கள் சம்பாதிக்காத பணமா, தாங்கள் அள்ளி வழங்காத பொற்காசுகளா, 'யார் தட்டினாலும் தட்டு வராமலே மார்தட்டி ஈந்து சிவந்த கைகளையுடைய', காலத்தால் அழியாத கொடை வேந்தரல்லவா தாங்கள்? அதுமட்டுமா? இன பேதம் காணாதவரல்லவா தாங்கள்? இராமநாதபரம் மன்னர் சேதுவுக்கு மதியூக மந்திரியாக இருந்தும், இந்திய - இலங்கை உறவுக்கு ஓர் இணைப்புப் பாலமாக (டச்சுக் காலத்தில்) திகழ்ந்தும் மொகலாய மாமன்னர் ஔரங்கஸேப்பின் ஆப்த நண்பராக இருந்தும் புகழ் பரப்பிய தங்கள், இப்பொழுது உறங்கிக் கொண்டிருக்கும் கோலம் என்ன கோலம்?

''என்னைப் புதைக்கும் இடத்தில் நான் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். நான் படுத்துறங்கும் மண்ணிலே நிறையச் செடி, கொடிகள் வளர வேண்டும். அதனை ஆடும் மாடும் உண்டு பசி போக்கிக் கொள்ள வேண்டும். நான் மழையில் நனைய வேண்டும். வெயிலில் காய வேண்டும். என்னை மிக எளிமையாக இருக்க விட்டு விடுங்கள்'' என்றீர்களாமே கொடைக் கோமானே. இந்த நெஞ்சு இன்றைக்கு யாருக்கு வரும், வள்ளலே.

இன்று உங்களை நேருக்கு நேர் கண்டால் யாருக்கும் கண்ணீர் துளிகள் சொட்டும். நானோ கண்ணீர் வெள்ளத்தில் நீந்தியவனாக வெளியே வர அடியெடுத்து வைத்தேன். அப்பொழுது பின்னாலிருந்து ஒருவர் என் முதுகைத் தட்டினார்.

''எழுத்தாளரே, பிடியுங்கள் இந்தப் பேனையை, இதைக் கொண்டுதான் தமிழர் - முஸ்லிம் ஒற்றுமை காத்த எங்கள் சீதக்காதி பெருமகனைப் பற்றி எழுத வேண்டும்.'' என்று கூறி திடுக்கிடச் செய்தார் உங்கள் அபிமானி ஒருவர். அன்னாரது பெயரை 'ஸதகதுல்லாஹ்' எனப் பின்னர் தெரிந்து கொண்டேன்.

செத்தும் கொடை கொடுத்தார் சீதக்காதி' எனத் தங்களைச் சொல்வார்களே சீதேவி, அதை இன்னும் மெய்ப்பித்த வண்ணமா? இச்சிறியவனின் சிந்தனை தடைபடுகிறது. கண்கள் மீண்டும் கலங்குகின்றன.

(இந்தக் கொடை வள்ளல் 1710-1720க்குள் ஒரு நாளில் பிரிந்தார் என வரலாறுகள் குறிப்பிடுகின்றன.)

வள்ளல் சீதக்காதி தோரணை வாயில்

1990 கீழக்கரையில் நடந்து முடிந்த அனைத்துலக இஸ்லாமிய தமிழாராய்ச்சி மாநாட்டில் திட்டமிடப்படி கட்டி முடிக்கப்பட்டுள்ள வள்ளல் சீதக்காதி தோரண வாயிலை தமிழ்நாடு நிதியமைச்சர் நெடுஞ்செழியன் திறந்து வைத்து சில ஆண்டுகள்.

ராமநாதபுரத்திலிருந்து கீழக்கரை செல்லும் சாலையில் கீழக்கரை நகருக்கு முன் இந்த தோரண வாயில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விழாவில் மணவை முஸ்தபா எழுதிய 'இளைஞர் இஸ்லாமியக் கலைக்களஞ்சியம்' என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தலைவலி மூளைக்கு வெளியே

மூளைக்கு வெளியேதான் ஒவ்வொரு மூன்று மணிநேரத் தலைவலி. மூளைப்பகுதிக்கு துக்கொரு தடவை வீடியோ வெளியில் ஓடிக்கொண்டிருக்கும் ரெக்காடருக்கு ஓய்வு தேவை.' இரத்தக் குழாய்களிலிருந்து இல்லையேல் சூட்டினால் பழுது தோன்றுகிறது. மூளையை பட வாய்ப்புண்டு. படம் தெளி வெட்டினால் அது வலியை வாகவும் தெரியாமல் போகும். உணராது.

வீடியோ - ஒரு முக்கிய குறிப்பு

செவிப்புலனற்றவர்களுக்கு ஒரு நல்ல செய்தி!

செவிப்புலனற்றுப் போவது ஒரு சோதனையும் வேதனையும் தான். அதிலும் இளமைக்காலத்தில் சின்னஞ்சிறு பாலகர் சிலருக்கும் கூட - ஏற்பட்டுப் போய்விடுவது உள்ளத்தை உருக்கி விடுகிறது.

இந்த அபாக்கியசாலிகள் தங்கள் குறைபாட்டை பிறருக்கு மிக எளிதாக அடையாளம் காட்டி விடுவார்கள். காதுகளில் கருவியை மாட்டி.



ஒரு வகையில் இந்தக் கருவியே அவர்களைத் தாழ்வுச் சிக்கலுக்காளாக்கி வாழ்நாளெல்லாம் பல துறைகளில் பின்தங்கவும் வைத்து விடுகிறது.

இப்பொழுது ஒரு மாபெரும் மாற்றல். செவிப்புலனற்றோரா கருவிகளை அணிந்து தங்களை காட்சிப் பொருளாக்கிக் கொள்ளாமல் சாதாரண மனிதர்கள் போல் வாழ்ந்து காட்ட இங்கிலாந்தில் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

படத்தில் உள்ள காதுகளிரண்டையும் பாருங்கள். உற்றுப் பார்த்தால் தான்ஒரு சிறு கருவி இருப்பதும் புரியும். இது காது கேட்கும் கருவிதான். ஆனால் பொருத்தப்பட்டிருப்பதே தெரியாது.

இதையும் விட இன்னொரு புரட்சி - கண்பார்வைக்கு அணியும் கண்ணாடியில் மிக மிக நாசுக்காக ஒரு செவிப்புலன் கருவி பொருத்தப்பட்டுள்ளது. நீங்கள் சொன்னால் ஒழிய செவிடர் என்பதை யாருமே அறிய மாட்டார் என்பதை யாரும் அறியமாட்டார்கள்.

இப்படியொரு கிராமம்

சவூதி அரேபியாவில் ஒரு வழக்கம் உங்கள் பலருக்கும் தெரிந்திருக்கும். தொழுகைக்கான பாங்கொலி கேட்கும் நேரத்தில் கடைகளை அப்படி அப்படியே போட்டு விட்டு பள்ளிவாசல்களுக்கு விரைவார்கள். திருட்டு என்பதே நடக்காது. அதைத் தூக்கி அடிக்கும் சங்கதி. பாரத நாட்டில் குஜராத்தில்

அங்கே - ஒரு சிறிய கிராமம். மொத்தம் 1200 மக்களே வாழ்கிறார்கள். இங்குள்ள கடைகளில் கடைக்காரர்களே இருக்க மாட்டார்கள். மக்கள் தாங்களாகவே தராசில் எடைபோட்டு எடுத்துக் கொண்டு அதற்குரிய காசையும் வைத்து விட்டுப் போய்விடுகிறார்கள். ஏன் இப்படி?

இக்கிராம மக்களது முக்கிய தொழில் விவசாயமும் மாடு வளர்ப்பும். பகல் நேரங்களில் பலரும் நிலங்களில் வேலை செய்யப் போக கடைகளைப் பார்த்துக் கொள்ள ஆட்கள் கிடையாது. அது திறந்தே இருக்கும். சின்னஞ் சிறுவர்கள் கூட தங்களுக்குத் தேவையான டொபிக்கும் மிட்டாய்க்கும் பணத்தை வைத்து விட்டுத்தான் எடுத்துச் செல்கிறார்கள்.

இது மட்டுமா? வீடுகளை யாரும் பூட்டி வைப்பதில்லை. சாராயம் குடிப்பதில்லை. யாராவது போதை உபயோகிப்பது தெரிந்தால் உடனே அவருக்கு 101 ரூபாய் அபராதம். சூதாட்டமாடினால் 51 ரூபாய் அபராதம். தெருவை அசுத்தம் செய்தால் 11 ரூபாய் அபராதம்.

'திருமணம்' அழைப்பிதழ் கிடைத்ததா?

மண்டை ஒடுகள் துணை

திருமரண அழைப்பிதழ்

கோபமுடையீர்,

நிகழும் அமங்களமான சாத்தான் வருடம், பிசாசு மாதம், எலும்புக்கிழமை, எமகண்டமும், விஷமும் கூடிய நாளில் அன்று இரவு அமாவாசையில் 12.00 மணிக்கு மேல் 2க்கும் இராகு காலத்தில்

ரத்தபுரி சுடுகாடு
ரத்த காட்டேரியின் மகனான
குடல் தின்னிக்கும்

எலும்பூர் சுடுகாடு
பிணந்தின்னி மகள்
ஒற்றைக் கன்னிக்கும்

திருமணம் முதிர்ந்த கோரப் பேய்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி திருமணம் எலும்பூர் சுடுகாட்டில் நடைபெறுவதால் அனைவரும் வந்து மரண மக்களை திட்டும் படியும் ஏசிக்குமாறு சிடுசிடுத்துக் கொள்கிறோம்

உங்களின் வெறுப்புள்ள
ரத்தக்களரி, ரத்தகாட்டேரி
ரத்தபுரி

அது போல் வெறுக்கும்
பிணந்தின்னி
உயிர்குடி கன்னி
எலும்பூர்
கற்பனை
க. காளிதாசன், வத்தலகுண்டு

ஆமாம், திருமரண அழைப்பிதழ் தான். திருமண அழைப்பிதழ் அல்ல. தமிழக 'தினமலர்' நாளிதழில் இதன் கீழ் நீங்கள் பார்க்கும் அழைப்பிதழைக் கண்டு விட்டு அசந்து போனேன். 'பயப்பட வேண்டாம். எல்லாம் ஒரு ஜோக்குக்குத்தான்' என்று கடைசியில் குறிப்பு வேறு. நீங்களும் பயப்படாமல் படித்துப் பாருங்கள். சிரிப்பு வந்தால் சிரியுங்கள். உடம்புக்கு ரொம்ப நல்லது.

காதலிப்பவர்களே, காதைக் கொஞ்சம் கிட்ட கொண்டு வாருங்கள்

ஓர் இளைஞனும், இளம் பெண்ணும் காதலிக்கலாம். ஆனால் பெற்றோர்களின் அனுமதிக்குப் பிறகே திருமணம் செய்து கொள்ள வேண்டும்.

பெற்றோர்கள் காதல் திருமணம் தொடர்பாக சொல்லக்கூடிய ஆட்சேபனைகளை ஒரேயடியாகப் புறக்கணிக்கக் கூடாது. அதைப் பற்றிக் காதலர்கள் அறிவு பூர்வமாகப் பரிசீலனை செய்ய வேண்டும்.

சில சமயம் பெற்றார்களின் ஆட்சேபனையில் நியாயம் இருக்கக்கூடும். அந்த நியாயத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் காதல் முறிவு ஏற்படக் கூடுமானால் காதலர்கள் அதைச் சகித்துக் கொள்ள வேண்டும்.

திருட்டுத்தனமான காதல் கூடாது.

காதலன் அல்லது காதலி எவ்வளவு மோசமான ஒழுக்கக் கேட்டுடன் இருந்தாலும் காதலித்து விட்டதால், காதலை மாற்ற முடியாது என்று கூறுவது முட்டாள் தனம். அது அவர்கள் இருவரது பிற்கால வாழ்வைப் பெரிதும் பாதிக்கும்.

பெற்றோர்களை ஒரேயடியாக அலட்சியப்படுத்திப் புறக்கணித்துவிட்டு தாங்களாகவே திருமணம் செய்து கொள்ளவதைக் காதலர்கள் முடிந்த மட்டில் விலக்க வேண்டும்.

பெற்றோர்கள் குருட்டுத்தனமாக, அறிவுக்குப் புறம்பாக சாதி, மதம், வசதியைக் காரணம் காட்டி முட்டாள் தனமாகத் திருமணத்திற்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள் என்ற நிலையிருந்தால் மட்டுமே பெற்றோர்கள் இல்லாத நிலையில் திருமணம் செய்து கொள்ளக் காதலர்கள் முனைய வேண்டும். பிறகு பெற்றோர்களுடன் சமரசம் செய்துகொண்டு அவர்களது ஆசியை, ஆதரவைப் பெறக் காதலர்கள் தீவீர முயற்சி செய்ய வேண்டும்.

வைத்த கண் வாங்காமல் பார்க்க வைக்கும் படம்

இறைவன் படைத்தமனித அவயவங்களில் கண் பிரதானமானது. அதற்கு இன மத பேதம் பார்க்கத் தெரியாது. மனம்தான் அந்த வேலையைச் செய்கிறது. இங்கே வெளியாகியுள்ள படத்தைக் கண் கொட்டாமல் பாருங்கள். வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டேயிருப்பீர்கள். அப்படி இப்படிப் பார்வையைத் திருப்ப மாட்டீர்கள். ஏன்? நிழற்படம் அத்தனை அருமையாக இருக்கிறது. படம் பிடிக்கப்பட்ட இடம் அற்புத அழகைக் கொண்டதாக உள்ளது. எங்கே உள்ளது இது? நம்பவே முடியாத இடம் அது; சோவியத் நாட்டில் உஷ்பெகிஸ்தான் பிரதேசத்தில் சமர்கந்து என்ற இடத்தில் அமைந்துள்ள இமாம் புஹாரி (ரஹ்) அவர்களின் 'சியாரத்து' (சமாதி)தான். நிழற்படத்தில் அழகை அள்ளிக் கொட்டுகிறது. காட்சியைத் தன் விலை உயர்ந்த கமெராவில் அடக்கிய நொவாஸ்தி செய்தி நிறுவனத்து என். உத்தர்பெக்கோ நினைவில் நிற்பார் நெடுங்காலம்.

(ஓர் அடிக்குறிப்பு - இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் இஸ்லாமிய மார்க்க மேதைகளில் ஒருவர். அன்னாரது 'சஹீஹ் ஹதீஸ் கிரந்தம்' முஸ்லிம்களிடையே முக்கிய ஸ்தானத்தில் உள்ளது)

தமிழ் இலக்கியங்களில் இன்றைய மருத்துவம்

மருத்துவக் கலையில் தமிழர்கள் வல்லுநர்களாகத் திகழ்ந்தனர் என்பதைப் பண்டைய தமிழ் இலக்கியம் பறைசாற்றும்.

உடலில் ஒரு கட்டி ஏற்பட்டால் அதனை எவ்விதம் குணப்படுத்துவது என்பதற்கு அருமையானதொரு மருத்துவம் மொழிகின்றார் கம்பர்.

'உடலிடைத் தோன்றித் தொண்டையறுத்து அதன் உதிரம் ஊற்றிச் சுடலுறச் சுட்டுவேரர் மருந்தினால் துயரன் தீர்வர்'

(கம்பராமாயணத்தில் யுத்த காண்டப் பாடல் 73)

உடலில் ஏற்பட்டகட்டியின் நச்சுநீர் பரவி உடல் முழுவதையும் கெடுத்து விடாதபடி அதனை அறுத்து, அதிலுள்ள சீழைவடியச் செய்து, அ°து இருந்த இடம் நீங்கும்படி சூட்டுக் கோலால் சுட வேண்டும். அக்கட்டி நச்சுத் தன்மையை நீக்க வேறோரு மருந்தினையும் இட்டுத் துன்பம் போக்குவர் அறிவுடையோர் என்கிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பர்.

இதே முறையைத்தான் இன்றைய மருத்துவர்களும் செய்கின்றனர்.

சூட்டுக்கோலால் சுடுதற்குப் பதிலாக லேசர் கதிர்களால் சுடுகின்றனர்.

திருக்குறளிலுள்ள 'மருந்து' என்ற அதிகாரத்தில் நோய்கள் வருவதன் காரணங்களையும் அது வராது தடுக்கும் முறைகளையும், அது வந்தால் தவிர்க்கும் வழி வகைகளையும் பற்றிய செய்திகள் ;ரப்படுகின்றன.

'நோய்நாடி நோய்
முதல்நாடி
அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பைச்
செயல்'

என்பது வள்ளுவர் பெருமானின் கூற்று. நோய் வருவதன் காரணத்தையும், நோய் இன்னதென்பதையும் ஐயமறத் தெளிந்து மருந்து செய்தல், உதிரங்களைதல், அறுத்தல், சுடுதல் முதலிய முறைகளை மேற்கொண்டு அந்நோயைப் போக்க வேண்டும் என்பது பண்டைய மருத்துவ முறையாகும். இதனையொட்டியே இன்றைய மருத்துவ முறையும் உள்ளது.

✸ டாக்டர் நா.மீனாட்சி சுந்தரம் 'கலைக்கதிர்' சஞ்சிகையில் தெரிவித்துள்ள தகவல்களின் ஒரு பகுதி - நன்றி.



இளமை திரும்ப இஞ்சி-சுக்கு-கடுக்காய்

பழங்காலத் தமிழகத்தில் தேரையர் என்பவர் புகழுக்குரிய மருத்துவச் சித்தர்.

இன்றைக்கும் இவர் மருத்துவத்திற்குத் தனிப் பெருமை உண்டு.

பாருங்கள், மிக இலகுவாகக் கிடைக்கூடிய இஞ்சி, சுக்கு, கடுக்காய் மூன்றையும் கொண்டு நோய் இல்லாமலும், இளமைப் பொலிவோடும் வாழலாம் என்று அவர் காட்டியிருக்கிறார்.

இஞ்சியைக் காலை நேரத்தில் சிறிது உட்கொள்ள வேண்டும்.

சுக்கை (காய்ந்த இஞ்சி) பொடி செய்து கொண்டு, அல்லது நசுக்கி வெந்நீரில் போட்டு நண்பகலில் உட்கொள்ள வேண்டும் (வடிகட்டினால் நல்லது)

கொட்டை நீக்கிய கடுக்காயை மாலையில் உட்கொள்ள வேண்டும். வாயில் அடக்கிக் கொண்டு உமிழ்நீரை விழுங்கலாம்.

- இப்படி நான்கு நாட்கள் முறையாகச் சாப்பிட்டாலே கூட தளர்ச்சியடைந்தவர்கள் நிமிர்ந்து விடுவார்கள் என்கிறார் தேரையர்.

அடுத்த நூற்றாண்டுக்குத் தயாராவோம்

மறைந்த பிரதமர் ராஜிவ் காந்தி மூலம் பிரபலமான ஒரு சொற்றொடர் - 'அடுத்த நூற்றாண்டுக்குத் தயாராவோம்.'

அது பிறப்பதற்கு இன்னும் ஐந்து ஆண்டுகளே உள்ளன. நுழைவாயில் - அறிவியல் தொழில்நுட்ப அறிவும், அறிவியல் மனப்பான்மையுமே.

நாம் சிறுகச் சிறுக அதற்குப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டியவர்கள்.

புராண காலத்தைப் போல, இளமையைத் திரும்பப்பெறுதல் -

பசியைப் போக்க ஆய்வுகூடத்தில் உடனடியாக விளையும் அரிசி, கோதுமை

தீராத தலைவலிக்கும் பக்கவாதத்திற்கும் அருமருந்துகள்

இரத்தக் காயம் ஏற்படாதவகையில் லேசர் கதிர்கள் மூலம் அறுவைச் சிகிச்சைகள்.

அழகான அங்க லட்சணங்களுடன் கூடிய குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளுதலுடன் டெஸ்ட் டியூப்கள் மூலம் குழந்தைகள் பிறக்கும் வசதி.

'கிரையோஜினிக்' ஃப்ரீஸிங்' முறைப்படி கருவை உறை யவைத்து பிள்ளைப்பேற்றைத் தள்ளிப் போடும் வசதிகள் அனைத்தும் மலியும் அடுத்த நூற்றாண்டில்.

'ரிமோட் கண்ட்ரோல்' (தொலைக் கட்டுப்பாட்டு முறை) என்று இப்போதே பேசிக் கொள்கிறோமே, அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் சாதாரண பொருளாக மக்கள் மத்தியில் மாறிவிடும்.

மாவரைத்தல் முதற்கொண்டு துணி துவைத்தல், சுத்தப்படுத்தல், அடுப்புகளைப் பயன்படுத்தல் வரை கம்பியூட்டரும் ரோபோவும் போட்டி போட்டு சேவகம் புரியும்.

கல்வி முறையானது, கம்ப்யூட்டர் (கணனி) ஆதிக்கத்தால் நவீனமடைந்து புதுப் பொலிவு பெற்றுவிடும். அப்போது நம் வீட்டிலிருக்கின்ற சிறுவர் சிறுமியர் (எட்டு - ஒன்பது - பத்து

வயதுடையோர்) அதை 'ஆளத்' தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். மனப்பாடம் செய்யும் கல்விமுறை இருக்கவே இருக்காது. மாணவருக்குத் தோழனாக கணனி ஆகிவிடும். கல்வி கற்போரின் தொகை கூடும்.

சக்தித் துறையிலோ, சூரியனிலிருந்து நேரடியாக மின்சாரத்தைப் பெற்று 'ஆப்டிக்கல் பைபர்' மூலமாக வீட்டினை ஒளிமயமாக்கும் சாத்தியக்கூறுகள் ஏற்படும்.

குற்றத் துறையை எடுத்துக் கொண்டால், அதி நவீன பாதுகாப்பு முறைகளின் மூலம் குற்றங்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விடும்.

உடைகள் விஷயத்தில் எளிதாகப் பராமரிக்க கூடிய துணிகள் வந்துவிடும். 'அயர்ன்' செய்வது அப்போது பழங்கதையாகும்.

அண்டார்டிக் பெருங்கடல் பகுதிகளில் மனிதர்கள் வாழப் பழகிக் கொள்வார்கள்.

கண்ணாடிக் கூடுகளின் கீழ் கம்ப்யூட்டரால் கட்டப்பட்ட வீடுகளில் மனிதர்கள் வீடமைத்து வாழ்வார்கள்.

இப்போது தீராத நோய்களாக உள்ள புற்றுநோய்க்கும் எயிட்சுக்கும் மருத்துவர்களை மருந்துகளை கண்டுபிடித்து விடு வார்கள்.

ஆக - அடுத்த நூற்றாண்டுக்கு இப்பொழுதிலிருந்தே தயாராவது அவசியத்தின் அவசியம்.

('அடுத்த நூற்றாண்டுக்குத் தயாராக' அறைகூவல் விட்ட பிறகு அடுத்து வந்த சிந்தனை: உலக இளைய தலைமுறைப் 'பிஞ்சு'களைப் பற்றி. அதற்கும் ஒரு சில வரிகளை எழுதலாமா என்று யோசித்து விட்டு வயது போன பார்க்கர் தளர்வதைக் கண்டு இரங்கி, ஓர் அழகிய படத்தை மட்டுமே இங்கே வழங்கியிருக்கின்றேன். குஞ்சு ஒன்றை உள்ளங்கையில் வைத்திருக்கும் பிஞ்சு 21ம் நூற்றாண்டு நங்கையாக மாறும் பொழுது அவள் உலகத்தைப் பார்க்கும் பார்வை படத்தில் உள்ளது போலவே இருக்குமா?)

இலங்கையில்
இவர்கள் செய்த
சாதனையை
இன்னும் எவரும்
முறியடிக்கவில்லை!

(விபரம் உள்ளே...)